# தூறல்

இனிமையானது...

Jan - Mar 2015
சாரல் 06:01



## பூவுக்குள் ஒளிந்திருக்கும்
- ஹலோ மோகன்



## கடன் வாங்கலாமே...



## பெண்களுக்கு மட்டும்...



## ஆசியாவின் கவர்ச்சியான ஆண்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புறுதியின் பயனைக் காலம் சொல்லும்

# iNFORCE LIFe Financial Services Inc.

A Division of iNFORCE Group of Companies

## Insurance Solutions for

**LIFE | HEALTH | GROUP**




**WANT TO BECOME A FINANCIAL ADVISOR?**
**JOIN OUR FREE CLASSES TO GET YOUR LICENCE FAST!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THOORAL

P.O. Box 4040
McCowan Square PO, Scarborough,
ON, M1H 0A4

Tel: 416-451-3177
Web: www.thooralonline.com
Email: editorial@thooralonline.com



Chief Editor
**Rajmogan Selliah**

Managing Editor
**S. Shiva**

Sub Editors
**Guru**
**Kirishanthi Mathivathanan**
**S. Thananjayan**
**Mithran**

**Design & Concept**
**Touch Media Inc.**

**Advertisements**
**Touch Media Inc**

Disclaimer: All rights reserved. The opinion/ views expressed by the contributors are their own and do not reflect those of the publisher.
The publisher assumes no responsibility of any kind.


## தூறலில் நனைந்திட முன்...


புறநானூறு .................................... 10

ஹலோ மோகன் .......................... 14

நீல் ஆம்ஸ்ரோங் ........................ 18

குரு அரவிந்தன் ........................ 21

மாத்தியோசி ............................ 35

விண்மீன் சிறுவர்கள் ................. 36

Dr. Paul .................................... 43

Tension .................................... 48

Bill Gates ................................. 52

Google ...................................... 54

Employment Equality .............. 70

குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள் .... 76


40 மெய்பொருள்


75 நம்மவர் பக்கம்


64 2014


93 Sports



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று முக்கியமான சவால்கள்

நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இன்னொரு ஆண்டுக்குள் நுழைந்திருக்கிறோம். கடந்த ஆண்டுகளில் நாம் செய்த சாதனைகள், மகிழ்வான விடயங்கள் மற்றும் சந்தித்த துயரங்கள் யாவற்றையும் மனதில் சுமந்துகொண்டு ஆரோக்கியமான புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைத்திருக்கிறோம்.

முன்னைய காலங்களில் ஆண்டுகள் அடிக்கடி வருவதுபோல் தோன்றுவதில்லை. ஒரு ஆண்டு என்பது மிகப்பெரிய இடைவெளி கொண்ட ஒரு காலமாக இருந்தது. இப்போதெல்லாம் ஆண்டு மாற்றங்கள் எல்லாம் அடிக்கடி வருவது போல் தோன்றுகின்றது. தொழில்நுட்பத்தின் அபரிதமான வளர்ச்சி எமது நேரங்களையெல்லாம் கட்டுப்படுத்தி காலங்களைச் சுருக்கிவிட்டிருக்கின்றது. ஆண்டுகள் எல்லாம் மாதங்களைப் போலவும், மாதங்கள் எல்லாம் நாட்களைப் போலவும் கடந்து சென்றுகொண்டிருக்கின்றன. இது 'நேரம் பொன்னை விடப் பெறுமதியானது' என்பதையும் அதில் நாம் ஒரு நிமிடத்தையேனும் வீணாக்கக் கூடாதென்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்த ஆண்டிலும், நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் ஏராளமாக இருக்கின்றன. கடந்த ஆண்டின் சவால்களில் பெற்ற வெற்றி - தோல்விகளில் கிடைத்த பாடங்களின் அத்திவாரங்களில் நின்று கொண்டு புதிய ஆண்டின் சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். இந்த ஆண்டில் மூன்று மிக முக்கியமான சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இலங்கையில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களைப் பயன்படுத்தி, எப்படி சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கத்தைக் பெற்றுக்கொண்டு தமிழ் மக்களின் அடிப்படை உணர்வுகளையும், அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வது என்பதே முதலாவது சவாலாகும்.

இரண்டாவது சவால், புலம்பெயர் தேசங்களில் உள்ள அரசியல் பிளவுகளையெல்லாம் முறியடித்து, ஓர் அணியில் ஒன்று திரண்டு எமது தேசத்தைப் பலப்படுத்தும் ஒரு மாபெரும் சக்தியை உருவாக்குவதாகும். இது நடைமுறைச் சாத்தியமாகுவதற்கு சமுதாய ரீதியிலான விழிப்புணர்வுகளும், கட்டுப்பாடுகளும், அதிகாரங்களும் தேவைப்படுகின்றன.

மூன்றாவது சவால், இங்கு தடம் பதித்துவரும் இளைய சமுதாயத்தினரிடையே தமிழின் இருப்புக்களையும், தொன்மைகளையும் உறுதி செய்து கொள்வது ஆகும். இதில் தமிழ்மொழிக் கல்வித் திட்டங்கள், நாகரிகமான புலம்பெயர் அரசியல், தமிழ் உயர்நிலைக் கல்விநெறி என்று பல விடயங்களைக் கூறமுடியும். புதையுண்டு கிடக்கும் சரித்திர ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதும் அவற்றைப் புனர்நிர்மாணம் செய்து விஞ்ஞான ரீதியான சிந்தனைகளை வெளிப்படுத்துவதும் இளையோரின் தோள்களிலேயே சுமத்தப்பட்டுள்ளது.

இந்த மூன்று சவால்களும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கப்பட முடியாதவையாகவும், இணைந்து செயற்படுத்தப்பட வேண்டியவையாகவும் உள்ளன. கடந்த காலங்களில் நடந்தேறிய எதிர் விளைவுகளாலும், அதனோடு தோன்றிய பக்கவிளைவுகளாலும் நமது தேசம் பற்றிய சிந்தனைகளெல்லாம் சிதறுண்டு கிடக்கின்றன. சமுதாயத்திற்குள் புரையோடியிருக்கும் பிரிவினைவாத அரசியல் இன்றி, உலகத் தமிழ் இனவிடுதலைக்கான பயணத்தின் உண்மையான ஆரம்பமே இந்த சலால்களின் அடிப்படையாக உள்ளது.

கட்டுக்கோப்புடன் இருக்க வேண்டிய பலம்மிக்க தமிழ் இனம், எதிரியின் திட்டமிடல்களால் - இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கும் அழிந்து கொண்டிருக்கின்றது. எமது அரசியல் நிர்வாகத்தைச் செயற்படுத்துவதற்கான சிறு பொறி ஒன்று தனி மனித மட்டத்தில் மேம்படும் போது எமது கனவுகள் மெய்ப்படும். அனைத்துப் பிரச்சனைகளையும் தலைமேல் சுமக்கும் எமது பொறுப்புணர்ச்சியும், வாழ்க்கையில் நாம் கொண்டிருக்கும் பிடிப்பும், மங்கிவிடாத தமிழ் உணர்வும், வெகுண்டெழுந்து போராடும் குணமும் எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையை தொடர்ந்து கொடுக்கின்றன.

எதிர்வுகளைத் தாண்டிய யதார்த்த சூழலின் ஆழமான வெளிப்பாடே ஒரு இனத்தின் எதிர்கால உறுதி நிலையின் அடிப்படை அலகாக அமையும். இதுவே சிதறிப் போயிருக்கும் உலகத் தமிழர்களின் தனித்துவமான சிந்தனைகளை வலுப்படுத்தி ஒரு தூய அரசியல், பொருளாதார அமைப்பின் தேவையை உறுதி செய்யும்.

பிரதம ஆசிரியர்

editor@thooralonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூறல்
இனிமையானது...

# தூறல் காலாண்டு சஞ்சிகை உங்கள் இல்லம் வந்துசேர வேண்டுமா?




தூறல் காலாண்டு சஞ்சிகை தவறாமல் உங்கள் இல்லம் வந்துசேர சந்தாதாரராக இணைந்துகொள்ளுங்கள்.

## வருடாந்த சந்தா $ 25.99 மட்டுமே.

உங்கள் சந்தாப் பணத்ததை **"Thooral"** என்ற பெயருக்கு **Money Order** ஆகப் பெற்று பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



**P.O. Box 4040**
**McCowan Square PO, Scarborough, ON, M1H 0A4**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vasuki Devadas Law Office

**For all your legal needs**

- Real Estate – வீடு, வர்த்தகநிலையம் வாங்குதல் - விற்றல்
- Family Law – குடும்பச் சட்டம்
- Immigration Law – குடிவரவுச் சட்டம்
- Employment Law – ஊழியச் சட்டம்
- Business Law – வியாபார, வர்த்தகச் சட்டம்
- Small claims – சிறுகோரிக்கைகள்
- Last wills and estate planning – உயில் சம்பந்தமானவிடயம், இறுதிவிருப்பஆவணங்கள் தயாரித்தல்
- Power of Attorney , Affidavits, Statutory Declaration – சத்தியப் பத்திரங்கள், தத்துவப் பத்திரங்கள் தயாரித்தல்
- Notarization & Commissioning – அத்தாட்சிப்படுத்துதல்



**Vasuki Devadas**

Barrister, Solicitor and Notary Public

## Vasuki Devadas Law Office

1415 Kennedy Road, Unit 3 (Next to RBC Bank @ Kennedy & Ellesmere) Toronto, ON, M1P 2L6.

Call: 416-266-1234 | Email:vasuki@vdlaw.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN சுவை!

## அந்தமான் சிறைச்சாலை





இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில் நடைபெற்ற மிகப்பெரிய கொடுமைகளில் ஒன்று தேசபக்தர்களை நாடுகடத்தியதாகும். நாடு கடத்தப்பட்ட அவர்கள் அந்தமானில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிப்பாய்க்கலகம் என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்டம் 1857ம் ஆண்டு நடைபெற்றது. இதில் பங்கேற்ற ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்களை பிரிட்டிஷ் அரசு அந்தமான் தீவிற்கு அழைத்துச் சென்று அங்கேயே விட்டு விட்டனர்.

வனாந்தரக் காட்டில் அனாதையாக விடப்பட்டவர்கள் வனவிலங்குகளுக்கு இரையாவார்கள் என்றும், பழங்குடி மக்களால் கொல்லப்படுவார்கள் என்றும் எதிர்பார்த்தனர் ஆங்கிலேயர்கள். பல கைதிகள் செத்து மடிந்தனர். பல கைதிகள் இந்தோனேசியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர்.

எஞ்சியிருந்த கைதிகளை பார்வையிட அன்றைய கவர்னர் ஜெனரல் தனது மனைவியுடன் அந்தமானுக்குச் சென்றார். வெள்ளையர்கள் மீது கட்டுக்கடங்காத வெறுப்புடனிருந்த 'காசிம்' என்ற இஸ்லாமிய வீரர் ஜெர்னல் மீது பாய்ந்து கழுத்தை நெரித்துக் கொன்றார்.

இந்த நிகழ்வே அந்தமான் தீவில் சிறைச்சாலை கட்டப்படுவதற்கு காரணமாக அமைந்தது. அந்தமான் செல்லுலார் சிறைச்சாலை கட்டுமானப்பணி 1896ம் ஆண்டு தொடங்கி 1906ம் ஆண்டு நிறைவு பெற்றது. இதில் 10,000 அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். வகாபி இயக்கம், மாப்ளா இயக்கம், ராம்பா இயக்கம், கதார் புரட்சி போன்ற புரட்சிகர அமைப்புகளின் தலைவர்கள் இதில் முக்கியமானவர்கள். அந்தமான் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகள் பல சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள். காற்றோட்டமோ, வெளிச்சமோ இல்லாத காரணத்தால் பல கைதிகள் மரணமடைந்தனர்.

இவ்வளவு சித்திரவதைகளுக்கும் சாட்சியான அந்த சிறைச்சாலை அந்தமானில் இன்றும் அப்படியே காட்சியளிக்கிறது.

## செல்ஃபி



செல்.்.பி எனப்படும் தன்னை தானே புகைப்படம் எடுக்கும் முறை 175 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் பிலாடெல்பியர் நகரில் ராபர்ட் கார்னெலியஸ் என்பவர் கடந்த 1839ம் ஆண்டிலேயே முதல் 'செல்.்.பி' எடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது. அதாவது 175 ஆண்டுகளுக்கு முன்பே இந்த செல்.்.பி அறிமுகமாகியுள்ளதாக தெரிகிறது. ராபர்ட் கார்னெலியஸ் என்ற அந்த நபர் தனது தந்தையின் கடையை 'செல்.்.பி' முறையில் படம் எடுத்துள்ளார். மேலும் அந்த புகைப்படத்தின் பின்புறத்தில் 'முதல் செல்.்.பி' என எழுதி வைத்ததாகவும் கூறப்படுகிறது.

## அரிய தகவல்கள்...

1. போனை எடுத்ததும் பேச கிரகாம் பெல் உத்தேசித்த வார்த்தை 'Ahoy!' என்பதே ஆனால் எடிசன் 'Hello' என்பதை பரிந்துரைத்தாராம்!
2. நத்தை அதன் கண்ணை இழந்துவிட்டால் கொஞ்ச நாளில் புது கண் உருவாகிடும்.
3. புரூஸ் லீ அரிசிகளை மேலே தூக்கி போட்டு அவற்றை சண்டைக்கு நடுவே Chop Stick இனால் பிடிப்பாராம்!
4. ஐரோப்பிய கண்டத்தில் பாலைவனமே கிடையாது!
5. உலகம் முழுக்க 173 மில்லியன் பேர் "ஜி மெயில்" வசதியை பயன்படுத்துகிறார்கள்!
6. உண்மையில் ராவணனுக்கு பத்து தலைகள் கிடையாது! இலங்கையை பத்தாக பிரித்து பத்து கிரீடங்களுடன் ஆண்டமையால் பத்து தலை ராவணன் என்பார்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vasuki Devadas Law Office

**For all your legal needs**

- Real Estate – வீடு, வர்த்தகநிலையம் வாங்குதல் - விற்றல்
- Family Law – குடும்பச் சட்டம்
- Immigration Law – குடிவரவுச் சட்டம்
- Employment Law – ஊழியச் சட்டம்
- Business Law – வியாபார, வர்த்தகச் சட்டம்
- Small claims – சிறுகோரிக்கைகள்
- Last wills and estate planning – உயில் சம்பந்தமானவிடயம், இறுதிவிருப்பஆவணங்கள் தயாரித்தல்
- Power of Attorney , Affidavits, Statutory Declaration – சத்தியப் பத்திரங்கள், தத்துவப் பத்திரங்கள் தயாரித்தல்
- Notarization & Commissioning – அத்தாட்சிப்படுத்துதல்



**Vasuki Devadas**
Barrister, Solicitor and Notary Public

## Vasuki Devadas Law Office

1415 Kennedy Road, Unit 3 (Next to RBC Bank @ Kennedy & Ellesmere) Toronto, ON, M1P 2L6.

Call: 416-266-1234 | Email:vasuki@vdlaw.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே அதிகமான கொலை செய்த மனிதர்களை தெரியுமா?



உலகிலேயே அதிக கொலைகள் செய்த ஆண் இந்தியாவைச் சேர்ந்த பெஹ்ராம் (Thug Behram) என்பவர் ஆவார். இவர் கடந்த 1790-1840 ஆண்டுகளுக்கு இடையே 931 மனிதர்களை எந்த ஒரு ஆயுதமின்றி வெறும் கை குட்டையைப் பயன்படுத்தி கொன்றுள்ளார்.

இந்த தொடர் கொலை வழக்கில் 1840 ஆம் ஆண்டு பெஹ்ராம் தூக்கிலிடப்பட்டார்.



இதே போல் உலகிலேயே அதிக மக்களை கொன்ற பெண் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த கவுண்டஸ் எலிசபெத் பாதோரி (Countess Elizabeth Báthory) என்பவர் ஆவார். இவர் கொலை செய்த மக்களின் எண்ணிக்கை 612 ஆகும். இவரின் கோபம் இளம் பெண்களின் மீது தான் (பெண்களை கொன்று அவர்கள் ரத்தத்தில் குளித்ததாகவும் தகவல்கள் உண்டு).

# எந்த ஒரு நாட்டிடமும் கடன் பெறாத நாடு!



உலகில் எந்த ஒரு நாட்டிடமும் கடன் பெறாத நாடு ஒன்று உண்டா என்பதில் அனைவருக்கும் சந்தேகம் வருவது உண்மை, ஆனால் எந்த ஒரு நாட்டிடமும் கடன் பெறாது நாடு ஒன்று உண்டு.

- 1951-ல் உலகின் மிக ஏழை நாடாக இருந்தது லிபியா.
- நேட்டோ படைகளின் தாக்குதலுக்கு முன்பு வரை மிகவும் வசதியான சூழலில் வாழும் மக்களை கொண்ட ஒரே ஆப்ரிக்க நாடு லிபியா.
- லிபியாவில் வீடு ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமையாக கருதப்பட்டது.
- மின்சாரம் அனைத்து மக்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.
- மருத்துவமும் கல்வியும் இலவசமாக வழங்கப்பட்டது.
- மக்கள் தாங்கள் விரும்பும் கல்வியோ மருத்துவமோ லிபியாவில் கிடைக்காத பட்சத்தில் வெளிநாடு சென்று பெறுவதற்கு அரசே பொருளுதவி செய்தது.
- வங்கிகளில் கடன் கோருபவர்களுக்கு வட்டியில்லா கடன்களாக மட்டுமே கொடுக்கப்பட்டது.
- விவசாயம் செய்ய விரும்புபவர்களுக்கு இலவசமாக நிலமும் மற்றும் எல்லா உதவிகளும் இலவசமாக அரசே செய்தது.
- உலகில் யாரிடமும் கடன் படாத நாடு லிபியா!

# பரம்பரை

நாம் ஏதாவது ஒரு விடயத்தை பற்றி பேசும் பொழுது, பரம்பரை பரம்பரையாய் இருக்கிறது என்று சொல்வதுண்டு...

பரம்பரை என்றால் என்ன? வழி வழியாக என்று சொல்லலாம் என்றாலும், "தலைமுறை தலைமுறையாக" என்பதே உண்மை பொருள் ஆகும்.

பரம்பரை என்பது முந்தைய தலைமுறையை குறிக்கும் சொல்.

பரன் + பரை = பரம்பரை

- நமக்கு அடுத்த தலைமுறைகள்:


நாம்
மகன், மகள்
பேரன், பேர்த்தி
கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேர்த்தி
எள்ளுப் பேரன், எள்ளுப் பேர்த்தி

- நமக்கு முந்தைய தலைமுறைகள்:

நாம் - முதல் தலைமுறை
தந்தை, தாய் - இரண்டாம் தலைமுறை
பாட்டன், பாட்டி - மூன்றாம் தலைமுறை
பூட்டன், பூட்டி - நான்காம் தலைமுறை
ஓட்டன், ஓட்டி - ஐந்தாம் தலைமுறை
சேயோன், சேயோள் - ஆறாம் தலைமுறை
பரன், பரை - ஏழாம் தலைமுறை

ஒரு தலைமுறை - சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால்,
ஏழு தலைமுறை - 480 வருடங்கள்...
ஈரேழு தலைமுறை - 960 வருடங்கள்...
(கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்)
ஆக, பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு, பதினான்கு தலைமுறையாக என்று பொருள் வரும்.

# யார் இந்தக் குழந்தை



85ம் பக்கத்தில் பார்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Toronto KIA

NO Credit, BAD Credit, NEW Credit, NEW Comer, NO Problem



KIA தரமான புதிய மற்றும் பழைய வானகங்களைப் பெற்றுக்கொள்ள.

# Toronto HONDA



HONDA தரமான புதிய மற்றும் பழைய வானகங்களைப் பெற்றுக்கொள்ள.



ACURA

ACURA தரமான பாவித்த வானகங்களைப் பெற்றுக்கொள்ள.



தொடர்பு கொள்ளுங்கள்..

**Akilan Kanagaratnam**
Account Executive
Cell: 647-865-4943

Tel : 416-421-9000
Fex: 416-421-2224
Email:akilank1975@gmail.com

Toronto Kia, 2222 Danforth Avenue, M4C 1K3, Toronto, ON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BMO Bank of Montreal

BMO Bank of Montreal Greator Toronto Area

## Great options for all your mortgage needs...

## உங்கள் சகலவிதமான மோட்கேஜ் தெரிவுகளுக்கும்.....




- Lowest interest rates & best pre-payment options
- Pre - Approvals
- Renewals & refinance
- Home equity Line of Credit



**Thanusha Rajadurai**
Mortgage Specialist

**Cell: 416-312-5047**

A part of BMO Financial group

Tel: 905-301-5160 | Fax: 905-567-4799

Email:thanusharajadurai@bmo.com | web:bmo.com/ms/thanusharajadurai


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களே! உங்கள் உள்ளத்தில் தோன்றும் கேள்விகளை ஹலோ மோகன் பார்வைக்கு அனுப்பி வையுங்கள்.
Email: hellomogan@thooralonline.com
Fax: 416 273 7606

# கேள்வி - பதில் ஹலோ மோகன்

**சிலபெற்றோர் குழந்தைகளை காரில் விட்டுச் சொல்வார்கள். அப்படி விட்டுச்சொல்வதால் ஏற்படும் பாதிப்புக்களை அவர்கள் அறிவதில்லையா?**

**திவாகர் – ரொறன்ரோ**

அவசரத்தில் பெற்றோர்கள் செய்யும் இப்பிழை பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் அறிவதில்லை. இது அவர்களின் அறிவீனத்தையும் அக்கறையின்மையையுமே காட்டுகிறது. அமெரிக்காவில் மாத்திரம் 10 நாளைக்கு ஒரு குழந்தை வாகனத்தில் இருக்கும் வெப்பத்தால் இறக்கின்றது. இதனை Vehicular Heatstroke என்கின்றனர். இதில் அதிகம் இறந்துபோவது இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள். 15 நிமிடங்களில் வாகனம் அதிக வெப்பமடைந்து உயிராபத்தை விளைவிக்கக்கூடிய மூளை மற்றும் சிறுநீரக பாதிப்புக்குள்ளாகலாம். இது குளிர்காலத்திற்கும் பொருந்தும்.

குளிர் காலமாக இருந்தாலும் சரி, கோடை காலமாக இருந்தாலும் சரி பெற்றோரின் கவனயீனம் தங்கள் குழந்தைகளை நிரந்தராமாக பிரியும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம்.

**அதிசயம் ஒன்று சொல்லுங்களேன் மோகன்..**

**காயத்ரி – மிசிசாகா**

உலகின் மிக நீளமான நதி...எகிப்தில் உள்ள நைல் நதி என்பது உங்களுக்கு தெரியும்தானே. ஆனால், அந்த நைல் நதிக்கு அடிப்பரப்பில் இன்னொரு நதி ஒன்று ஓடுகிறது. அதன் தண்ணீரின் அளவு, மேற்பகுதில் ஓடும் நைல் நதியின் தண்ணீரின் அளவை விட ஆறு மடங்கு அதிகம்.

பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டம் முதல் கடவுளின் படைப்பில் பல அதிசயங்கள் ஒளிந்திருக்கிறது...

**ஆண்- பெண் சமத்துவம் எப்போது உருவாகும்?**

**ரஞ்சிதம் - பிரம்டன**

இதற்கு நான் சொல்லும் பதிலை விட தமிழர்கள் நாம் மதிக்கும் தலைவர் சொன்ன பதில் பொருத்தமாக இருக்கும்.

"பெண்ணிடமும் மனிதம் இருக்கின்றது! பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலாக, இந்த மனிதத்தை இனம் கண்டு கௌரவிக்குமாறு, பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகின்றது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக் கொள்ளும்போதுதான் ஆண்-பெண் சமத்துவம் சாத்தியமாகும்." மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்

**அவமானங்கள் பலர் வாழ்வை மாற்றி அமைத்திருக்கிறது. அந்தவகையில் உங்களைப் பாதித்த ஒரு நிகழ்வு?**

**நந்தன் - எற்றோபிக்கோ**

அவமானம் ஒரு மூலதனம். ஒரு சிலரின் வாழ்க்கையில் நடந்த விடயம் கூட நம்மைப் பாதிக்கலாம். அந்த வகையில் கவிஞர் கண்ணதாசனின் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த நிகழ்வு என்னை பாதித்தது.



செட்டிநாட்டிலிருந்து எழுத்துக் கனவுகளுடன் 14 வயதுப் பையனாகச் சென்னை வந்தார் கவிஞர். அன்று இரவு படுக்க இடமின்றி மெரினா பீச்சில் காந்தி சிலைக்குப் பின்னால் பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுத்துக் கொண்டிருக்கிறார் கவிஞர். நள்ளிரவு போலீஸ்காரரின் உருட்டுத்தடி அவரைத் தட்டி மிரட்டியது. காலையில் நகரத்தார் விடுதிக்குப் போக வேண்டும். இரவு மண்ணடி வரை நடந்து போக முடியாது. அதனால் பீச்சில் படுத்துக் கொள்ள அனுமதிகேட்ட அந்தப் பதினாறு வயதுப் பையனின் கோரிக்கையைப் போலீஸ் நிராகரித்தது.

"படு...படுக்கனும்னா நாலணா கொடு" என்று காவல் மிரட்டியது. நாலணாவுக்கு வழியின்றி கலங்கிய கண்களுடன் காந்தி சிலையிலிருந்து நடந்திருக்கிறார் கவிஞர். அவர் வளர்ந்து கவியரசர் கண்ணதாசன் என்று பெயர் பெற்று "சுமைதாங்கி" என்ற சொந்தப்படம் எடுக்கிறார். கதாநாயகனாக நடித்த ஜெமினி கணேசனை எங்கிருந்து நடக்க விடுவது என்று யோசித்த கவிஞர் அதே காந்தி சிலையைத் தேர்ந்தெடுத்தார். நள்ளிரவு ஷூட்டிங். ஆனால் படத்தில் இரவு 7 மணி மாதிரி இருக்க பீச் ரோட்டில் நிறைய கார்கள் வரிசையாக வர வேண்டும். ஏழு கார்களை நிற்க வைத்து மாறி மாறி ஒன்றன் பின் ஒன்றாக வருகிற மாதிரி படம் எடுக்கிறார்கள். வீட்டில் இந்தப் படத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞர் தன் பிள்ளைகளைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். "இந்தக் கார்களை கவனித்தீர்களா..? இவை எல்லாமே நம்முடைய கார்கள். வாழ முடியும் என்று நம்பிக்கையோடு சென்னை வந்த என்னை இந்த இடத்தில்தான் நாலணா இல்லை என்பதற்காகப் போலீஸ் நடக்கவிட்டது. இதே இடத்தில் என் ஏழு கார்களை ஓடவிட்டுப் படம் எடுத்திருக்கிறேன். நம்பிக்கை என்னை ஜெயிக்க வைத்துவிட்டது!" என்றாராம்!

எங்கு அவமதிக்கப்பட்டாரோ அங்கு கவிஞர் தம் வெற்றியை அரங்கேற்றியிருக்கிறார்.

**நறுக்கிய வெங்காயத்தை வெளியே வைத்தால் அது நச்சுத்தன்மை வாய்ந்ததாக மாறிவிடும் என்று எனது நண்பி ஒருவர் சொல்வார். ஆனால் இதற்கான சரியான விளக்கம் அவருக்குத் தெரியவிலை. இது உண்மையா?**

**கவிதா - ஸ்காபரோ**

ஆம். வெங்காயத்தை வெட்டி வைத்தால் அது காற்றில் உள்ள நச்சுக்கை உறிஞ்சிக்கொள்ளும். வெங்காயத்தை குளிர்சாதனப்பெட்டியில் வைத்து உபயோகிக்கதீர்கள். அதில் உள்ள அனைத்து நச்சுக்களையும் வெங்காயம் உறிஞ்சிக்கொள்ளும். மேலும் அதனை நீங்கள் உட்கொண்டால் நச்சுக்களை உண்பதற்கு சமம். நறுக்கிய வெங்காயத்தை நீங்கள் படுக்கும் படுக்கையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றிலும் வைத்து கொண்டால் இரவு உறக்கம் மற்றும் சுவாசிக்கும் காற்று சுத்தமானதாக இருக்கும்.

அதேபோல் ஒரு மணிநேரம் தொடர்ந்து நீங்கள் ஹெட்போனை (headpohne) தொடர்ந்து பயன்படுத்தினால், அது உங்கள் காதுகளில் உள்ள கிருமிகளை 700 மடங்கு அதிகரிக்கும். எதுவாயிருந்தாலும் அவதானமாகப் பாவிக்க வேண்டும்.



**'ஐ' படம் பார்த்தீர்களா? ஏமி ஜக்சனுக்காகவே நான் அந்தப் படத்தை முதல்நாள் முதல் ஷோ பார்த்தேன். நீங்கள் எப்படி?**

**காந்தன் - ரொறன்ரோ**

நான் விக்ரமிற்காக அந்தப் படம் பார்த்தேன் என்று பொய் சொல்லவில்லை. விக்ரமும் ஒரு காரணம். மற்ற காரணங்கள் உங்கள் மூளைக்கு வேலை... என்ன சொன்னாலும் எமியின் உண்மை எனக்குப் பிடித்திருக்கிறது.

லண்டனைச்சேர்ந்த இவர், அங்கு ஏராளமான விளம்பரப் படங்களில் நடித்துள்ளார். அதில் சில டாப்லெஸ் விளம்பரங்களிலும் நடித்துள்ளாராம். இப்போதும் அந்த மாதிரி நடித்துக்கொண்டுதான் இருக்கிறாராம். ஆனால், இந்திய படங்கள், விளம்பரங்கள் எதுவாக இருந்தாலும் லண்டனில் நடிப்பது போன்று நடிக்க மாட்டாராம். காரணம், லண்டன் கலாச்சாரம் வேறு. இந்திய கலாச்சாரம் வேறு. அதனால் இங்கு நடிக்கும்போது இந்திய நாட்டின் கலாச்சாரத்துக்கு உட்பட்டே நடிப்பேன் என்கிறார்.

மேலும், ஐ படத்தைப் பொறுத்தவரை நான் மாடலாகவே நடித்திருந்ததால் சில காட்சிகளில் அதிக கிளாமராக நடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. மற்றபடி பெரும்பாலான காட்சிகளில் தமிழ்நாட்டு பெண்களைப் போன்றுதான் உடையணிந்து நடித்தேன். இதை இனியும் தொடருவேன் என்று கூறும் எமி ஜாக்சன், நான் என்னதான் லண்டனில் பிறந்து வளர்ந்த பெண்ணாக இருந்தபோதும், இந்திய கலாச்சாரம் எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. அதனால் இதை நான் உயர்வாக மதிக்கிறேன் என்கிறார்.

**பிலிப் ஹியூக்சின் மரணம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு கவசத்தையும் தாண்டி பந்து அவரது உயிரைப் பறித்திருக்கிறது என்பது மிகவும் கவலைக்கிடமானது.**

**மதன் - ஸ்காபரோ**

பாதுகாப்பு கவசம் ஹெல்மெட் அணிந்து விளையாடும் போதும், சில நேரம் வேகமாக வரும் பந்துகள் ஹெல்மெட்டையும் தாண்டி மூக்கையும், தலையையும் பதம் பார்த்து விடுவது உண்டு. ஆனால் அதில் உயிரிழப்பு என்பது அபூர்வமான விடயம். கிரிக்கெட்டில் இவ்வாறு பல உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கிறது.



1870-ம் ஆண்டு லண்டன் லார்ட்சில் நடந்த முதல்தர போட்டியில் நாட்டிங்காம்ஷைர் வீரர் ஜார்ஜ் சம்மர்ஸ் (வயது 25) பேட்டிங் செய்து கொண்டிருந்த போது, ஷாட்பிட்ச்சாக வந்த பந்து தாக்கியதில் படுகாயமடைந்தார். 4 நாள் கழித்து அவர் உயிரிழந்தார்.

1959-ம் ஆண்டு பாகிஸ்தான் முதல் தர கிரிக்கெட்டில் அப்துல் அஜீஸ் (வயது 17) என்ற விக்கெட் கீப்பர் நெஞ்சில் பந்து தாக்கியதில் சுயநினைவை இழந்தார். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார்.

1998-ம் ஆண்டு வங்காளதேசத்தில் நடந்த முதல்தர லீக் கிரிக்கெட்டில் இந்திய முன்னாள் டெஸ்ட் வீரர் ராமன் லம்பா (வயது 38) பங்கேற்ற போது, பேட்ஸ்மேன் அடித்த ஷாட்டில் அருகில் பீல்டிங் செய்து கொண்டிருந்த இவரது நெற்றியை பந்து தாக்கியதில் கோமா நிலைக்கு சென்றார். மூன்று நாட்கள் சிகிச்சை அளித்தும் அவரது உயிரை காப்பாற்ற முடியவில்லை.

தென்ஆப்பிரிக்க முதல்தர கிரிக்கெட் வீரர் டேரின் ரான்டால் உள்ளூரில் நடந்த போட்டியின் போது பந்து தலையில் தாக்கியதில் உயிரிழந்தார்.

தற்போது சர்வதேச கிரிக்கெட் வீரர் ஆஸ்திரேலியாவின் பிலிப் ஹியூக்சும் பந்து தாக்கியதில் மரணத்தை தழுவியிருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

action
BUSINESS DEVELOPMENT

# BUSINESS DEVELOPMENT



Over 25 yrs of Business Leadership Experience

**Business Coaching Brings...**

- Better Business Performance
- Growth to your Business
- Effective marketing and sales
- Makes you a better Leader
- Increased Value to your Business
- High value Exit / Succession Plans
- Increased cash flow

Call Today for a free consultation!

**Kula Sellathurai**

Certified Business Coach

**416 902 9462** Kula@kulasellathurai.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STF
The Name You Can Trust

# A.RSM | SHAWN

## Truck, ForkLift & Car Training School

**Job Placement Right Away!** உடனடி வேலை வாய்ப்புகள்

- AZ
- DZ Dangerous goods CPR
- WHIMS



- Fork Lift Licence
- Ontario Ministry Approved Instructors
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்

**Fork Lift License For Discount Price**

**KUMAR (416.829.0603, 416.913.9574)**

**40 Nugget Ave, Unit #13, Scarborough, M1S 3A8**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீல் ஆம்ஸ்ட்ராங்

## நிலவில் காலடி வைத்தது உண்மையா?

-பத்மஸ்ரீ



நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் காலடி வைத்தது உண்மைதானா... இல்லை வழக்கமான ஆங்கில படங்கள் மாதிரியானதா? என்றொரு சர்ச்சை கிளம்பியுள்ளது. உலகிலேயே முதன் முதல் சந்திரனைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் சோவியத் யூனியன் தான். 1930 ஆம் ஆண்டிலிருந்தே அவர்கள் இந்த ஆராய்ச்சியை தொடங்கி இருக்கிறார்கள். அதேபோல், நிலவிற்கு விண்கலம் அனுப்பியவர்களும் இவர்களே. இருபதுக்கும் மேற்பட்ட ஆளில்லா விண்களங்களை நிலாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். இப்படியாக நிலாவை நோக்கிய இந்த விண்கலப் பயணமும், நிலாவைப் பற்றிய ஆராய்ச்சியும் வெற்றிகரமானதாக அமைந்தவுடன், 1957 ஆம் ஆண்டு விண்கலத்தில் "லைகா" என்ற நாயை வைத்து நிலாவிற்கு அனுப்பி வைத்தனர். "லைகா" நாயும் உயிர் சேதாரமின்றி நிலவிற்கு சென்று திரும்பியது. அந்த பயணம் வெற்றிகரமாக முடிந்ததை பார்த்து உலகமே வியந்தது. இத்தனைப் பயணங்களும் வெற்றிகரமாய் அமைந்திடவே, சோவியத் யூனியன் அடுத்து சோவியத் யூனியனைச் சேர்ந்த மூன்று பேர்களை நிலவிற்கு அனுப்பி சோதனை செய்ய முயற்சித்தது.

அந்த மூன்று பேர்களையும் ஏற்றிக்கொண்டு நிலாவை நோக்கி புறப்பட்ட விண்கலம் கொஞ்ச நேரத்திலேயே வெடித்து சிதறியது. அதனால் உலகமே அதிர்ச்சியடைந்தது. மூன்று உயிர்களை அனாவசியமாக பலியிட்டுவிட்டோமே என்று சோவியத் யூனியனும் உறைந்து போனது மட்டுமல்லாமல், இது மனித உரிமைக்கு எதிரானது என்று கூறி மன்னிப்பும் கேட்டனர். அது மட்டுமல்லாமல், நிலாவிற்கு ஆட்களை அனுப்பி செய்யும் சோதனையை இத்துடன் கைவிடுவதாகவும் அறிவித்துவிட்டனர். அந்த காலங்களில், எதிலும் சோவியத் யூனியனுடன் போட்டிப்போடும் அமெரிக்கா நிலாவைப் பற்றிய சோதனையிலும் போட்டிப்போட்டது. நிலாவிற்கு ஆட்களை அனுப்பும் சோதனையை கைவிடுவதாக சோவியத் யூனியன் அறிவித்தவுடன், "அவர்களால் செய்யமுடியாததை வெற்றிகரமாக எங்களால் செய்து காட்டமுடியும்" என்று அமெரிக்கா சவால் விட்டது.


அதன் பிறகு தான், அமெரிக்கா உலகத்திலேயே தான் விண்வெளி ஆராய்ச்சியில் சிறந்த நாடு என்று காட்டுவதற்காக, கடந்த 1969 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் "அப்போலோ – 11" என்ற விண்கலத்தில் நீல் ஆம்ஸ்ட்ராங் என்பவரையும் டேவிட் சு ஸ்காட் என்பவரையும் நிலாவிற்கு அனுப்பிவைத்தது. ஜுலை 20 ஆம் தேதி நிலவில் இறங்கிய விண்கலத்திலிருந்து, நீல் ஆம்ஸ்ராங் தான் முதன் முதல் தன் காலடியை வைத்து இறங்கினார். இந்த செய்தி உலகெங்கிலும் செய்தித்தாள்களில் வந்தது. அறிவியலில், ஆராய்ச்சியில் சோவியத் யூனியனை விட தாம் தான் முன்னணி நாடு என்று அமெரிக்கா தம்பட்டம் அடித்து கொண்டாடியது. அறிவியல் ஆராய்ச்சியில் எங்களை வெல்ல யாருமில்லை என்று கொக்கரித்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் "நிலவில் இறங்கி நீல் ஆம்ஸ்ட்ராங் வலம் வந்த" திரைப்படத்தை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்துப் பார்த்து சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார்கள். அவர்கள் சொன்னது என்னவென்றால், நீள் ஆம்ஸ்ட்ராங் நிலாவிற்கே செல்லவில்லை என்பதும், அது நிலாவிற்கு சென்றது போல் ஹாலிவுட்டில் எடுக்கப்பட்டத் திரைப்படம் என்பதும் தான். உலக மக்களை எப்படியெல்லாம் அமெரிக்கா மடையர்களாக ஆக்கியிருக்கிறது என்று எண்ணும் போது நமக்கெல்லாம் உண்மையிலேயே கோபம் வருகிறது. "ஹாலிவுட்டில் நிலாவைப்போன்று செட்டிங்ஸ் போட்டு படம் எடுத்தவர் என் கணவர் தான்" என்ற உண்மையையும் அந்த படத்தை இயக்கிய அன்றைய "science fiction" பட இயக்குனர் ஸ்டான்லி குப்ரிக் இன் மனைவியும் வெளியிட்டிருக்கிறார். அப்படி எடுக்கப்பட்ட திரைப்படத்தில் நிறைய விடயங்களை கோட்டை விட்டிருக்கிறார்கள் என்பதையும் பார்த்தால் உங்களுக்கு உண்மை விளங்கும்.

1) முதலாவது நிலாவில் வெளிச்சமே இருக்காது. சூரியனின் ஒளி பட்டு தான் பூமியிலிருக்கும் நமக்கு நிலா வெளிச்சமாக தெரிகிறதே ஒழிய, தானாக நிலாவில் எப்படி வெளிச்சம் வரும்.
2) நீல் ஆம்ஸ்ட்ராங் நிலாவில் இறங்கி அமெரிக்கக் கொடியை நிலாவில் நடுவார். அப்போது அந்தக் கொடி அசையும். காற்றே இல்லாத இடத்தில் கொடி பறப்பதற்குசாத்தியமே இல்லை.
3) அதேப்போல் காற்றே இல்லாத இடத்தில் கால் தடம் பதிக்க நடப்பது என்பதும் இயலாததே. அப்படியிருக்கையில் அவர்கள் நடந்த காலடித் தடம் இருக்கும். அவர்கள் நடக்கும் போது புழுதி பறக்கும். இதெல்லாம் நிலாவில் எப்படி முடியும்.
4) சுற்றிலும் focus லைட் போட்டு படப்பிடிப்பு நடத்தப்பட்டதால், அந்த நிலாவில் உள்ள பொருட்களின் நிழல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணங்களில் இருக்கும்.
5) நீல் ஆம்ஸ்ட்ராங்கின் முகத்தை அருகில் காட்டுவார்கள் அதில் அவருக்கு எதிரில் இருக்கும் விண்வெளிவீரர்கள் இரண்டுபேரின் உருவங்கள் தெரியும். நிலாவிற்கு சென்றதே இரண்டு பேர் எனும் போது மூன்றுவதாக இன்னொருவர் யார்...?

இப்படியாக அந்த படபிடிப்பில் கோட்டைவிட்டிருப்பதால் அமெரிக்கா நிலாவிற்கு செல்லவில்லை என்றும், நிலாவிற்கு சென்றது போல் ஹாலிவுட்டில் எடுக்கப்பட்ட திரைப்படமே அது என்றும் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். இவ்வளவு அறிவியல் வளர்ச்சியும், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும் உள்ள இந்த காலத்திலேயே அமெரிக்கா, இந்தியா, சீனா உள்ளிட்ட பல நாடுகள் இன்றைக்கு நிலாவைப் பற்றிய எந்தவிதமான முழுமையான முடிவுக்கும் வரமுடியாமலும், நிலாவிற்கு ஆட்களை அனுப்ப யோசித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

**அன்றைக்கு – அதுவும் 60 களில் இன்றைக்கு இருப்பது போன்ற அறிவியல் வளர்ச்சியோ, தொழிநுட்ப வளர்ச்சியோ இல்லாத நாட்களில் எப்படி நிலாவிற்கு ஆட்களை அனுப்பினார்கள்..?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cine மின்



எம்.ஜி.ஆர்-ரின் வில்லன் என்றால் அது நம்பியார் மட்டுமே. எம்.ஜி.ஆரை ரசித்த, தமிழ்நாட்டின் ஒரு தலைமுறைக்கே நம்பியார்தான் வில்லன் என்றால் அதில் ஆச்சர்ய படுவதற்கு ஒன்றுமில்லை.

அப்படிப்பட்ட எம்.என்.நம்பியார் 1000 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். ஆனால் அத்தனை படங்களில் நடித்து குவித்த எம்.என். நம்பியாரைக் கௌரவப்படுத்தும் விதமாக யாரும் எந்தவிருதும் அளித்ததில்லை.



1966 ம் ஆண்டு தமிழகத்தில் சிறந்த நடிகருக்கான விருதுக்கு நடிகவேள் எம்.ஆர்.ராதா தேர்ந்தெடுக்கப்பட்டார். கவர்னர் பரிசு அளிப்பதாக இருந்தது.

ஆனால், "மொழி தெரியாத கவர்னர் என் படத்தைப் பார்த்திருக்கும் வாய்ப்பு இல்லை. என் படத்தையே பார்க்காத கவர்னர் எனக்குச் சிறந்த நடிகர் விருது கொடுப்பதை நான் விரும்பவில்லை" என்று எம்.ஆர்.ராதா அந்த விருதை ஏற்றுக்கொள்ள விரும்பாமல் விழாவுக்கே போக வில்லை.




ராஜாவின் அதி அற்புத இசையில் கமலின் அட்டகாசமான நடிப்பில் வெளிவந்த "ராஜ பார்வை" படத்திற்கு இன்னொரு பெருமையும் உண்டு.



"ராஜ பார்வை" படத்தின் போது கமல்ஹாசனுக்கு "இளைய வள்ளல்" என்ற பட்டத்தை புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் வழங்கினார் என்பதுதான் அந்த இன்னொரு பெருமை.

16வயதினிலே படத்தின் படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிவுக்கு வந்த சூழ்நிலையில் படத்தை பார்த்த விநியோகஸ்தர்கள் யாரும் படத்தை வாங்க விரும்பவில்லை."விளையாட்டுப் பையன் மாதிரி நடிச்சிக்கிட்டு இருந்த கமலஹாசனை இப்படி கோவணம் கட்டி, வெத்தல பாக்கு போட வச்சிட்டாங்க, அப்புறம் எப்படி படம் ஓடும்" என்பது தான் அவர்கள் சொன்ன காரணம்.



அப்படி இருந்தும் ஒரு விநியோகஸ்தர், மிகப்பெரிய ஏரியாவை வாங்க முன் வந்துள்ளார். ஆச்சர்யம் தாங்க முடியாத பாரதிராஜா, "நெசமாத்தான் வாங்கப்போறீங்களா? நெசமாவே உங்களுக்கு படம் பிடிச்சிருக்கா?"என்று கேட்டுள்ளார்."ஒரு அடிப்படையான கருத்தைச் சொல்லியிருக்கீங்க. ஆளப் பாக்காதே. ஆடையப் பாக்காதே. மனசப் பாரு அப்படின்னு. கிராமத்திலயிருந்து பட்டணம் வரைக்கும் எல்லாருக்கும் தேவையான ஒரு கருத்து இது. எல்லா ஜனங்களுடைய மனசுக்கும் தெரிஞ்ச விஷயம். அதனால இந்தக் கருத்து ஜெயிக்கும்.

எனக்கு நம்பிக்கையிருக்கு" என்று அந்த விநியோகஸ்தர் பதிலளித்துள்ளார். அந்த விநியோகஸ்தர் வேறு யாருமில்லை. அப்போது காதர் மொய்தீன் என்ற பெயரில் இருந்து - தற்போது ராஜ் கிரணாக மாறியுள்ள நடிகர் "ராஜ்கிரண்"தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள், 'உறங்குமோ காதல் நெஞ்சம்' என்ற, குரு அரவிந்தனின் முதலாவது நாவலுக்கு எழுதிய அணிந்துரையின் சுருக்கம் அவரது நினைவாக இங்கே மறுபிரசுரம் செய்யப்படுகின்றது. போர்ச் சூழலை பின்புலமாகக் கொண்டு வெளிவந்த, பலராலும் பாராட்டப்பட்ட இந்த நாவல் தமிழ் நாட்டில் சுமார் 1600 நூலகங்களில் வாசகர்களின் வாசிப்புக்காக வைக்கப்பட்டுள்ளது.)

## குரு அரவிந்தனின்

# உறங்குமோ காதல் நெஞ்சம்?



இயற்றமிழ் இலக்கியம் இன்று புதிய பரிமாணம் பெற்று நிற்கிறது என்றால் அதற்கு முழுமையாக உலகின் பல்வேறு பாகங்களில் பரவி வாழும் ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளே காரணர்களாகின்றனர். புலம் பெயர்ந்தோர் என்ற அடைமொழியினை உபயோகிப்பதை நான் முற்றிலும் வெறுக்கின்றேன். எண்ணத்தால் உணர்வால் மட்டுமின்றி எமது ஒவ்வொரு செயலாலும் கூட நாம் தாயகத்தை நினைவில் முன் நிறுத்துவதால் நாம் எவ்விதம் புலம் பெயர்ந்தோர் ஆகமுடியும். அடுத்த தலைமுறையினர் அதற்கும் அடுத்த தலைமுறையினர் தாம் வாழ்கின்ற சமூகங்களுடன் ஒன்றிய நிலையிலே படைக்கும் இலக்கியங்கள்தான் புலம் பெயர்ந்தோர் இலக்கியமாக அமைய முடியும் என்பதே எனது அபிப்பிராயம்.

குரு அரவிந்தன் இன்று முன்னணியில் நிற்கின்ற ஈழத்துப் படைப்பாளிகள் சிலருள் முக்கியமானவர். மிகக் குறுகிய காலத்திலேயே சிறந்த படைப்பாளி எனக் கிரீடம் சூட்டப்பட்டவர். கனடிய தமிழக ஜெர்மன் பாரிஸ் இங்கிலாந்து இலங்கை என பலவேறு நாடுகளின் தமிழ் சஞ்சிகைகளில் கதைகள் எழுதி வாசகர் மத்தியிலே பெரும் மதிப்பினை ஈட்டிய எழுத்தோவியர். அவரது கதைகள் பிற மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டமை அவரது எழுத்தாற்றலுக்கு கட்டியம் கூறுவதுடன் அவர் வாசகர் வியாபகத்தையும் உலகளாவிய ரீதியில் மேலும் விரிய வைத்துள்ளது. உறங்குமோ காதல் நெஞ்சம், குரு அரவிந்தன் எழுதிய முதல் நாவல். உதயன் பத்திரிகையிலே தொடராக வெளிவந்த போது பல்லோரும் வாசித்துப் பரவசப்பட்ட நவீனம். நவீனத்துடன் உணர்வு பூர்வமாக ஒன்றிய பலர் அதனைத் தம்முடன் என்றுமே வைத்திருக்க வேண்டும், தம் நூலகத்தை அழகுபடுத்த வேண்டும் என ஆசைப்பட்டதன் விளைவாக நவீனம் நூல் வடிவம் பெற்றிருக்கின்றது.

நாவல்களிலே ஒரு புறத்தே கற்பனைக் கதைகள் உள்ளன. இவற்றிலே உள்ளடக்க உருவாக்கத்தில் ஜனரஞ்சகம் பேணப்படுகின்றமையால் வாசிப்போருக்கு சுவாரஸ்யமாக அமைந்து கதையின்பால் ஈர்ப்பு ஏற்பட்டு விடுகின்றது. மறுபுறத்தே இரண்டாவது வகை. அது யதார்த்த நாவல்கள். இவை வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்பர். சம்பவங்களைச் சாதாரண நிகழ்வுகளாகவும், நம்பகத் தன்மை கூடியவையாகவும் அமைய சடுதி மாற்றங்களும் ஆச்சரியம் தரவைக்கும் நிகழ்வுகள் அதிகமற்றவையாகவும் அமைவதால் எல்லாரக வாசகர்களையும் ஈர்க்கும் தன்மை குறைவாகவே காணப்படும். குரு அரவிந்தனுடைய இந்த நாவல் மூன்றாவது வகையைச் சேர்ந்தது. கொள்கைப் பற்றுடன் பரப்புரை தாகத்துடன் எழுதப்பட்டது.

இங்கே முன்னிரு வகை நாவல்களினதும் அம்சங்கள் கலவையாகக் காணப்படுகின்றன. தாய் மண்ணின் யதார்த்தம் மட்டுமல்ல, சடுதி மாற்றங்களும், உணர்ச்சியூட்டும் சம்பவங்களும் நிறையவே இந்த நாவலில் காணப்படுகின்றன. போர்க்கால சூழலில் இதுவரை வெளிவந்த நாவல்களில் இது சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருக்கின்றது என்றால் மிகையாகாது. எனவேதான் வாசகர் ஈர்ப்பு நிறையவே இருப்பதில் ஆச்சரியப் படுவதற்கில்லை.

பத்திரிகையில் தொடர் நாவல் எழுதும்போது வாரம் தோறும் வாசகர்களை ஆவலோடு காத்திருக்கும் வண்ணம் கதையினை நிறுத்த வேண்டும். குரு அரவிந்தனுக்கு அந்தக் கலை கைவந்த பாணி போல இருக்கின்றது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் நிறையவே அத்தகைய சம்பவங்களை அமைத்து வாசகர்களைக் கவர்ந்துள்ளார். தெளிந்த நீரோடை துள்ளாமல் துவளாமல் ஆரவாரப்படாமல் ஓடித் தான் அடைய வேண்டிய இடத்தினை அடைகிறதே, அத்தகைய எளிமையான பாணி அவருடையது. ஆங்காங்கே மென்மையான குறும்பு மிளிர லாகவமாகக் கதை நகர்கின்றது. கதையின் ஆரம்பமே அடுத்து என்ன நிகழப் போகிறது என்ற ஏக்கத்தை வாசகனுக்கு ஏற்படுத்தக் கூடியதாக அமைந்து விடுகின்றது.


குளிர் காற்றில் ஏற்றி வைத்த தீபச்சுடர் அங்குமிங்கும் ஆடி அசைய, மழைத்துளிகள் பொட்டுப் பொட்டாய் பன்னீர் தெளிக்க, மாலை நேரச் சூரியன் இவளது சோகத்தைத் தாங்க முடியாமல் கண்களை மூட, அவள் தன்னையே மறந்து விம்மியபடி சிவாவின் கல்லறையில் தலை சாய்த்து மெல்ல மெல்ல நினைவிழந்தாள். சிவாவை இழந்து விட்ட சுமதியின் அவல நிலையை எத்துணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்ரூபமாக சோக இழையோடு கதையின் ஆரம்பத்திலேயே விவரிக்கின்றார் குரு அரவிந்தன். வாசகரின் அனுதாபத்தை அக்கதாபாத்திரம் கதையின் ஆரம்பத்திலேயே பெற்று விட்டதால் அவர்கள் கதாநாயகி சுமதியின் இன்ப துன்பங்களில் தாங்களும் ஒன்றி விடுகின்றார்கள்.


சிவாவோ இன்றைய தமிழ் ஈழத்தவர் ஒவ்வொருவரினதும் பிரதிநிதியாக நிற்கின்றான். இன்றைய இளைஞர் போன்று அவனது சிந்தனையும் தெளிவானது. எனவேதான் அவன் சுமதியிடம் 'நான் உன்னையும், இந்த மண்ணையும் நேசிக்கின்றேன்' என்கிறான். ஆனால் தாய்மண்ணோ அவனை அதிகம் நேசித்து விட்டது. 'எதையுமே தாங்கிக் கொள்ள உன்னைத் தயார்ப்படுத்திக் கொள் சுமதி' என்று அடிக்கடி சொல்லி சிவாதான் அவளைத் தயார்படுத்திவிட்டானே! இன்னுமொரு பாத்திரம் சாந்தி! அறப்போரில் ஆகுதி என, கூலிப்படையின் வெறியாட்டத்திற்கு இரையான பல்லாயிரம் பெண்களில் அவளும் ஒருத்தி.

அவள்மேல் தான் வைத்த காதல் தூயது, என்றுமே உடல் சல்லாபத்துக்கு மாத்திரம் வேண்டுவது அல்ல, என சூரியா வீறு கொண்டு எழுந்து நிற்கின்றானே அவன்போல ஆயிரம் ஆயிரம் எமது இளைஞர்கள் முன்வரவேண்டும். போராட்டம் என்று வந்தால் எப்பொழுதுமே இழப்பு பெண் குலத்திற்குத்தான். புருஷனை, காதலனை, சகோதரனை, பெற்றோரை மட்டுமல்ல, காமுகர்களால் தம்மையே இழப்பர். பாதிக்கப்பட்டவளுக்கு வாழ்வு கொடுக்க முன்வரும் சூரியா இளைஞர்களுக்கு ஓர் உதாரணம். இன்றைய இளைஞர்களுக்கு அவர்களின் தன்னம்பிக்கைக்கு, தன்மான உணர்விற்கு, எதைப்பற்றியும் தீர்க்கமாக முடிவு எடுக்கும் திறனுக்கு ஆசிரியர் ஷொட்டு வைக்கவும் தவறவில்லை. தாய் மண்மீது சிவாவுக்கிருந்த அளவில்லாத பற்றும், தன்னினம் அழிக்கப்படுகின்றதே என்ற ஆதங்கமும் தான் அவனை ஆயுதம் ஏந்த வைத்தது என்ற யதார்த்தத்தை ஆசிரியர் இந்த நாவலில் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார். எழுத்தோவியர் குரு அரவிந்தனின் நோக்கம் ஈடேற வேண்டும், இது போன்ற சிறந்த நாவல்களை இன்னும் தரவேண்டும் என்பதே நம் அவா!




## அமரர் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களுக்கு

# கண்ணீர் அஞ்சலி.





திரு. பொன்னையா கனகசபாபதி அவர்கள் இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் உள்ள சண்டிலிப்பாயில் 1935 ஆம் ஆண்டு பிறந்தார். திருமண பந்தம் காரணமாக குரு வீதியைச் சேர்ந்த குருநாதபிள்ளை அமிர்தகௌரியை திருமணம் செய்து 1963 இல் காங்கேசந்துறையை புகுந்த வீடாகக் ஏற்றுக்கொண்டார்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவரான இவர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் உயர் கல்வி கற்றகாலத்தில் தமிழ் நாட்டிலேயே சிறந்த மாணவனுக்கான தங்கப் பதக்கம் பெற்றார். விலங்கியல் பாடத்தை சிறப்பாகக் கற்பித்தாலும் தாவரவியலில் அதிக நாட்டம் கொண்டு, இயற்கையை நேசித்ததன் காரணமாக தான் வாழ்ந்த இல்லங்களை மட்டுமல்ல, கல்வி கற்பித்த இடங்களையும் பிறர் வியக்கும் வண்ணம் பூஞ்சோலையாக மாற்றியமைத்தார். மகாஜனக்கல்லூரி, ஏழாலை மத்திய மகாவித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி ஆகிய கல்லூரிகளில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டது மட்டுமல்ல புகழ் பெற்ற பல மாணவர்களையும் உருவாக்கினார். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட இவர் 1987 இல் கனடிய மண்ணில் காலடி வைத்து, தமிழ் மொழி வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தினார். சிறந்த விலங்கியல் ஆசிரியரான இவர் கனடிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பல வழிகளிலும் பங்களிப்பு செய்திருக்கின்றார். இலக்கிய ஆர்வலர்கள் 1995 இல் இவரது 60 வது மணிவிழாவைக் கொண்டாடினர். ரொறன்ரோ கல்விச் சபையின் ஆலோசகராகக் கடமையாற்றிய இவருக்குக் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுத்துக் கௌரவிக்க ஏற்பாடு செய்திருந்தது. அந்த நிகழ்விற்கு முன்பாகவே 24-12-2014 இல் காலன் அவரைத் தன்னிடம் அழைத்துக் கொண்டான். அவரது ஆத்மா சாந்தியடைய தூறல் இதழின் சார்பாக நாங்களும் பிரார்த்திக்கின்றோம்.

– ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### ரொமான்ஸ் உணர்வுகள்

# கொஞ்சி விளையாடும்

## வெண்பஞ்சு பனித்துளிகளைப் போல்...

வெண்பனி பொழிந்து ஓய்ந்த பின்னரும் ஊசியிலை மரங்களில் ஒட்டியிருக்கும் வெண்பஞ்சுப் பனித்துளிகளைப் போல் நீ இல்லாதபோது என் காதல் மனம் உன் காதல் நினைவுகளால் நிரம்பி வழிகின்றது. வாழ்க்கையை ரசிக்கும், நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் தனது அன்புக்குரியவர் தன் மேல் பேரன்புடனும் பெருங்காதலுடனும் இருக்க வேண்டும் என்பதுதான் முதல் ஆசை. ஆனால், எதிர்பார்க்கும் அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தினால்தானே அங்கே ரொமான்ஸ் தருணங்கள் பூக்கும், பெருகும்!

காதல் என்பது ஒரு இதய பூர்வமான உணர்வு. அதை எதனுடனும் ஒப்பிட்டு அதன் உள்ளார்ந்த அர்த்தங்களை மாற்றிவிடக் கூடாது. காதலுக்குரிய உறவுகள் முறிந்து போனாலும், சேர்ந்து பயணித்தாலும் காதல் என்ற உணர்வு இருந்து கொண்டே இருக்கும். இந்த காதல் உணர்வை நாங்கள் எப்படி ஆராதிக்கின்றோம் என்பது எங்களின் கெட்டித்தனம். எங்களுக்குத் தாராளமாகத் தரப்பட்டுள்ள காதல் உணர்வு எமது மனதிற்குக் கிடைத்துள்ள அளவிடமுடியாத ஒரு வளமூலம். இதை பயன்படுத்தி தாம்பத்திய இன்பம் காண்பதுவே பேரின்பமாகும்.

இயந்திரமாகி விட்ட இன்றைய எமது வாழ்வியலில் பிஸி என்ற வார்த்தையைத் தவிர எதையும் உச்சரிக்க நேரம் கிடைப்பதில்லை. வேலையும் வீடும் என்று எமது வாழ்க்கை பாலைவனமாக மாறிப்போய்கிடக்கின்றது. இந்த லட்சணத்தில் யாராவது 'ரொமான்ஸ்' என்றால் அது எங்க வாங்கலாம் என்றுதான் கேட்கத் தோன்றும். அந்தளவிற்கு வானிலை மாற்றங்களுடன் சேர்ந்து காதல் உணர்வுகள் முடங்கிக்போய்க்கிடக்கின்றன. திருமண வாழ்க்கையில் கணவன் - மனைவி கலகலப்பாக இருக்க முதலில் உங்கள் வயதை மறக்க வேண்டும் என்பார்கள்.

தம்பதியினரின் ரொமான்ஸ் உணர்வுகளை மீண்டும் மீண்டும் காதல் என்ற உணர்வு மூலம் கட்டியெழுப்பி வாழ்க்கையின் சுவாரஸ்யமான பக்கங்களை இனிமையாக வருடுவதற்கான சந்தர்ப்பங்களைக் நாங்களே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

தினம் தினம் புத்துணர்வு பெற்று இல்லற வாழ்க்கையின் சுவாரஸ்யமாக பக்கங்களை ரொமான்ஸ் உணர்வுகளுடன் எழுதிவிடுங்கள். காதலடி நீ எனக்கு காந்தமடி நானுனக்கு என்றும் காதலினால் மானிடருக்கு கவலை தீரும், கவிதை உருவாகும் ஆதலால் காதல் செய்வீர் என்ற பாரதியார் கவிவரிகள் நம்மை நெகிழவைத்து புதுவுலகுக்குக் கூட்டி செல்கின்றன.

ஆண்களுடைய விருப்பங்களும், பெண்களுடைய விருப்பங்களும் தனித்தனியானவை. ஆண்களுக்கு விளையாட்டு மோகம் இருக்கும் போது, பெண்களுக்கு நாகரிக மோகம் இருக்கும். ஆண்கள் தூங்கி ஓய்வெடுக்க விரும்பும் போது பெண்கள் பேசிக்கொண்டிருக்க விரும்புவார்கள். ஆண்களுக்கு ஷாப்பிங் அலர்ஜியாக இருக்கும். பெண்களுக்கோ அது தான் எனர்ஜியாக இருக்கும். இப்படி மாறி மாறி இருக்கின்ற ரசனைகள் ஒரு கூரையின் கீழ் வந்து சேரும்போது இந்த ரசனைகள் முட்டி மோதிக் கொள்ளாமல் எப்படி இணைந்து பயணிக்கின்றன என்பது தான் கவனிக்க வேண்டிய விடயம். கணவனும் மனைவியும் மாறி மாறிக் குற்றம் சொல்லத் தொடங்கினால், தோற்றுப் போவது கணவனுமல்ல, மனைவியுமல்ல, தாம்பத்ய உறவுதான்.

கணவன் மனைவி இணைந்து அதிக நேரத்தைச் செலவிட்டால் அந்தக் குடும்பங்கள் ஆரோக்கியமாக இருக்கும் என்பது குடும்ப இயலின் பால பாடம். அத்தகைய தம்பதியருக்கு வருகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களெல்லாம் விரைவிலேயே மறைந்து விடுகின்றன. இந்த குடும்ப நேரத்தைக் கண்டுபிடிப்பதற்கான சில வழி முறைகள் பின்வருமாறு:

- இருவருக்குமே பிடித்தமான ஒரு பொதுவான hobby, அல்லது விருப்பத்தை வைத்துக் கொள்ளுங்கள். சேர்ந்து நேரம் செலவிட இது ஒரு அற்புதமான வழி. அது தேனீர் அருந்தவதாக இருந்தாலும் சரி, அல்லது இசை, நடனம் எதுவானாலும் சரி, இணைந்தே பயணிக்கும் ஒரு hobby இருவரையும் வெகுவாக இணைக்கும். சேர்ந்து செலவிடும் நேரத்தை உருவாக்கிக் கொடுக்கும்

- ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்தை இருவரும் பேசுவதற்காக ஒதுக்குங்கள். அது காலையில் தேனீர் அல்லது கா∴பி போடும் நேரமானாலும் சரி, மாலையில் ஓய்வாக இருக்கும் நேரமானாலும் சரி. உங்கள் வேலைக்குத் தக்கபடி ஒரு நேரத்தை ஒதுக்கிப் பாருங்கள். அந்த நேரத்தை உங்கள் மனம் திறந்த பகிர்தலுக்காக ஒதுக்குங்கள். நிச்சயம் உறவு வலுப்படும்.

- இணைந்த பிரார்த்தனை மூலம் உங்கள் வாழ்க்கை வலுப்படும் என்பதில் ஐயமில்லை. இறைவனுக்கு முதலிடம் தரும் இல்லங்களில் ஈகோ விலகி விடுகிறது, விட்டுக் கொடுத்தலும், மன்னித்தலும் தவழ்கிறது. அதனால் குடும்ப உறவு ஆழமும், அர்த்தமும் அடைகிறது. இணைந்தே பிரார்த்தனை செய்வதும், அடுத்தவருக்காகப் பிரார்த்தனை செய்வதும் உறவை வலுப்படச் செய்யும் விடயங்கள்.

- மனைவியோ, கணவனோ ஒரு வேலை செய்யும் போது அந்த வேலையைப் பகிர்ந்து செய்யுங்கள். அப்போது ஒரே இடத்தில் ஒரே வேலையைச் செய்யும் போது இருவருமே இணைந்து கொஞ்சம் நேரத்தைச் செலவிடும் சூழல் தோன்றும். அது வேலையைத் தாண்டி சுவாரஸ்யத்தை அதிகரிக்கும்.

- மாலையில் செய்ய வேண்டிய சில வேலைகளை விடியற்காலையில் முடித்து விட முடியுமா என பாருங்கள். அந்த நேரத்தில் நீங்கள் முக்கியமான சில அலுவல்களை முடித்தால் மாலை நேரம் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆகவும், குடும்பத்தினருடன் பேசவும் ஒரு வாய்ப்பை உருவாக்கித் தரும்.

- யார் என்ன கேட்டாலும், ஓம் என்று தலையாட்டும் பழக்கத்தைக் விட்டுவிடுங்கள் குடும்பத்தினருடன் செலவிடும் நேரத்தை தேவையற்ற கமிட்மென்ட்களுக்காக கை கழுவி விடாதீர்கள். மிக முக்கியமான விஷயங்கள் தவிர மற்றவையெல்லாம் "சாரி.. நோ..." எனும் உங்கள் பதிலுடன் விடைபெறட்டும்.


- தனியே செலவிடும் நேரங்களை சினிமா பாக்கவோ, சீரியல் பாக்கவோ அதிகம் செலவிடாதீர்கள். அது ஒருவகையில் தோப்பிலே இருந்தாலும் ஒவ்வொரு மரமும் தனிமரம் தான் – கதை தான். அதை விட, சேர்ந்து நடப்பது, பேசுவது, ஒரு புதிர் விளையாட்டு விளையாடுவது, காட்ஸ், செஸ் மற்றும் கேரம் போன்ற விளையாட்டுகள் விளையாடுவது என செலவிட முயலுங்கள்.

இறுதியாக எல்லோருக்கும் 24 மணி நேரம் தான் உண்டு. அதை எப்படிச் செலவிடுகிறீர்கள் என்பதும் அதில் எவ்வளவு மணி நேரம் உங்கள் மனைவிக்காகவோ, கணவனுக்காகவோ ஆனந்தமாய்ச் செலவிடுகிறீர்கள் என்பதும் தான் முக்கியம்.

உங்கள் வாழ்க்கைத் துணைக்காக நேரம் ஒதுக்குங்கள், அதுவே ஆரோக்கிய வாழ்வுக்கு அடிப்படையாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் மகிழ்ச்சியான வாழ்விற்கு

# எங்கள் பரிசு!






HOMELIFE
HIGHER STANDARDS

2004/2005 Silver Award | 2006/2009 Platinum Club Award | 2010/ 2011/ 2012/ 2013/ 2014 Chairman Club Award | Top 5% Sales Rep in Canada | 2011/ 2012/ 2013 Sales person of the Year

## Sathy Sivasubramaniam

**Sales Representative**

**For Sellers:**

- Free Market Evaluation Available
- Competitive commission Packages available
- Will pay for Staging & Consultation
- Will pay for the Professional Photographer
- Virtual Tour
- Color Brochure
- Will do open house until house get sold.
- Will market your home with social medias

**For Buyers**

- Will find the home in any area within your budget
- Get you the lowest mtg. rate
- 1 Year Home Warranty Available for Limited Time
- Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off

## HomeLife/Future Realty

205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8 **Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044**

E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழில்நுட்பங்கள்

**2014ம் ஆண்டில் புதிய தொழில்நுட்ப வரவுகள் ஒரு பார்வை.**



## கைப்பேசி

இன்றைய உலகில் கைப்பேசியின் அபார வளர்ச்சி இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையுமே கட்டிப் போட்டு விட்டது. அந்த வகையில் ஐபோன் 6 சந்தையில் பெரும் வரவேற்பை பெற்றது, மேலும் ஸ்மார்ட் கைப்பேசிகளின் மூலம் கட்டுப்படுத்தப்படும் ரோபோக்களும் அறிமுகமாகி சந்தையை கலக்கின.

## கைக்கடிகாரம்

தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியின் விளைவாக கைக்கடிகாரத்திலும் பல்வேறு புரட்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. முக்கியமாக ஸ்மார்ட் கடிகாரங்கள் இளைஞர்களை வெகுவாக கவர்ந்தன. உதாரணத்திற்கு Polar V800 Triathlon, Blub Tube Clock, Watch-Me போன்ற கடிகாரங்களை குறிப்பிடலாம்.





## கணனிகள்

கைப்பேசிகளுக்கு அடுத்த இடத்தை பிடிப்பது கணனிகள் மற்றும் டேப்லட்கள் தான். 2014ம் ஆண்டில் ஒவ்வொரு நிறுவனமும் போட்டி போட்டுக் கொண்டு கணனி மற்றும் டேப்லட் தயாரிப்பில் களமிறங்கின. குறிப்பாக சம்சுங் நிறுவனம் உலகின் மிகப்பெரியதும், 110 அங்குல அளவுடையதுமான தொலைக்காட்சியினை அறிமுகம் செய்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மேலும் சோனி நிறுவனம் வளைந்த தொலைக்காட்சியை அறிமுகம் செய்தது

## வாகனம்



2014ம் ஆண்டில் சந்தைக்கு புதுவரவாக ஏராளமான நிறுவனங்கள் தங்கள் கார்களை அறிமுகப்படுத்தின. அதில் ஹோண்டா சிட்டி, ஹூண்டாய் எக்ஸெண்ட், டொயோட்டா எட்டியோஸ் கிராஸ், ஹோண்டா மொபிலியோ, ஃபியட் புண்ட்டோ எவோ, ஹூண்டாய் எலைட் ஐ20, டாடா ஸெஸ்ட் ஆகியவை மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்பட்டன.



## ஆராய்ச்சி

மருத்துவ ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் இந்த ஆண்டு வெளியான ஆய்வு முடிவுகள் வியப்பை ஏற்படுத்தின. குறிப்பாக சந்திரனில் வீடுகள் கட்டுவது குறித்த நாசாவின் அறிவிப்பு, புற்றுநோயை அழிக்கும் நானோ ரோபோடிக்ஸ் என்ற சிகிச்சை முறை மற்றும் சூரியனை விட மிகப்பெரிய மஞ்சள் நட்சத்திரம் ஆராய்ச்சிகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்து சென்றது என்றே சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சிகளை பெற்றுக்கொள்ள...

"Committed to Providing Quality Training"

# JRS COLLEGE OF BUSINESS AND HEALTH CARE INC.

## COURSES INFO



### Diploma Courses

- Community Service Work (52 Weeks)
- Pharmacy Assistant (46 Weeks)
- Personal Support Worker (24 Weeks)
- Accounting & Payroll Administration (45 Weeks)
- Early Childcare Assistant (36 Weeks)
- Health Office Administrator (40 Weeks)
- Computerized Accounting (24 Weeks)
- Office Assistant (16 Weeks)
- Accounting & Payroll Administration - Part time (50 Weeks)
- Personal Support Worker - Part time (35 Weeks)

### Certificate Courses

- Accpac
- Business Communication
- Cashier
- Bank teller
- Food Service Worker
- Payroll
- Food Handler
- Simply Accounting
- Ms Office
- Quick Books



### FINANCIAL AID

Financial Assistance available for those who qualify:

- Receiving EI(unemployment)
- Received EI with in last 3 years
- Received Maternity leave within 5 years
- Social Assistance recipient

**Midland & Finch**

4168 Finch Avenue East, Suite 330, Scarborough, ON M1S 5H6
Tel: (416) 292-2455 Fax: (416) 292-4255

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடன் தொல்லையா?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கை நழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agency யின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

## நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம் இனி

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப்பற்றி பெருமையாகவும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றிக் கவலையில்லை
- நண்பர்கள், உறவினர்களிடமிருந்து கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை



**V. SRI** | **Dir: 416.450.5011**

Certified Insolvency & Bankruptcy Counsellor

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கும் இலவச ஆலோசனைகளுக்கு SRI

**Credit Solution Centre** Trustee in Bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309, Scarborough, ON. M1H 3G5 **Tel : 416 439 0224**

Fax : 416 439 0226 | creditsolutioncentre@gmail.com | www.creditsolutioncanada.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Homelife Future Realty
## யின் விருது வழங்கும் விழா

செல்வா வெற்றிவேல் அவர்களது நிர்வாகத்தில் இயங்கும் **Homelife Future Realty** யினது விருது விழா புகைபடங்களின் தொகுப்பு



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EKURUVI – BIZTHA வழங்கும் வருடாந்த விருது வழங்கும் விழா

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தாயகத்திலிருந்து முன்னாள் கல்வி அதிகாரி திரு.நடராஜா அனந்தராஜ் அவர்களும், சிறப்புப் பேச்சாளராக தமிழ்நாட்டில் இருந்து டாக்டர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்ணன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பிரியாவின் கலைக்கோலங்கள் -2014

டிசெம்பர் மாதம் 23ம் திகதி ஆடல், பாடல், நாடகம் என்பவற்றின் தொகுப்பாக இடம்பெற்ற கலைக்கோவில் நிகழ்வின் புகைப்படங்கள்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிலி மருதையன் எழுதும்

# மாத்தி யோசி

தன்னம்பிக்கைத் தொடர்



ஒரு ஊரில் வயதான தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஐந்து மகன்கள். அவர்கள் அனைவருக்கும் திருமணமாகி விட்டது. ஐந்து மருமகள்களும் அந்தப் பெரிய வீட்டில் ஒரே கூட்டுக்குடும்பமாக வசித்தனர்.

குடும்பத் தலைவிக்கு அதிகம் வயதாகிவிட்டது. நோயும் நிறைய வந்துவிட்டது. அதனால் அந்தப் பெரிய குடும்பத்தின் நிர்வாகப் பொறுப்பை, யாராவது ஒரு பொறுப்புள்ள மருமகளிடம் ஒப்படைக்க நினைத்தாள். ஐந்து மருமகள்களில் யாரிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைப்பது என்ற குழப்பம்.

யோசித்தாள். ஒரு நல்ல யோசனை தோன்றியது.

ஒரு நாள் ஐந்து மருமகள்களையும் அழைத்து ஆளுக்கு ஒரு படி வேர்க்கடலையைக் கொடுத்தாள். "மருமகள்களே! ஆறு மாதம் சென்ற பிறகு இந்த வேர்க்கடலைகளைக் கேட்பேன். கொண்டு வந்து தரவேண்டும்!" என்றாள்.

மருமகள்களும் அதற்கு ஒப்புக்கொண்டனர்.

ஆறுமாதம் சென்றது.

குடும்பத் தலைவி தனது ஐந்து மருமகள்களையும் அழைத்து, தான் கொடுத்த வேர்க்கடலைகளைத் திருப்பிக் கேட்டாள்.

"ஆறு மாதம் வேர்க்கடலையை வைத்திருந்தால் புழுத்துப் போகாதா? அதனால் அவை வீணாகிவிடுமே. ஆகவே, அதை உடனே வறுத்து, குடும்பத்தோடு சாப்பிட்டு விட்டோம்!" என்றாள் மூத்த மருமகள்.

"நீங்கள் கொடுத்த வேர்க்கடலையை அப்படியே ஓர் அடுக்குப் பானைக்குள் போட்டு வைத்திருந்தேன். நீங்கள் கேட்கும்போது இதைத் திருப்பிக் கொடுப்பது தானே மரியாதை. இந்தாருங்கள்!" என்று அந்த ஒருபடி வேர்க்கடலையைத் திருப்பிக் கொடுத்தாள் இரண்டாவது மருமகள்.

"ஓர் ஏழைக் குடும்பம் பசியால் துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்க மனம் பொறுக்கவில்லை. ஆகவே, அவர்கள் மீது இரக்கப்பட்டு ஒரு படி வேர்க்கடலையையும் அவர்களுக்கு கொடுத்து விட்டேன்!" என்றாள் மூன்றாவது மருமகள்.

"ஊரிலிருந்து என் பெற்றோர் ஒருமுறை வந்திருந்தனரே, அவர்களிடம் தம்பி, தங்கைகளுக்குக் கொடுக்கும்படி கூறிக் கொடுத்து அனுப்பிவிட்டேன்!" என்றாள் நான்காவது மருமகள்.

ஐந்தாவது மருமகள் இரண்டு ஆட்களின் துணையோடு ஒரு மூட்டை வேர்க்கடலையைக் கொண்டு வந்து தன் மாமியாரின் முன்னே போட்டாள்.

"அத்தை! நீங்கள் கொடுத்த வேர்க்கடலையை ஆறு மாதங்கள் அப்படியே வைத்திருப்பதால் என்ன பயன்... என்ன லாபம்...? என்று யோசித்தேன். என் தந்தை வீட்டுத் தோட்டத்தில் விதைத்தால் ஒன்றுக்குப் பத்தாக விளைந்து லாபம் கிடைக்குமே என்று நினைத்தேன்.

நிலத்தைப் பண்படுத்தி ஒருபடி வேர்க்கடலையையும் விதைத்தேன். இந்த ஆறு மாதத்தில் அது ஒரு மூட்டை வேர்க்கடலையாகப் பெருகி விட்டது. இந்தாருங்கள்!" என்றாள். அதைக் கண்ட மாமியார் மகிழ்ந்து போனாள்.

பெரிய குடும்பத்தை நிர்வகிக்கும் தகுதியும், பொறுப்பும் அவளுக்கே உண்டு என்று தீர்மானித்தாள். உடனே பொறுப்பை ஐந்தாவது மருமகளிடம் ஒப்படைத்தாள்.

இதுபோன்று ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை அக்கறையுடனும் முழு மனதுடனும் செய்யுங்கள். நிச்சயம் பலன் கிடைக்கும். அது உங்களுக்கு பாரிய வெற்றிகளை பெற்றுக்கொடுக்கும்.

அதே வேளை உங்கள் பொறுப்புக்களை தட்டிக் கழிக்கும்போதோ அல்லது ஏனோ தானோ என்று இருக்கும் போது உள்ளதும் இல்லாமல் போகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்மீன் சிறுவர்கள்

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சீனாவில் சிறுவர்களுக்கு அவர்களது திறமைகளைக் காட்டும் போட்டி ஒன்று நடந்தது. அவ்வேளையில் சில சிறுவர்களின் அசாதாரண திறமைகளைக் கண்டு போட்டியாளர்கள் திகைத்துப் போனார்கள். சிறுமி ஒருத்தி மலராத பூக்களின் மொட்டுக்களின் மேல் தன் கரங்களைக் கொண்டு வந்து அம்மொட்டுக்களை மலரச் செய்தாள். இன்னொரு சிறுவனோ தனது கைகளை அசைத்துச் சற்றுத் தூரத்தில் மேசையின் மேல் இருந்த அப்பிளை மேலெழச் செய்து அந்தரத்திலே நிற்கச் செய்தான். இவ்வண்ணமாக ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் வெவ்வேறு அபூர்வமான ஆற்றல்களைக் காட்ட அவற்றைக் கண்ட ஆய்வாளர்கள் அதிசயித்தார்கள்.

சீனத்தின் இச்சிறுவர்களையிட்டு அதிகம் ஆச்சரியப்படாதவர்களும் சிலர் இருந்தார்கள். ஏலியன்கள் (வேற்றுக்கிரக மனிதர்கள்) பற்றி ஆய்வுகளைச் செய்யும் அவர்கள், உலகம் முழுவதும் இது போன்ற பல சிறுவர்கள் இலைமறைகாய்களாக இருக்கின்றார்கள் என்கிறார்கள். இப்படியான அபூர்வ திறன்களை உடைய சிறுவர்களை 'விண்மீன் சிறுவர்கள்' என அவர்கள் அழைக்கிறார்கள். இந்த விண்மீன் சிறுவர்கள் பற்றிய கண்ணோட்டத்துடன்தான் தூறலின் சாரலில் இம்முறை நனையப் போகிறோம்.

இந்த விண்மீன் சிறுவர்கள் அதிசயமான இயல்புகளைக் கொண்டிருப்பதற்கு அவர்களிடம் ஏலியன்களின் செல்வாக்கு அதிகம் இருப்பதே காரணம் என்கிறார்கள், வேற்றுக்கிரக மனிதர்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்பவர்கள். சிலரோ இன்னமும் மேலேபோய், இச்சிறுவர்கள் ஏலியன்களின் பிள்ளைகளாகவோ அல்லது அவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவோ இருக்க வேண்டும் என்கிறார்கள். இப்படியான சிறுவர்கள் இன்று நேற்றல்ல, மனித குலத்தின் ஆரம்ப காலம் முதலே இருக்கின்றார்கள் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

உலகின் பல்லின மக்களிடையேயும் விண்மீன் சிறுவர்கள் பற்றிய குறிப்புகள், கதைகள் ஏராளம் உள்ளன எனக் கூறும் இவ்வாய்வாளர்கள், குறிப்பிடும் சில விபரங்களைப் பாருங்கள். பைபிளின் ஆதியாகமத்திலே, தேவபுத்திரர்கள் மனுச குமாரத்திகள் அழகாக இருப்பது கண்டு அவர்கள் மேல் மையல் கொண்டு புவியிற்கு வந்து அவர்களுடன் உறவு கொண்டார்கள் எனவும் அம்மனுச குமாரத்திகளுக்கு வல்லமையான புத்திரர்கள் பிறந்தார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் குந்தியின் அறுவரும் விண்மீன் குழந்தைகள்தான். எங்களது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் வானவன் ஒருவன் வந்து சுதமதி என்பவளைக் கவர்ந்து சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடன் உறவு கொண்டபின் எங்கேயோ தனித்து விட்டுவிட்டுச் சென்றதான கதையும் உண்டு. கிரேக்க, உரோமக் கதைகளின் நாயகர்களைப் பாருங்கள், அப்பட்டமாக விண்மீன் சிறுவர்கள் என்பது தெரிகிறது. பல சமயங்களின் அடிப்படையே இந்த விண்மீன் சிறுவர்கள்தான். இப்படியாக உள்ளது ஏலியன் ஆய்வாளர்களின் விளக்கங்கள்.

செவ்விந்தியர்களில் 'கோபி' எனுமொரு இனக்குழு உண்டு. இவர்கள் நீலவிண்மீன் எனும் விண்மீனில் இருந்து ஏலியன் வந்து தங்கள் பெண் ஒருத்தியுடன் உறவு கொண்டான் என்றும் அவளுக்குப் பிறந்த குழந்தை தம்முடனேயே வளர்ந்ததெனவும் கூறுகிறார்கள். ஆனால் அக்குழந்தைக்கு 5 வயதானதும் ஓரிரவில் மாயமாக மறைந்துவிட்டது எனவும் கூறுகிறார்கள். அக்குழந்தையை நீலவிண்மீனுக்கே எடுத்துச் சென்றுவிட்டார்கள் எனக் கூறும் அச்செவ்விந்தியர், இக்குழந்தை போன்ற வேறுபதினாறு குழந்தைகளைப் புவியிலேயே விட்டுவிட்டார்கள் எனவும் கூறுகின்றார்கள். அக்குழந்தைகள் அதீத சக்தியுடையவர்களாக அவர்களிடையே வாழ்ந்து வந்தார்கள் எனவும் கோபி இனத்தவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சரி ஏன் இதெல்லாம்.? எங்களை எங்கள் பாட்டிலேயே விட்டிருக்கலாம்தானே? எதற்காக எம்மிடையே இப்படியான குழந்தைகளைத் தந்து திருவிளையாடல்களைச் செய்ய வேண்டும்? அதுவும் ஓரவஞ்சனையாக, ஒருசில குழந்தைகள், சிறுவர்கள் மாத்திரம் இப்படியான ஆற்றல்கள் உடையவராக எம்மிடையே வளர வேண்டும்? இவை போன்ற கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களை ஏலியன்கள் பற்றிய ஆய்வாளர்கள் வைத்திருக்கிறார்கள். இச்சிறுவர்கள்தான் வளர்ந்து மனித இனத்தை செப்பனிட்டு மனித இனத்தின் அறிவியல் நிலை வளர்வதற்கும் காரணராக இருந்தார்கள் என்கிறார்கள். அந்த விபரத்தையும் தெரிந்து கொள்வோம்.

எங்களில் பலருக்குத் தெரியாத விடயமொன்று, நியாண்டரல்கள் என்றொரு மனிதருக்குச் சகோதரமான இனம் புவியிலே இருந்தது. இரண்டு இலட்சம் ஆண்டு காலத்திற்கும் மேலாகப் புவியில் இருந்த அவ்வினம் அறிவியல் வளர்ச்சி அதிகம் இல்லாது போனதால், புவியில் ஏற்பட்ட மாற்றங்களில் நின்றும் தப்பிக்க முடியாது கிட்டத்தட்ட 30,000 ஆண்டின் முன்னர் முற்றாகவே அழிந்து விட்டதென ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அப்படியான அழிவில் இருந்து மனிதவினம் தப்பியது இப்படியான விண்மீன் சிறுவர்களினால் தானாம். விபரத்தைப் பாருங்கள். 55,000 வருடங்களின் முன்னர் புவியிற்கு வந்த, அறிவியல் நிலையில் உயர்ந்த ஏலியன்கள் மனிதரின் மூளையில ஒரு விகாரத்தை ஏற்படுத்திச் சிந்தித்தல், தொடர்பாடலை வளர்க்கும் ஆற்றல் போன்றவற்றை முடுக்கிவிட்டார்களாம். மேலும் புதுப் பரிமாணமெடுத்த மனித இனத்துடன் சில ஏலியன்கள் கலந்தும் விட்டார்களாம். அவர்களின் வாரிசுகளில் சிலர் அதீத ஆற்றல் கொண்ட, விண்மீன் சிறுவர்களாகி வளர்ந்து புவியில் மனித இனத்தைத் தக்க வைத்து, அறிவியல் நிலையினை மெதுமெதுவாக உயர்த்தி இன்றிருக்கும் நிலைக்கு மனிதரைக் கொண்டு வந்தார்களாம். ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றதுதான் எனவும் ஏலியன்கள் பற்றிய ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

கணிதமேதை ராமானுஜம் பற்றி எங்களிற் சிலருக்குத் தெரிந்திருக்கும். அவர் போன்ற கணிதமேதை இதுவரையில் புவியில் தோன்றவேயில்லை. எதிர்கால வானியற் பயணங்களில் உள்ள சிக்கல்களை விலக்கக் கூடிய தெளிவுகள் அவரது சமன்பாடுகளில் உள்ளனவாம். பேரண்ட இரகசியத்தைத் தீர்க்கும் 'இழைக் கொள்கை'யினை தெளிந்து கொள்வதற்கும் அவரது சமன்பாட்டின் தீர்வுகள்தான் உதவின என்கிறார்கள். இன்னமும் அவரது சமன்பாடுகள் ஏராளம் தீர்க்கப்படாமல், தீர்க்கப்பட முடியாமல் உள்ளன என கணிதவியலாளர்கள் கூறுகிறார்கள். தனது கண்டுபிடிப்பென, இங்கிலாந்தின் கணிதப் பேராசியர் ஹாட்லி என்பவர் கூறும் எங்களின் இராமானுஜம் கூட விண்மீன் சிறுவன்தான் என்கிறார்கள் ஏலியன் ஆய்வாளர்கள். இன்று வேற்றுக்கிரக மனிதர்கள் உண்டு என்பதற்கான சான்றாக விண்மீன் சிறுவர்களைக் காட்டுகின்றார்கள்.

இந்த விண்மீன் சிறுவர்கள் பற்றிய மேலதிக விடயத்தை உங்களிடமே விட்டு விடுகின்றேன். ஒருவேளை நீங்கள் கூட வல்லமை மிகுந்த விண்மீன் சிறுவர்களில் ஒருவராக இருக்கலாம். அல்லது உங்களுக்குத் தெரிந்தவர் கூட இருக்கலாம். அப்படியாக இருப்பின், தயவுடன் தூறலிற் சேர்த்து விடுங்கள். அத்தூறல், பலருக்குச் சாரலடிக்கும் அல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. PAUL HEALTHY LIFE CLINIC

## (Homeopathy and Acupuncture)

## Dr. போல் ஜோசேப்

BHMS (Ind.), HD (can.) RAP (can.)



### ஹோமியோபதி (ஜெர்மன் மருத்துவமுறை)
### அக்குபங்சர் (சீன மருத்துவமுறை)

B.H.M.S (Bachelor of Homeopathy Medicine and Surgery)
Qualified from Tamilnadu Dr. M.G.R. Medical University, Madras, india.
Doctor of Homeopathy, Doctor of Acupuncture

முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்
மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ கல்லூரிகள்.

முன்னாள் விரிவுரையாளர், விநாயகா மிஷன்ஸ்
பல்கலைக் கழகம் சேலம், இந்தியா.

மருத்துவ ஆலோசகர், சண்முகா மருத்துவ
ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.

இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும்,
சிறப்பு வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர்.

இலங்கையின் முதல் B.H.M.S
மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்.

கனடா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில்
பதிவு பெற்ற மருத்துவ நிபுணர்.

ஹோமியோபதி, அக்குபங்சர், அக்குபிரஷர், நாடிப் பரிசோதனை
தியானம், யோகா மற்றும் உளவியல் ஆலோசகர்.

பக்க விளைவுகளில்லாத, பத்தியமேதுமில்லாத, அனைத்து
நோய்களிலிருந்தும் சுகமடைந்து ஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

**Tel : 416 438 3939 Cell : 416 9864903 drjp63@yahoo.com**

**Unit 10, 1193 A, Brimley Rd., (Brimley & Brimorton) Scarborough M1P 3G5**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வீடுபேறு

**தூணி லழகியதாய் – நன்மாடங்கள்**
**தூய நிறத்தினதாய் – அந்தக்**
**காணி நிலத்தினிடை யோர் மாளிகை**
**கட்டித்தர வேண்டும்**

என்று பராசக்தியிடம் வேண்டுகோள் வைக்கும் பாரதி இதோடு விட்டானா? அதுதான் இல்லை. இன்னும் தேவைகள் அவன் கனவுக்குள் இருந்தது. நீர் வேண்டுமே. அருகினில் ஒரு கேணி கேட்டான். கீற்றும் இளநீருமாக தென்னைமரம் கேட்டான். ஒன்றல்ல பத்து பன்னிரண்டு. நல்ல முத்துச்சுடர் போல நிலவு கேட்டான். இன்னும் கேட்டான். அவன் தேவைகள் அப்படி. கனவுகள் பெரியது. நாம் இத்தோடு நிறுத்திக் கொள்வோம்.

நான் பிறந்தது ஒரு மண் வீட்டில். மிகப் பழைய வீடு. இந்த ஊரில் இன்று கல்வீட்டில் இருக்கும் பலர் இந்த வீட்டில்தான் பிறந்தார்கள் என்பார் அம்மா. அப்போது அவர் கண்களில் பெருமை மின்னலடிக்கும். ஆதி காலத்து வீடு. அம்மாவுக்கு தாய்வழி சீதனம். நாலு புறமும் மண் சுவர். பனையோலையால் வேயப்பட்டிருந்தது. நான் தவழ்ந்தது, நடந்தது, வீழ்ந்தது, எழுந்தது எல்லாம் பசும்சாணி இட்டு மெழுகிய கட்டாந்தரையில்தான். சில்லாலைப் பரியாரியாரின் கிரந்தி எண்னை பூசி, இளவெயில் பார்த்து பனையோலைத் தடுக்கில் கிடத்தி விட கைகால் அசைத்து தவழ்ந்தெழுந்தேன். ஒரு மாலைக் கருக்கலில், என் தம்பி, அவன் அறியா வயது. தீக் குஞ்சோடு விளையாடினான். திடீரென அது ஒரு அரக்கன் போல விரிந்தெழுந்தது. கூரையை பிய்த்துக்கொண்டு பறந்தது. எரிந்து சாம்பரானது வீடு. எச்சமாய் மிஞ்சியதில் ஒரு குடிசை போட்டோம். வளவின் நாலுபுறமும் கல்வீடுகள் அல்லவா! என் பெற்றோருக்கென்று கனவுகள் இல்லாமலா இருக்கும். அல்லது கனவு காண்பதற்கு பணம் வேண்டுமா? ஆசை இருந்தால் போதும். பெரியறை, சின்னறை, விருந்தினர் அறை, அடுக்களை, களஞ்சிய அறை, பெரிய கூடம் என ஒரு மாளிகை வீட்டுக்கான கனவு இருந்தது. கையில் இருந்தது மிடி மட்டுமே. அதே காணி ஈட்டுக்கு போனது. எடுத்த பணத்தில் எழுந்தது அந்தக் கனவின் ஒற்றை சிறகு. வெறும் இரண்டு அறைகள் மட்டும். அதுகூட குறைப் பிரசவந்தான். இருபத்தைந்து வருடங்கள் கழிந்து, ஊர் கலைந்து, நாம் ஊரை விட்டு கிளம்பும் வரையிலும், அந்தகனவு முற்றுப் பெறவே இல்லை. இருந்த பணத்துக்கு ஒரு அறையோடு கூடமும் அடுக்களையுமாய் சிறு வீடெழுந்திருந்தால், இருக்கும் வரையிலும் வசதியாய் வாழ்ந்திருக்கலாம்.

பனியிலும் குளிரிலும் வளர்ந்தோம். வளரவளர வீடுகள் மீது எனக்கு காதல் எழுந்தது. ஊரிலிருந்து கொழும்புவரை தெருக்கரை எல்லாம் தெரியும் வீடுகளில் அழகான வீடுகள் என்றால் என் மனம் அதில் லயிக்கும். கட்டட பணியில் வேலையை தெரிவு செய்தேன். எனக்காக வீட்டை என் கனவில் எழுப்பினேன். அது பாரதி கேட்ட வீட்டிலும் பாதிதான். இருந்தும் அதை சுமக்கத் தொடங்கினேன். பெரிய சுமை. என் காதலி தோள் சேர்ந்தாள். காதல் என்றால் விடுவார்களா? நான்கைந்தாண்டுகள் கழிய வெறிதனிந்து, ஒரு சிறு துண்டு காணி ஈந்தனர். என் தலைச்சுமையை இறக்கி வைக்கத் தொடங்கினேன். கனவு வளர்வது போல கடும் வேகமாய் வளரத்தொடங்கியது வீடு. பாதி வளர்ந்த காலத்தில் எழுந்து நடந்தது போர் மிருகம். சிறைப்பட்டுப் போனது சிற்றூர். பொறுக்கி எடுத்த பொருட்களுடன் மீளத் தலையில் சுமக்கத் தொடங்கினேன் என் கனவு வீட்டை. அந்த வீட்டின் சுமையுடனே அலைந்தேன். முடிவில் ரொரண்டோவில் தரை தட்டியது என் வாழ்க்கைப் படகு. கனடா வந்த பலர் வீடுவாங்கி விட்டார்கள். என் கணக்கில் அவை வீடல்ல. வீட்டிலே வளர்க்கும் ஆட்டுக் கடாக்கள். நல்ல விலை வந்தால் விற்றுவிட்டு அடுத்ததை வளர்ப்பார்கள். என் கணக்கில் வீடென்பது வியாபாரத்துக்கு உரிய பண்டமல்ல. வாழ்வதற்குரியது. ஆன்மீகத்தில் வீடுபேறு என்பதன் பொருள் எல்லாப் பிறவிகளையும் கடந்து முடிவில் இறையுள் சங்கமிப்பதென்பதாகும். அதாவது நிரந்தரமான இடம். நான் இக்கவிதையை எழுதிய காலத்தில் வீடு என் தலைச்சுமையில் இருந்தது. கவிதைக்குப் பின் பதினைந்து வருடங்கள் கழிந்துவிட்டுது. இப்பொழுது எனக்குள் கனவுகள் இல்லை. சுமைகள் இல்லை. வீடும் இல்லை. இருப்பது ஒன்றே. நின்மதியான வீடுபேறு.

## சுமை

உயரிப் பனையின் வட்டுக்குள்
குருவி கட்டிய கூடொன்றாய்
தலைச்சுமையில் இருக்கிறது
என் வீடு

உண்ணும் போதும் உறங்கும்போதும்
அன்றில்
மலங்கழிக்கும் போதுங்கூட
இறக்கிவைத்து ஓய்வுகொள்ள முடிவதில்லை
பலநாள் உழைத்து
என் வியர்வையில் குழைத்து
இணக்கிய வீடு நாலு புறமும்
சோலை வளவு

நடுவே வேப்ப மரத்தருகில்
பூவரசம் பூ நிறத்தில் அழகிய குடில்
உள்ளே
மெல்லக் காற்று உலாவி வர
அகலச் சாளரங்கள்
நிலாமுற்றம் முற்றத்தில் கொடிமல்லி
மேலே நிலவு
கூட என் காதலி

இத்தனை அடுக்கிருந்தும்
நிலையாய் ஓரிடத்தில் இறக்கிவைத்து
நான் ஓய்வுகொண்டு சுகித்திருக்க
ஒருசாண் நிலமுமின்றி
தலைச்சுமையில் சுமந்தபடி
வீட்டோடு அலைகிறேன்

தினமும்
யாரோ ஒருவனால்
எங்கோ ஒரு மூலைக்கு விரட்டப்பட்டு
காலத்தின் திசையில்
தேசாந்திரியாய் அலையும் அவல வாழ்வில்
எங்கே இறக்கிவைப்பது
என்வீட்டை?

••

கோடை 2002



**–கவிஞர் திருமாவளவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனஞ்சயன்



# மெய் பொருள்

எனது நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்திருந்த போது எனது மகள் என்னைப் பார்த்து "Appa, Don't make an ass of yourself" என்று கூறினாள். பதிலுக்கு நானும் "Sure" என்றேன். இதைக் கேட்டுக்கொண்டிருந்த எனது நண்பர் அதிர்ந்து விட்டார். "என்னடா உனது மகள் உன்னை கழுதை என்கிறாள், நீ சிரித்துக்கொண்டே பதில் சொல்கிறாய்" என்றார்.

உண்மையில் வீட்டில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, என் மேல் இருந்த அக்கறையில், "Don't make an ass of yourself" என்று குறிப்பிட்டிருந்தாள். இதற்கு "பிறர் சிரிக்கும்படி முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதீர்கள்" என்றுதான் அர்த்தம். இவ்வாறு பல ஆங்கில வார்த்தைகளுக்கு தவறான பொருள் கொள்ளப்படுகிறது. தமிழில் விலங்குகளுக்கு தனி இடம் உண்டு. சிவ பூஜையில் கரடி, பசுத்தோல் போர்த்திய புலி, தரையில் விழுந்த மீன் இப்படிப் பல உதாரணங்கள். ஆங்கிலத்திலும் அப்படித்தான். கழுதைதான் என்றில்லை வேறு பல விலங்கினங்களும் சில சமயம் நேரடி அர்த்தத்திலும் சில சமயம் வித்தியாசமான அர்த்தத்திலும் ஆங்கில மொழியில் பயன்படுத்தப்படுகின்றன.

சிலவற்றைப் படித்தவுடனேயே அவற்றின் பொருளை நம்மால் புரிந்து கொள்ள முடியும். Kill two birds with one stone என்றால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய். Birds of a feather flock together என்றால்; 'Birds of a feather' என்றால் ஒரே தன்மை கொண்டவர்கள் என்று அர்த்தம்.

அப்படிப்பட்டவர்கள் ஒரே மாதிரிதான் நடந்து கொள்வார்கள். என்பதுதான் அந்த வாக்கியத்தின் பொருள். "Like a red flag to a bull" என்றால் மிரள வைப்பது என்று அர்த்தம். "Social butterfly" என்றால் நிறைய நண்பர்கள் கொண்ட ஒருவரைக் குறிக்கும்.

ஆனால் வேறு சிலவற்றுக்கு அர்த்தம் கொஞ்சம் வித்தியாசமானவை.

"Chicken feed" என்றால் மிகக் குறைவான அல்லது மிக அற்பமான என்று பொருள். This amount is chicken feed for me.

"I smell a rat" என்றால் "something fishy" என்று அர்த்தம். அதாவது எல்லாமே நன்றாக நடப்பதுபோலத் தோன்றினாலும், தவறான ஏதோ ஒரு விஷயம் நடப்பதாக நீங்கள் யூகித்தாலோ அல்லது உங்கள் உள்ளுணர்வு அப்படிக் குரல் கொடுத்தாலோ you smell a rat.

'Going to the dogs' என்று ஒரு நிறுவனத்தைக் குறித்தால், அது நாய் உணவு தயாரிக்கும் நிறுவனம் என்று அர்த்தமில்லை. அதன் பொருளாதாரம் சரிந்து கொண்டே வருகிறது என்றுதான் அர்த்தம்.

Turned out to be a snake in the grass என்றால் அது துரோகத்தைக் குறிக்கிறது. அதாவது புல்வெளியில் உள்ள பாம்பு சட்டென்று புலப்படாது. அதுபோல He/She turned out to be a snake in the grass என்றால் நட்பாகப் பழகிய ஒருவர் சட்டெனத் துரோகம் செய்தால் அவரை இப்படிக் குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆனால் வேறு சிலவற்றுக்கு இப்படியெல்லாம் தர்க்கரீதியாக வியாக்கியானம் கொடுக்க முடியாது. எடுத்துக்காட்டு: "It is raining cats and dogs". என்றால் மழை கடுமையாகப் பெய்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம். "Keeping the wolf from the door" என்றால் போதிய பணம் (மட்டுமே) இருக்கிறது என்று பொருள். Kangaroo court என்றால் 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்பதுபோல் ஆளாளுக்குச் சட்டத்தை எடுத்துக்கொண்டு 'நீதி' வழங்குவது. "I got it straight from the horse's mouth" என்றால், நேரடியாகச் சம்பந்தப்பட்டவரிடமிருந்தே இதை நான் கேள்விப்பட்டேன் என்று பொருள்.

## புதிய வார்த்தைகள்

ஒவ்வொரு வருடமும் புதிய வார்த்தைகள் ஆங்கில அகராதியில் சேர்த்துக்கொள்ளப்படும். அந்த வகையில் சில வார்த்தைகள்... "Bromance - Brother, Romance ஆகிய இரு வார்த்தைகளின் சேர்க்கைதான் Bromance. அதாவது இரு ஆண்கள் ஒருவரோடொருவர் அதிக நேரம் செலவழிக்க விருப்பப்பட்டால் அதை bromance எனலாம். மனம் விட்டுப் பேச முடிகிறது, இன்னொருவரைப் புரிந்து கொண்டு ஆதரவாக இருப்பது என்பது இதில் அடக்கம். மற்றபடி இதில் செக்ஸ் கோணம் எதுவும் கிடையாது.

TORTUROUS – TORTUOUS இரண்டுமே 'Torquere' என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து உருவானவை. இந்த வார்த்தைக்கு 'வளைத்தல்' என்று பொருள்.

Tortuous என்ற வார்த்தை இந்த நேரடி அர்த்தத்தைத் தருகிறது. அதாவது பேச்சில் நேரடியாக இல்லாமல் வளைத்து வளைத்துப் பேசும்போதோ, மறைமுகமாகக் குத்திக் காட்டும்போதோ அதை Tortuous speech என்று சொல்வார்கள். மிக நீளமான ஒரு சாலை. எக்கச்சக்கமான சிறுசிறு வளைவுகளையும் கொண்டிருந்தால், அதை Tortuous road என்று கூறுவதுண்டு.

complatin – ஒருவரைப் பற்றி புகார் சொல்வதுடன் அவரை வெறுத்தல் என்று பொருள்படும்.

Upstander – மற்றையவர்களைப் பாதுகாப்பவரை அல்லது அவர்களுக்காக போராடுபவரைக் குறிக்கும்.

honkenbonkers – மிகவும் அற்புதமானது என்று பொருள்படும். (Awesome / Amazing)

snough – தும்மலுடன் கூடிய இருமல். தும்மலும் இருமலும் ஒரு நேரத்தில் வரும்போது இப்படிக் குறிப்பிடுவர்.

sheeple – மற்றவர்களைப் பின்பற்றுபவர்கள். (Sheep + People). தமக்கென்றோர் கருத்து அல்லது தமக்கான கருத்து அற்றவர்கள். எப்போதும் மற்றவர்களைப் பின்பற்றுபவர்கள்.

askhole - எப்போதும் ஆலோசனை கேட்பவர். ஆனால் அதைப் பின்பற்றாதவர்கள். உங்களிடம் ஆலோசனை கேட்டு உங்கள் சேரத்தை வீணடித்துவிட்டு அந்த ஆலோனையில் ஒரு துளியைக்கூட செய்யாதவர்.

elevator speech - அடிப்படைத் தகவல்களை கோடிட்டுக் காட்டும் குறுகிய உரை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மருத்துவ மகத்துவம்

டாக்டர் போல் ஜோசெப்
முன்னாள் பேராசிரியர் :
தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரிகள்
ஹோமியோபதி மருத்துவம், அக்குப்பங்சர் சிகிச்சை சிறப்பு நிபுணர்.

**கேள்வி : எனது குடும்ப வைத்தியர் என்னிடம் Pap Test செய்ய வேண்டும் என்று சொன்னார். அப்படியென்றால் என்ன? ஏன் எதற்காக செய்யவேண்டும்?**

**திருமதி செல்வி**

ஆம் சகோதரி. பெண்கள் மத்தியிலே அடிக்கடி பேசப்படுகின்ற ஒரு வார்த்தை இந்த PAP Test. இதில் PAP என்பது இதைக் கண்டுபிடித்த மருத்துவ விஞ்ஞானி Papanicolaou என்பவரின் முதல் மூன்று எழுத்துதான். இதை இருபது வயது முதல் அறுபது வயதுள்ள பெண்கள் மருத்துவரின் ஆலோசனையோடு அவசியம் செய்துகொள்வது நல்லது. சுருங்கச் சொல்லின் திருமணம் ஆனவரோ இல்லையோ தாம்பத்தியம் ஒருமுறையேனும் செய்துகொண்டவர்கள் கண்டிப்பாக இந்தப் பரிசோதனை செய்ய வேண்டும்.

கருப்பையின் வாய்ப்பகுதியில், இதை சிலர் கருப்பையின் கழுத்தப் பகுதி (Cervix of the Uterus) என்றும் சொல்வதுண்டு. இந்தப் பகுதியில் உண்டாகும் ஒருவிதப் புற்றநோயின் ஆரம்பத்தன்மையை கண்டுபிடிக்கும் பரிசோதனை (Pre Cancerous Screening Test). அதுமட்டுமல்ல வேறுசில தொற்றுக்களையும் இதன்மூலம் கண்டறிந்து கொள்ளலாம்.

இந்தப் பரிசோதனை 3-5 வருடங்களுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் செய்துகொள்வது நல்லது. ஒருமுறை செய்யும் போது மாறுபட்ட முடிவு தெரிந்தால் மீண்டும் ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்குள்ளாக செய்து பார்ப்பது அவசியமாகும்.

இது ஒரு வலியற்ற எளிமையான பரிசோதனையாகும். முழுமையாக கருப்பையை அகற்றிய பெண்களுக்கு இந்தப் பரிசோதனை அவசியமில்லை. ஆனால் பகுதியாக அகற்றியவர்கள் அதாவது கருப்பையின் வாய்ப்பகுதியை அகற்றாமல் மற்றப்பகுதி கருப்பையினை அகற்றியவர்களுக்கும் இந்தப் பரிசோதனை அவசியமாகின்றது. மாதவிலக்கு காலங்கள் தவிர மற்ற எல்லா நேரத்திலும் கர்ப்ப காலத்திலும் கூட இதைச் செய்துகொள்ளலாம்.

இந்தப் பரிசோதனையில் முதல்முறை தவறான முடிவுகள் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. அதனால் சில மாதங்களின் பின்பு மீண்டும் மீண்டும் பரிசோதனை செய்து சரியா தவறா என்பதை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். அப்படியும் பாப் பரிசோதனை உறுதியானால் அடுத்து Colposcopy எனும் சிறப்புப் பரிசோதனை மூலம் உறுதி செய்து கொள்ளலாம். அதுமட்டுமல்ல பெண்களின் பிறப்பு உறுப்பில் சிறிய கட்டிகள் அல்லது மருக்கள் போன்ற சிறிய உண்ணிகள் போன்றவை காணப்பட்டாலும் மருத்துவரை அணுகி அவற்றை காண்பித்து பாப் பரிசோதனை உட்பட மற்றப் பரிசோதனைகளும் செய்து கொள்வது அவசியம்.

கருப்பையின் வாய்ப் பகுதியின் புற்றுநோய் வருவதற்கு உதாரணமாக புகைப்பழக்கம், நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு, கருத்தடை மாத்திரைகள், பெண் உறுப்பின் சுகாதாரமற்ற நிலை மற்றும் கருத்தடை சாதனங்கள் போன்ற பல காரணிகள் இருந்தாலும் இன்று மருத்துவ உலகம் பயந்து நடுங்கும் பலவிதமான வைரஸ் கருமிகள் பல உண்டு. அதில் ஒன்றுதான் HPV என்ற Human Papilloma Virus.

இந்த HPV வைரஸ் தான் 70 சதவீகிதமாக கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு காரணமாகிறது என்பது மருத்து விஞ்ஞானத்தில் நிருபணமாகியுள்ளது. அதுதான் பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் பிறப்பு உறுப்புகளில் உண்டாகும் Warts என்கிற சிறிய உண்ணிகளின் வளர்ச்சிக்கு காரணமாகிறது. இப்படி இருந்தால் உங்கள் மருத்துவரிடம் சென்று உறுதி செய்து கொள்வது நன்று.


அமெரிக்காவில் மட்டும் 80 பில்லியன் பேருக்கும்மேல் இந்தத் தொற்று இருக்கிறதாம். ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 14 மில்லியன் பேருக்கு தொற்று உண்டாக வாய்ப்புள்ளதாம். கனடாவிலும் மோசமான நிலைதான். பெண்கள் ஆராய்ச்சி கழகத்தின் அறிக்கை அதிர்ச்சி அளிக்கிறது. கனடிய மக்கள் தொகையில் சுமார் 30 சதவீதமானவர்கள் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த வைரஸ் உங்களுக்குள் இருக்கிறதா இல்லையா என்பதை நூறுவீதம் உறுதி செய்துகொள்ள பரிசோதனைகள் இல்லையென்றாலும், பெண்களுக்கு HPV-DNA Test செய்வதன் மூலமாக தெரிந்துகொள்ளலாம்.

இது எப்படிப் பரவுகிறது என்றால் ஆச்சரியப்படுவீர்கள். இந்தத் தொற்று இருக்கிறவரிடம் பாலுறவு கொள்வதால் மற்றவர்களுக்கும் பரவுகிறது. தெரிந்தவர்களோ, தெரியாதவர்களோ எங்களுக்குத் தெரியாது அவர்களுக்கு இந்த வைரஸ் இருக்கிறதா என்று. ஏனென்றால் நீண்ட நாட்களாக இந்த வைரஸ் உடலுக்குள்ளே இருந்தாலும் வெளியில் எந்தவிதமான குணங்குறிகளும் தெரியாது. அதனால் GPV இருக்கிறதா இல்லையா என்பதை கண்டுபிடிப்பது கடினம்.

ஆணுறை பயன்படுத்துவதால் தடுக்க முடியுமா என்றால் இல்லையென்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். HPV க்கு எதிரான Vaccines ஓரளவு வருமுன் காப்பதற்கு உதவும் என்கிறார்கள். வந்தபின் வாக்சின் பயன்படாது.

வாசகர்களே! உங்கள் மருத்துவக் கேள்விகளை தூறலுக்கு அனுப்பி வையுங்கள். editorial@thooralonline.com - Fax : 416 273 7606


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் கவர்ச்சிகரமான ஆண்!





தமிழ் சினிமாவில் மோஸ்ட் ஹாண்ட்சம் ஹீரோ என்றால் சூர்யா தான். இவர் குறிப்பாக வாரணம் ஆயிரம் படத்திற்காக வைத்த 6 பேக்ஸில் பல பெண்கள் மனதை கவர்ந்தார். தற்போது இங்கிலாந்தை சேர்ந்த "ஈஸ்டர்ன் ஐ"வார பத்திரிகை ஒன்று ஆண்டு தோறும் ஆசியாவின் கவர்ச்சிகரமான ஆண்கள் 50 பேரை தேர்ந்து எடுத்து வெளியிட்டு வருகிறது.

இதில் இந்தியாவில் ஐந்தாவது இடத்தில் ஷாகித் கபூர், 8-வது இடத்தில் ரன்பீர் கபூர், மற்றும் பத்தாவது இடத்தில் சல்மான்கான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த பட்டியலில் 13-வது இடத்தில் ஷாருக்கானும், 22-வது இடத்தில் ரன்வீர் சிங்கும், நடிகர் சூர்யா 50-வது இடத்திலும் உள்ளார்.

# மோகன்லாலுக்கு பத்மபூஷன்விருதுக்கு எதிர்ப்பு

அண்மையில் மோகன்லாலுக்கு பத்மபூஷன் விருது வழங்க கேரள அரசு சிபாரிசு செய்திருந்தது. ஆனால் மோகன்லாலுக்கு பத்மபூஷன் விருது வழங்ககூடாது என்று விலங்குகள் பாதுகாப்பு அமைப்பு எதிர்த்து வருகிறது. ஏனென்றால் கேரள, வனத்துறையினர், இரு வருடங்களுக்கு முன்பு யானை தந்தங்களை சட்ட விரோதமாக பதுக்கி வைத்திருப்பதாக நடிகர் மோகன்லால் மீது வழக்கு பதிவு செய்திருந்தனர்.



அவரது வீட்டில் சோதனை நடத்தி 13 ஜோடியானை தந்தங்களையும் கைப்பற்றினார்கள். இதுபற்றிய விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது. இதுபற்றி அந்த அமைப்பின் செயலாளர் பி.கே. வெங்கடாசலம் கூறுகையில், யானை தந்தங்கள் வைத்துக் கொள்வதற்கு வனத்துறையிடம் இருந்து முறையான லைசென்ஸ் பெற வேண்டும். ஆனால் மோகன்லால் இதுவரை வாங்கவில்லை. இந்த வழக்கில் மோகன்லால் முக்கிய குற்றவாளியாக இருக்கிறார். இது சம்பந்தமாக வழக்கு கோர்ட்டில் நிலுவையில் இருக்கிறது. எனவே அவருக்கு உயரிய பத்மபூஷன் விருதை கொடுக்க கூடாது என்று கூறியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் துணுக்குகள்

தோல்விகளைக் கண்டு துவளாதீர்! மில்லியன் கணக்கான விந்தணுக்களின் வெற்றி பெற்றது நீங்கள்ஒருவரே! பயாலஜிப்படி சாதிக்கப் பிறந்தவர் நீங்கள்!.

கைரேகை, ஜோசியம் பார்ப்பவர்கள் ஆண்களுக்கு வலது கையும் பெண்களுக்கு இடது கையும் பார்த்து பலன் கூறுவது வழக்கம்!.

தலைவா படத்துக்காக தற்கொல பண்ணிக்கிறது ரஜினி படத்துக்காக மண்சோறு திங்கிறது போன்றவை Celebrity Worship Syndrome என்ற மனநோய் வகையறாக்கள்!!.

உங்களுடைய கை நகங்கள் 24 மணி நேரத்தில் 0.00007 அங்குலம் வளர்கின்றன!.

ஆண்களாக பிறந்து பெண்ணாக உணருபவர்கள் "திருநங்கை"

பெண்ணாக பிறந்து ஆணாக உணருபவர்கள் "திருநம்பி"!.

ஐன்ஸ்டீனின் கணிப்புப்படி உலகில் தேனீ இனம் முற்றிலும் அழிந்து போனால் அன்றிலிருந்து 4 வருடத்திற்குள் மனித இனம் அழிந்து போகுமாம்!!.

இங்கிலாந்தைச் சேர்ந்த மாத்யூ கிரீன் என்பவர் இதயமேயில்லாமல் இயந்திரங்களின் உதவியால் 2 வருடங்கள் வரை வாழ்ந்திருக்கிறார்!.

மொகலாயப் பேரரசர் பாபர் உயிரிழக்கும் போது தன் மகன் ஹுமாயூனிடம் "இந்தியாவில் உள்ள இந்துக்களைத் துன்புறுத்தாதே!" என்றாராம்!.

கூகுள் என்ற சொல் ஒரு கோடி பூஜ்ஜியங்களைக் கொண்ட எண்களுக்கான பொதுவான பெயர் ஆகும்!.

ஹிட்லர் ஒரு சைவ விரும்பி! மேலும் மிருகவதையை தீவிரமாக எதிர்ப்பவர்!!.

பறவை இனங்களில் ஆந்தை மட்டுமே கண் சிமிட்டும் போது மேல் இமையை மூடுகிறது மற்ற அனைத்து பறவைகளும் கண்களை சிமிட்டுவது கீழ் இமையால்தான்!.

15.23 நிமிடத்தில் லேப்டாப்பை கழற்றி மாட்டி இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸில் 8 வயது கோவை சிறுமி இடம் பிடித்துள்ளார்!.

எடிசனின் உயிர் பிரியும் போது கடைசியாக "விளக்கை எரியவிடுங்கள் என் ஆவி பிரியும்போது வெளிச்சமாக இருக்கட்டும்!" என்றாராம்!!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மைக்ரோசாப்ட் நிறுவனம் தொடங்கப்பட்டு 39 வருடம் முடிகிறது. விண்டோஸ் 1.0 இப்பொழுது விண்டோஸ் 8 வெளியிடப்பட்டு சக்கை போடு போடுகிறது. அத்துடன் இவர்கள் வெளியிட்ட விண்டோஸ் எம், மற்றும் விண்டோஸ் விஸ்டா மட்டுமே தோல்வியுற்றது. 1955ஆம் ஆண்டு அக்டோபர் 28ந்தேதி அமெரிக்காவின் சியாட்டோ நகரில் பிறந்தார் வில்லியம் ஹென்றி கேட்ஸ். அவருக்கு 2 சகோதரிகள், தந்தை வழக்கறிஞர் தாயார் பள்ளி ஆசிரியை. ஆரம்பித்தில் மிகவும் கூச்ச சுபாவம் உடைய பில்கேட்ஸ் தனிமையை அதிகம் விரும்புவார். எப்போதுமே ஏதாவது ஒரு சிந்தனையில் ஈடுபட்டிருப்பார். சக வயது மாணவர்கள் விரைவுக் கார்களையும் திரைப்படங்களையும் பற்றி எண்ணிக்கொண்டிருக்க பில்கேட்ஸ் மட்டும் எண்களைப் பற்றியும் அவற்றின் மந்திரம் பற்றியும் சிந்தித்து கொண்டிருப்பார். வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு சிறு வயதிலேயே துளிர்விடத்தொடங்கியது.

இரவு உணவுக்குப் பின் குடும்பமாக சேர்ந்து ஃபிரிட்ஜ் என்ற விளையாட்டை ஆடுவார்கள். எனவே ஒவ்வொரு இரவும் வெற்றி பெறுவதைப் பற்றியே நினைப்பார் பில்கேட்ஸ். அவருக்கு 13 வயதானபோது அவரது நண்பரான ஃபால் எலனுடன் சேர்ந்து கணனிக்கான மென்பொருள் எழுதக் கற்றுக் கொண்டார் ரிஸ்க் என்ற கணனி விளையாட்டையும் உருவாக்கினார். தன் நண்பருடன் சேர்ந்து கணனியில் பல மணி நேரம் செலவிட்டு மென்பொருளில் உள்ள குறைகளைக் கண்டறிவார் ஃபில்கேட்ஸ். 1973ல் ஹாவர்ட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கு இருந்த காலத்தில்தான் கணனிகளுக்கு மென்பொருள் எழுதப் பயன்படும் Basic என்ற மொழியை உருவாக்கினார். 2 ஆண்டுகள் கழித்து 1975ல் தன் நண்பன் ஃபால் எலனுடன் இணைந்து ஃமைக்ரோசாப்ட் என்ற நிறுவனத்தை தொடங்கினார்.

1977ல் பட்டப்படிப்பை முடிக்காமலேயே ஹாவர்டை விட்டு வெளியேறி நிறுவனத்தில் முழுக் கவனம் செலுத்தத் தொடங்கினார். இல்லக் கணினிகளுக்குத் தேவையான மென்பொருளை உருவாக்குவதில் இருவரும் கவனம் செலுத்தினர், 1981ல் IBM கணனிகளுக்கான MS-DOS என்ற ஆப்பரேட்டிங் சிஸ்டம் அதாவது இயங்குதளத்தை அறிமுகம் செய்தார், அதன் சிறப்பை எடுத்துக்கூறி மற்ற கணினி தயாரிப்பாளர்களையும் MS-DOS இயங்குதளத்தைப் பயன்படுத்துமாறு ஊக்கமூட்டினார் ஃபில்கேட்ஸ்... அது ஏற்றுக்கொள்ளப்பட்டு 80களில் கணினிகள் பெருமளவில் விற்பனையாகத் தொடங்கின. விற்பனையாகும் ஒவ்வோரு கணினிக்கும் அதன் இயங்குதளத்திற்கான லைசென்ஸ் கட்டணம் கிடைப்பதால் ஃமைக்ரோசாப்ட்டின் வருமானம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது. மாறிவரும் உலகில் மாறாதிருப்பது மாற்றம் ஒன்று மட்டுமே என்ற சொற்றொடர் கணனி உலகத்திற்குதான் மிகவும் பொருந்தும். அதை உணர்ந்துதான் போட்டியை எதிர்பார்த்துதான் ஃமைக்ரோசாப்ட் நிறுவனமும் புதிய புதிய மென்பொருள்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. IBM கணினிகளுக்கு போட்டியாக மவுஸ் கொண்டு இயக்கும் ஆப்பிள் கணினிகள் அறிமுகமானபோது அது மிகவும் பிரபலமடையும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். உலகின் மொத்த கவனமும் ஆப்பிள் பக்கம் திரும்பியபோதும் அசரவில்லை பில்கேட்ஸ். அசுர வேகத்தில் ஃமைக்ரோசாப்ட் விண்டோஸ் என்ற இயங்குதளத்தை அறிமுகம் செய்தார் அது இமாலய வெற்றிப் பெற்றது.

# உழைப்பால்

## உயர்ந்த ஒரு மாமனிதர்!




அதுமட்டுமல்லாமல் 90களின் தொடக்கத்தில் பிரபலமாகத் தொடங்கியிருந்தது இணையம். அந்த இணையத்தில் உலா வர உதவும் நெட்கேப்ஸ் என்ற மென்பொருளைத் தயாரித்து விற்பனை செய்தார் மாக் ஆண்டர்சன் என்பவர். இணையத்தின் எதிர்காலத்தை நன்கு புரிந்து கொண்ட பில்கேட்ஸ் அந்த மென்பொருளை விலைக்கு வாங்க விரும்பினார், ஆனால் அதை விற்கவோ ஃமைக்ரோசாப்ட்டுடன் இணையவோ மாக் ஆண்டர்சன் மறுக்கவே மீண்டும் தன் மந்திரத்தை நிகழ்த்திக் காட்டினார் ஃபில்கேட்ஸ். நெட்கேப்ஸ்க்கு இணையான இண்டர்நெட் எக்ஸ்புளோரர் என்ற இணையச் செயலியை உருவாக்கி அதனை புதியக் கணனிகளுடன் இலவசமாக விநியோகம் செய்தார். அதனால் விலைக்கு விற்கபட்டு வந்த நெட்கேப்ஸின் இணைய ஆதிக்கம் மங்கத் தொடங்கியது அதுமாதிரியான விற்பனை தந்திரம் முறையற்றது என்று மைக்ரோசாப்ட்டின் மீது நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டன ஆனால் ஃபில்கேட்ஸை அசைக்க முடியவில்லை.

என்ன வந்தாலும் பில்கேட்ஸுக்கே வெற்றி கிடைக்கும், ஏனென்றால் பில்கேட்ஸின் போட்டியாளர்கள் குறி வைப்பது பெரிய பெரிய நிறுவனங்களை ஆனால் பில்கேட்ஸ் குறி வைப்பதோ சாமானியர்களை என்று கூறுகிறது ஒரு குறிப்பு. 1999ல் Business at the speed of thought என்ற நூலை எழுதினார் ஃபில்கேட்ஸ். 25 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு 60 நாடுகளில் விற்பனையாகிறது அந்த நூல். அதற்குமுன் அவர் எழுதிய The road ahead என்ற நூலும் அதிகமாக விற்பனையாகிறது. 2 நூல்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் முழு தொகையையும் அற நிதிக்கு வழங்கியிருக்கிறார் பில்கேட்ஸ். மெலிண்டா ஃபிரெஞ்சு கேட்ஸ் என்பவரை 1994 ஆம் ஆண்டு மணந்து கொண்டார் பில்கேட்ஸ். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பில்கேட்ஸும் மனைவியும் இணைந்து பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையை நிறுவி இதுவரை சுமார் 27 பில்லியன் அமெரிக்க டாலரை சமூக நலப் பணிக்காக வழங்கியிருக்கின்றனர். குறிப்பாக உலக சுகாதாரம், கல்வி, தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு அந்த நன்கொடைப் பயன்படுத்தப்படுகிறது. இன்னும் சுமார் பத்து ஆண்டுகள் ஃமைக்ரோசாப்ட்டின் தலைமை பொறுப்பில் இருந்துவிட்டு அதன்பிறகு தனது 95 சதவிகித சொத்தை அறப்பணிகளுக்கு கொடுக்கப்போவதாக கூறியிருக்கிறார் உலகின் ஆகப் பெரிய பணக்காரரான ஃபில்கேட்ஸ்... நாமும் வாழ்க்கையில் நம்பிக்கையோடும் விடாமுற்சியோடும் போராடினால் கண்டிப்பாக

"பயிற்சியும் முயற்சியும் இருந்தால் ஒவ்வொரு மனிதனும் சாதனையாளனே!

–கிருஷாந்தி மதிவதனன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியப்படாத GOOGLE இன் சேவைகள் !!

## கூகுள் திங்க் (Google Think)

கூகுள் நிறுவனத்திடம் இருந்து, தங்கள் வர்த்தக செயல்பாடுகளுக்கான ஆலோசனையை இந்த சேவை மூலம் அனைவரும், குறிப்பாக விளம்பர பிரிவு மற்றும் அதனைப் போல சேவைத் தளங்களில் இயங்குபவர்கள், பெற்றுக் கொள்ளலாம். இங்கு கிடைக்கும் பல ஆய்வுகள், ஆய்வு முடிவுகள், நேர்காணல்கள் ஆகியவை பலரது வாழ்வில் புதிய திருப்பத்தினைத் தந்ததாகப் பலரும் கூறி உள்ளனர்.

## கூகுள் சவுண்ட் சர்ச் (Google Sound search):

இது ஒரு விட்ஜெட் எனப்படும் அப்ளிகேஷன். நம்மைச் சுற்றி இசைக்கப்படும் இசை மற்றும் பாடல்களை அறிந்து அடையாளம் கொள்ள இது உதவி புரிகிறது. கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து, அடையாளம் காணப்பட்ட பாடல்களை விலைக்கு வாங்க முடியும். அடையாளம் காணப்படும் பாடல்களின் பட்டியலை உருவாக்கி வைத்து, பின்னொரு நாளில் கேட்கலாம் மற்றும் வாங்கலாம்.

## கூகுள் ஆர்ட் ப்ராஜக்ட் (Google Art Project):

இது கூகுள் தரும் ஸ்ட்ரீட் வியூ போன்றதாகும். மியூசியம்,கலை அரங்கங்கள் ஆகியவற்றிற்கு, வாடிக்கையாளர்கள், இணைய வெளியிலேயே சுற்றுலா மேற்கொள்ளலாம். கலைத் துறையில் முன்னணியில் ஈடுபடும், 40 நாடுகளைச் சேர்ந்த 151 வல்லுநர்களுடன் இணைந்து இந்த தளத்தினை கூகுள் அமைத்துள்ளது. மியூசியம் நிர்வாகிகளிடமிருந்து அளப்பரிய தகவல்களும், கூகுள் நிறுவனத்தின் நவீன தொழில் நுட்பமும் இந்த தளத்தில் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு நல்லதொரு அனுபவத்தினைத் தருகின்றன.

## என்கிரிப்டட் சர்ச் (Encrypted Search)

தேவையானவற்றைத் தேடுவதற்கு இது ஒரு வேகமான தேடுதளம். இந்தத் தளத்தின் முகவரி encrypted. google.com. வங்கிகள் பயன்படுத்தும் Secure Socket Layers (SSL) பாதுகாப்பான கட்டமைப்பினை இந்த தளம் பயன்படுத்துகிறது. 2010 மே மாதம் முதல் இந்த சேவை வாடிக்கையாளர்களுக்குத் தரப்பட்டு வருகிறது.

## கூகுள் ஸ்கீமர் (Google Schemer)

தாங்கள் மேற்கொள்ள வேண்டிய வேலைகளைப் பகிர்ந்து கொண்டு, அவற்றை மேற்கொள்வதற்கான வழிகளைத் தெரிந்து கொள்ள இந்த தளம் உதவுகிறது. மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைகள் எது வேண்டுமானதாகவும் இருக்கலாம். ஓர் அருங்காட்சியகம் செல்லுதல், நண்பர்களுடன் கூட்டாகக் கலந்துரையாடல், வார இறுதிக்கான சுற்றுலா செல்ல இடம் தேர்ந்தெடுத்தல் என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஏற்கனவே இது போல கலந்துரையாடப்பட்டு வரையறை செய்யப்பட்ட திட்டங்களும் இதில் கிடைக்கும்.

## பில்ட் வித் குரோம் (Build with chrome)

ஆஸ்திரேலியா நாட்டு நிறுவனமான லெகோவுடன் இணைந்து கூகுள் அமைத்த தளமே பில்ட் வித் குரோம். இது ஒரு நவீன இணைய தொழில் நுட்பமாகும். இங்கு பிரவுசர் வழியாக, முப்பரிமாணப் படங்களைக் காணலாம். பயனாளர்களும் தங்களின் முப்பரிமாண உருவங்களை அமைக்கலாம். இதில் செயலாற்றுவது மிகவும் வேடிக்கை நிறைந்ததாக உள்ளது.

## கூகுள் மாடரேட்டர் (Google Moderator)

பலவகைத் தலைப்புகள் குறித்து இங்கு இலவசமாகக் கலந்து ஆலோசிக்கலாம். கருத்துக்களை வரவேற்று, எந்த ஒரு வாடிக்கையாளரும், புதிய இழை ஒன்றை உருவாக்கலாம். கேள்விகளைக் கூடப் பதியலாம். இந்த தளத்திற்கு வரும் எவரும் இது குறித்து கருத்து தெரிவிக்கலாம். குறிப்பிட்ட கருத்தை வரவேற்று அதற்கு வாக்களிக்கும் வசதி கூட இதில் உள்ளது. முதல் கேள்விகள், நீல நிறப் பின்னணியில் மையக் கேள்வியாகக் காட்டப்படும். மற்றவர்கள் இது குறித்து தகவல் தெரிவிக்கலாம். ஒரு கருத்துரு அல்லது தலைப்பின் கீழ் துணைப் பிரிவுகளையும் உருவாக்கலாம்.

## பவர் சர்ச்சிங் வித் கூகுள் (Power searching with Google)

தேடுதல் தளம் தான், கூகுள் நிறுவனத்தின் வலிமையே. அந்த வகையில், எப்படி சிறப்பாக நம் தேடுதலை அமைத்துக் கொள்ளலாம் என்று, இந்த தளத்தில், கூகுள் நமக்கு டிப்ஸ் தருகிறது. இணையத்திலேயே பயிற்சியும் தரப்படுகிறது. இதன் மூலம் மேம்படுத்தப்பட்ட வழிகளை, தேடுதலுக்கென நாம் தெரிந்து கொள்கிறோம்.


## கூகுள் ஸ்காலர் (Google Scholar)

இலக்கியம், ஆய்வு கட்டுரைகள், கல்வித் துறை சார்ந்த பதிப்புகள், இணைய வெளி தகவல் சேமிப்புகள், ஆய்வுச் சுருக்கங்கள் மற்றும் நீதிமன்றம் வெளியிடும் கருத்துகள் ஆகியவை குறித்து உரையாட இது ஒரு நல்ல தளம். மிகப் பெரியதாக விரிந்து இருந்தாலும், இதனை அணுகுபவர்கள், தங்களுக்குத் தேவையானதை மிக எளிதாகப் பெற்று இயங்கலாம்.

## கூகுள் மார்ஸ் (Google Mars)

அரிசோனா பல்கலையில் உள்ள, நாசா விண் வெளி ஆய்வு விஞ்ஞானிகளுடன் கூட்டாக இணைந்து, சிகப்பு கிரகமான செவ்வாய் குறித்த வரைபடம் ஒன்றை கூகுள் தயாரித்துள்ளது. இது ஏறத்தாழ கூகுள் எர்த் போன்றதாகும். அதன் மூலம் நாம் எப்படி பூமியின் அனைத்து பாகங்களுக்கும் சென்று வர முடிகிறதோ, அதே போல மார்ஸ் கிரகத்திற்கு, கூகுள் இதில் பாதை அமைத்துத் தருகிறது. மார்ஸ் எப்படி தோற்றமளிக்கும் என்பதனை நாம் கண்டு கொள்ள அருமையான தளம் இது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நிறைய நேரங்களில் மகளை அம்மாவின் பொறுப்பில் விட்டுவிடுகின்றோம். வயது வந்த பெண் குழந்தையை அடிக்காதீர்கள்! என்று கூறுவார்கள். அம்மாவுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அவர்கள் ஒதுங்கிவிடுவதால் அவர்கள் வாழ்வில் என்ன நடக்கிறது என்றே அப்பாக்களுக்குத் தெரியாமல் போய்விடும். பெண் குழந்தைகளுக்கு அப்பாக்கள் சொல்லித்தர வேண்டிய விஷயங்கள் நிறைய உள்ளன. ஒவ்வொன்றாக அவற்றை கவனிப்போம்.

நமது நண்பர்களையே யார் நல்லவர் யார் கெட்டவர் என்று ஆராயும் போது மகள் யாருடன் பழகுகிறாள் அவர்களுடைய நடத்தை எப்படி என்று தெரிந்துகொள்வது முக்கியம் அல்லவா?

3. கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லுங்கள். ஒரு காலத்தில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. தற்போது கல்வியில் பெண்கள் சாதனை செய்கிறார்கள். கல்வியில் அவருடைய சந்தேகங்களை கேட்டு விளக்கம் கொடுங்கள்.

4. ஆண்களைப்பற்றி சொல்லுங்கள். ஆண்களின் குணங்கள், அவர்களால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விளக்குங்கள். நல்லவர்களை எப்படி அடையாளம் காண்பது என்று விளக்குங்கள்!



# பெண் குழந்தைகளுக்கு அப்பாக்கள் சொல்லித்தர வேண்டிய விஷயங்கள்!

1. நன்றாக யோசித்துப் பார்த்தால் வயது வந்த மகளுடன் தந்தையர் செலவிடும் நேரம் குறைவு. ஆங்கிலத்தில் குவாலிடி டைம் என்று சொல்லுவார்கள். அதைப்போல முக்கியமான விஷயங்களை கேட்டறிய வேண்டும். அவர்கள் நம்முடன் பேசும்போது நிறைய விஷயங்கள் தெரிய வரும்.

2. மகளுடைய நட்பு வட்டத்தைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். நட்பு வட்டத்தில் தினமும் என்ன நடக்கிறது என்று கேட்டுத்தெரிந்து கொள்ளுங்கள்.

5. வாழ்க்கையைப் பற்றி அவருடன் பேசுங்கள். வாழ்க்கையில் என்னவாக விரும்புகிறார்? என்பதை கேளுங்கள். உரிய அறிவுரையுடன் நீங்கள் அவருக்கு உதவுவது எப்படி என்று திட்டமிடுங்கள்.

6. கடை, ஷாப்பிங் என்று அழைத்துச்செல்லுங்கள். பெண்கள் அந்த இடங்களில் எப்படி நடந்து கொள்கிறார்கள், ஆண்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதை அவர் அறியட்டும். பொது இடங்களில் கடைப்பிடிக்கும் நாகரீகம், எப்படி உடை அணிகிறார்கள் என்பதை அவருக்கு சொல்லிக்கொடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பெண்களென்றால் வீட்டில்தான் சாப்பிடுவார்கள் என்றில்லை. வித விதமாக நாம் உண்பதைப்போல் மகளுக்கும் சிறந்த உணவகங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள். உணவு வகைகளை ருசிக்கும் அதே நேரம் உணவக பழக்கங்கள், எப்படிப் பரிமாறுகிறார்கள் என்ற விஷயமெல்லாம் தெரிந்து கொள்ளட்டும்.

8. நீங்கள் எவ்வளவு தூரம் உங்கள் மகளை நம்புகிறீர்கள், அவரைப் பற்றி எப்படி பெருமைப்படுகிறீர்கள், அவர் உங்களுக்கு எவ்வளவு முக்கியமான நபர் என்பதை அடிக்கடி உணர்த்துங்கள். இது அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் கொடுக்கும்.

9. நம் குடும்பத்தைப் பற்றி அவருக்கு எடுத்துச்சொல்லுங்கள். குடும்ப வரலாறை அவர் அறியட்டும். முன்னோர்களின் சிறப்புக்களையும் பற்றி அவர் அறியட்டும்.

10. உங்கள் வரலாற்றையும் கொஞ்சம் சொல்லுங்கள். நீங்கள் எப்படி, எங்கு படித்தீர்கள், உங்கள் இளமைக் காலம், உங்கள் பொழுது போக்குகள், நீங்கள் எப்படி இந்த நிலைக்கு வந்தீர்கள், உங்கள் குடும்பம் அடைய வேண்டிய இலக்கு ஆகியவற்றை அவருக்கு தெளிவாக சொல்லுங்கள்.

11. புத்தகம், கவிதை, நல்ல நாவல்கள் ஆகியவற்றை மகளுக்கு அறிமுகப்படுத்துங்கள். புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை இளம் வயதிலேயே பழக்கப்படுத்துங்கள். வீட்டில் புத்தகங்களை சேர்த்து சிறு நூலகமாக உருவாக்குங்கள். நூலகங்களிலிருந்து நல்ல நூல்களைக் கொண்டுவந்து கொடுங்கள்.

12. உடலளவிலும் மனதளவிலும் பலசாலியாக உருவாக்குங்கள். எந்த மாதிரி பிரச்சினைகள் வெளியுலகில் வரும் அதை எப்படி சமாளிப்பது என்று சொல்லிக்கொடுங்கள்.

13. இன்றைய உலகம் இயந்திரமயம். அடுத்தவர் கையை சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் எதிர் பார்க்க முடியாது. ஆண்கள் வரவேண்டும் என்று காத்திருக்கவும் கூடாது. வீட்டில் ∴பியூஸ் போடுவது, போன்ற சிறு சிறு வேலைகளைக் கற்றுக் கொடுங்கள்.

14. இவை எல்லாவற்றையும் விட நீங்கள் ஒரு உதாரணமான வாழ்க்கை வாழுங்கள். உங்களைப் பற்றி உங்கள் மகள் பெருமைப்படட்டும். உங்கள் மனைவியை மதியுங்கள். உங்கள் மனைவி எப்படி உங்களை நடத்துகிறாரோ அதைத்தான் உங்கள் மகளும் தன் கணவனிடம் செயல்படுத்துவாள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடன் வாங்கலாமே

சிவநேசன்

"வாவ் இது சூப்பரா இருக்கே" என்று யாராவது சொன்னால் உச்சி குளிர்ந்துபோய் பெருமையான புன்சிரிப்புடன் "பிரபல கம்பெனியின் தயாரிப்பு... விலை ஆயிரத்து இருநூறு டொலர்கள்..." என பந்தா விடுவதில் இன்று பலருக்கு சில வினாடி சுகம் கிடைக்கிறது. இது தன்னம்பிக்கைக் குறைபாட்டின் வெளிப்பாடு என்கிறது உளவியல்.

பிறர் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கொண்டே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் மனம் இவர்களுடையது, தனது பணத்தை வீணாக பிறருடைய 'அபிப்பிராயத்துக்காக' செலவிடும் அப்பாவிகள் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். மற்றவர்களின் அபிப்பிராயத்தை பூர்த்திசெய்யும் வீண் செலவிற்கு தங்கள் வருமானம் போதாமல் போனால் அதற்காக கடன் படவும் ஆரம்பித்துவிடுகிறார்கள். இந்த நோய் தற்போது இளைஞர்களையும் பிடித்துக்கொண்டுள்ளது என்பதுதான் நிதர்சனம்.

'நாலு ஏக்கர் தென்னந்தோப்பையா கழுத்துல போட்டுட்டு திரிஞ்சே....' என்று கதாநாயகி அனுஷ்காவைப் பார்த்து பாட்டி மனோரமா கேட்பது 'சிங்கம்' திரைப்பட வசனம். இளம் வயதினரும், பெரியவர்களும் பணத்தைப் பார்க்கும் பார்வையின் வேறுபாட்டை இந்த வசனம் வெளிப்படுத்துகிறது.

தேவைக்கும், ஆடம்பரத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம் தெரியாமல் தடுமாறும் நிலை இன்றைக்கு அதிகமாகியிருக்கிறது. நண்பனிடம் ஒரு ஐபோன் இருந்தால் தானும் ஒரு ஐபோன் வாங்கிவிட வேண்டும் என பலர் துடிக்கிறார்கள். புதிதாக என்ன மாடலில் செல்போன் வந்தாலும் அதை வாங்கிவிட வேண்டும் என்ற துடிப்பு இன்றைய இளைஞனிடம் காணப்படுகிறது.

'தாங்கள் பட்ட கஷ்டத்தைத் தங்கள் பிள்ளைகள் படக்கூடாது' என பெற்றோர் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். தூக்கமே இல்லாமல் மூன்று வேலை செய்தாலும் பிள்ளைகளுக்கு வியர்வை அரும்பக் கூடாது என சாமரம் வீசுவார்கள். பணத்தின் அருமை பிள்ளைகளுக்குப் புரியாமல் போவதற்கு இதுவே முக்கிய காரணம்.

இதனையே இவர்கள் 'பேஷன்' என்றோ 'டிரன்ட்' என்றோ பெயர் சூட்டிக் கொண்டு வீண் செலவு செய்கிறார்கள். இளம் பெண்களிடம் இருக்கும் ஒரு பழக்கம், ஏகப்பட்ட மேக்கப் பொருட்களை வாங்கிக் குவிப்பது உடல் ஆரோகியத்துக்கு ஆபத்தானது, தோலுக்குத் துரோகம் இழைப்பது என பல்வேறு ஆராய்ச்சிகள் கரடியாய் கத்தினாலும் பலரும் பொருட்படுத்துவதில்லை. அழகு என்பது மேக்கப் பொருட்களால் வருவதல்ல, ஒரு சின்ன புன்னகையில், கண்ணியமான நடத்தையில் மிளிர்வது என்பதை இளம்பெண்கள் உணர்ந்தாலே போதும். குறைந்தபட்ச மேக்கப் பொருட்களே போதும் உங்கள் தேவைகளைத் தீர்த்துக் கொள்ள. இவ்இளம் பெண்கள் தங்கள் பெற்றோருடனோ அல்லது அவர்களின் பெற்றோருடனோ பத்து நிமிடம் உரையாடியானாலே தெரியும் பயற்றம் மாவும் கடலை மாவும் இயற்கையாக அழகை மெருகூட்டும் பொருட்கள் என்பது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் வேலைக்குச் செல்லும்போது சாப்பாடு எடுத்துக் கொண்டு வருவதையே கௌரவக் குறைச்சலாக நினைக்கின்றார்கள். நண்பர்களுடன் KFC, McDonalds, Pizza உயர்ந்தது என கருதிக் கொள்கிறார்கள். வீட்டில் சாப்பிடுவது உங்கள் பர்சை மட்டுமல்ல, உங்கள் ஆரோக்கியத்தையும், குடும்ப உறவையும் வலுவாக்கும்.

சில சமயங்களில் வீட்டுப் பெரியவர்களிடமிருந்து இந்தப் பழக்கம் இளம் வயதினருக்குத் தொற்றுவதுண்டு. பல அம்மாக்களும், ஐயாக்களும் விளம்பரங்களைக் கண்டால் பொருட்களை வாங்கிக் குவிப்பார்கள். இலவசமாய்க் கிடைக்கும் பத்து டொலர் குடத்திற்காக ஐநூறு டொலர் பட்டு சேலை வாங்க முண்டியடிப்பார்கள்.

'சூப்பர் ஆபர்' என அடித்துப் பிடித்து வாங்கிய பொருட்களில் எத்தனை பொருட்கள் நமக்குத் தேவையானவை? 'கண்டிப்பாக வேண்டும்' என வாங்கிக் குவித்த பொருட்களை எவ்வளவு பயன்படுத்தியிருக்கிறோம்? கொஞ்சம் அலசிப் பாருங்கள். ஒரு ஆண்டில் எத்தனை முறை அது பயன்பட்டது? அதை வாங்காமல் இருந்திருந்தால் என்னென்ன இழப்புகள் நேரிட்டிருக்கும்? வாங்கியதால் என்னென்ன நன்மைகள் வந்திருக்கின்றன? என கொஞ்சம் யோசியுங்கள்!



பாதிக்கு மேலான பொருட்கள் 'ஏண்டா வாங்கினோம்?' என நம்மை யோசிக்க வைக்கும் என்பது சர்வ நிச்சயம். ஒவ்வொரு மாதமும் 'எது ரொம்ப முக்கியம்' என ஒவ்வொரு விஷயத்தையும் வரிசைப்படுத்தி செலவுகளை செய்ய முயலுங்கள். மாத இறுதியில் நீங்கள் திட்டமிட்டபடி செயல் பட்டிருக்கிறீர்களா என்று பாருங்கள். ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தொகையைச் சேமிப்பேன் என முடிவெடுங்கள். அது எவ்வளவு என்பதை நீங்களே முடிவெடுங்கள். சின்ன வயதில் உண்டியலில் சேமிப்பதைப் போல், சட்டென எடுக்க முடியாத ஒரு வங்கியில் அந்த சேமிப்பு இருப்பது நல்லது. நாம் சிக்கிக்கொள்ளும் இன்னொரு இடம் கிரடிட் கார்ட். கிரடிட் கார்ட் இருபுறமும் கூரான வாள் போன்றது. சரியாகக் கையாளவில்லையேல் காயம் நிச்சயம்.

பிரியத்துக்குரியவர்களுக்கு 'கிப்ட்' கொடுப்பதில் கொஞ்சம் வித்தியாசம் காட்டுங்கள். பரிசுப் பொருட்கள் விலையுயர்ந்ததாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவை அன்பில் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். பலவேளைகளில் கையால் நாம் உருவாக்கும் கடிதங்களோ, கை வினைப் பொருட்களோ தரும் ஆத்ம திருப்தி, போகும் வழியில் வாங்கிச் செல்லும் விலையுயர்ந்த பொருட்களுக்கு இருப்பதில்லை!

இன்று பல இளைஞர்கள் நண்பர்கள் செய்கிறார்களே என்பதற்காக ஜிம் மற்றும் பல விடயங்களில் பந்தாவுக்காக உறுப்பினர் ஆகி விடுவார்கள். ஆனால் எதிலும் உருப்படியாகப் போவதில்லை. தேவையற்ற இடங்களில் உறுப்பினராய் இருப்பதைத் தவிர்த்தாலே கணிசமான பணம் சேமிக்கலாம்.

உங்களிடம் என்ன இல்லை என்பதை நினைத்துக் கவலைப்படுவதை நிறுத்துங்கள். என்ன இருக்கிறது என்பதை நினைத்து தன்னம்பிக்கை கொள்ளுங்கள். அடுத்தவர்கள் என்ன நினைப்பார்கள் எனும் கவலை விடுங்கள். அடுத்தவர்களைப் பற்றி நீங்கள் அபிப்பிராயம் சொல்வதையும் தவிருங்கள். என்ன செலவு செய்தாலும் அதன் நீண்டகாலப் பயன்களை மனதில் கொள்ளுங்கள். உங்கள் ஒவ்வொரு துளிப் பணமும் பல கோடிமக்களுக்கு எட்டாக் கனி என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள்.

சூதாட்டம், மது, போதை போன்ற தவறான வழிகளுக்கு நிரந்தரப் பூட்டு போடுங்கள். உங்கள் வருமானத்தின் கடைசித் துளியையும் உறிஞ்சும் வேகமான வாய் அவற்றுக்கு உண்டு.

பொருட்கள் எப்போதுமே நிரந்தர மகிழ்ச்சியைத் தருவதில்லை. ஆழமான நட்பும், அன்புமே நிரந்தர மகிழ்வைத் தருபவை என்பதைக் கவனத்தில் இருத்துங்கள்.

கடனற்ற வாழ்வே நிரந்தர இன்பம். காரணம் எதுவாயினும், யாரிடமிருந்தும் எப்போதும் கடன் மட்டும் வாங்கவே வாங்காதீர்கள். கடன் பட்டான் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று அனுபவித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கடன் பெறும் போது சந்தோஷமாக இருக்கும். ஆனால் அதை திருப்பிக் கொடுக்கத் தாமதமாகும் போது "கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை, ஆனால் இது தேவையா?" என்று அவர்கள் கேட்கும் போது இருக்கும் மனநிலை யாருக்கும் வரக்கூடாததொன்று.

கடனை திருப்பிக் கொடுக்க முடியாமல் உறவினர்களின் விசேஷங்களைத் தவிர்ப்பதும், அவர்களது தொலைபேசி அழைப்பைக் கண்டாலே பதறுவதும் மன உளைச்சலையே தோற்றுவிக்கும்.

இதைவிட யாருக்கும் பயப்படாமல் உங்கள் மன நிம்மதிக்கு எந்தவித பங்கமும் இல்லாமல் மகிழ்ச்சியாக வாழலாமே.

இப்போது சொல்லுங்கள்.... கடன் வாங்கலாமா? வேண்டாமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியிறுக்கம்

ஓங்காரத்தின் உச்சரிப்பின்றி
ஓராயிரம் வார்த்தைகள்
சிறையினில் வாடுகின்றது
மொழியின் ஆளுமை இறுக்கப்பட்டதால்
சமூகத்திடம் மண்டியிட்டுக் கெஞ்சுகின்றது
ஒதுக்கப்பட்டவர்களுக்கான அடையாளம்


சமூக சேவை பெயர் கொண்டு
மதியிறுக்க மூளைக் கருக்களை
பிடுங்கி எறிந்து உழலும் மானிடருக்கு
சமூகத்தின் சிறப்பு அங்கீகாரம்
மரணித்துப்போன மனித நேயமும்
புரையோடிக்கிடக்கும் புறணிகளும்
உணர்வுகளை கொன்றொழித்து
அடக்கம் செய்துவிட்டனவா?

இருண்டு போன விடியல்களும்
விடிந்து போன இரவுகளுமாக
தூய காற்றலைகளில்
உங்களுக்குள்ளே பேசிக்கொள்ளுங்கள்
இயற்கை ஒலிகளின் தோற்றுதல்களும்
கிரகங்களின் ஆட்சிமைகளும்
பார்வையின் அடையாளங்களும்
மாற்றங்கள் வரும்வரை
உங்களுக்குள்ளே கிடக்கட்டும்

மதி இழகிய சமுதாயமே!
உனது வன்முறைகளினால்
உயிர் காயும் வார்த்தைகள்
காயப்பட்டுப்போய் கிடக்கின்றன
வாழ்வியல் இனிமைகளுடன்
உணர்வுகளின் புரிதல்களையும்
அறிந்து கொண்டு
உள்ளங்களை வெற்றி கொள்ளுங்கள்

- மட்டுவில் ஞானக்குமாரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 உலகம் ஒரு சிறப்பு பார்வை

கடந்த ஆண்டில் உலகில் நடந்த சம்பவங்கள் தான் எத்தனை? ஆவை பற்றிய ஒரு சிறப்புப் பார்வை.

## ஐஎஸ்ஐஎஸ்

சிரியா மற்றும் ஈராக்கின் பகுதிகளை கைப்பற்றிய ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கி, பல்வேறு அட்டூழியங்களை நிகழ்த்தினர்.

ஒருபக்கம் இந்த இயக்கத்தில் சேர பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுகளில் இருந்து படையெடுத்தாலும், தலை துண்டிப்பு, இளம் பெண்களை சீரழித்தல் என்பன போன்ற பல கொடூரமான சம்பவங்களை அரங்கேற்றி வந்தனர்.

இவர்களை ஒழிக்க அமெரிக்கா உட்பட நேச நாடுகள் இணைந்து தாக்குதல் நடத்தி, ஆயிரக்கணக்கான தீவிரவாதிகளை கொன்று குவித்து வருகின்றது.

## எபோலா

தீவிரவாதம் தலைதூக்கி இருந்தாலும் எபோலா என்னும் வைரஸ் ஆபிரிக்க நாடுகள் மட்டுமின்றி உலக நாடுகளையே அச்சுறுத்தி வந்தது.

தொடர்ந்து பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், இதனால் பலியான நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே தான் சென்றது.

கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 7,000 பேரின் உயிரை காவு வாங்கியது எபோலா என்னும் கொடிய வைரஸ்.

## மண்ணில் புதைந்த உயிர்கள்

மே மாதம் 2ம் திகதி ஏற்பட்ட பாரிய நிலச்சரிவினால், 2500 பேர் உயிருடன் மண்ணில் புதைந்து பரிதாபமாய் பலியாகினர்.

ஒருபக்கம் தீவிரவாதிகளின் அட்டூழியம், மறுபக்கம் இயற்கை பேரழிவு என ஆப்கானிஸ்தானே நிலைக்குலைந்து போனது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐஸ் பக்கெட் சாலஞ்ச்

கடந்த ஆண்டை புரட்டி போட்டு விட்டது ஐஸ் பக்கெட் சாலஞ்ச். ஏ.எல்.எஸ். எனப்படும் நரம்பு சம்பந்தமான நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதற்காக நிதி திரட்டவும் தொடங்கப்பட்டது ஐஸ் பக்கெட் சாலஞ்ச்.

மார்க் ஜீபெக்கர், பில்கேட்ஸ், சத்யா நாதெள்ளா உட்பட பல்வேறு பிரபலங்களும் இந்த சாலஞ்சை நிறைவேற்ற உலகம் முழுவதும் தீயாய் பரவியது ஐஸ் பக்கெட் சாலஞ்ச்.

## இளவரசர் ஜார்ஜ்

இங்கிலாந்து அரசு குடும்பத்தை சேர்ந்த வில்லியம்ஸ்- கேட் தம்பதியினரின் மூத்த மகன் ஜார்ஜ் அலெக்ஸாண்டர் லூயிஸ்.

புதிதாய் அவதாரம் எடுத்த அரசர் போன்று தோற்றமளித்த ஜார்ஜ், முதன்முறையாக தன் பெற்றோருடன் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

## தீவிரவாதிகளின் வெறிச்செயல்

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள இராணுவ பள்ளி ஒன்றில் கடந்த டிசம்பர் மாதம் 16ம் திகதி தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில் 132 மாணவர்கள் உட்பட 150 பேர் பலியாகினர், ராணுவத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெஹ்ரிக் இ தலிபான் அமைப்பினர் இக்கொடூர தாக்குதலுக்கு விளக்கம் அளித்தனர்.

## பனிப்புயல்

உலகநாடுகள் பலவற்றில் பனிப்புயல் தாக்கம் இருந்தாலும், கனடா அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளிலேயே அதிகமாக பாதிப்பை ஏற்படுத்தியது.




## விமான விபத்துகள்

கடந்த ஆண்டு விமான பயணிகளுக்கு சோகமான ஆண்டாகவே இருந்தது என்று சொல்லலாம். அடுத்தடுத்து நிகழ்ந்து விமான விபத்துகள் மக்களை அதிர்ச்சியடைய வைத்தது.

கடந்த மார்ச் மாதம் 8ம் திகதி 239 பயணிகளுடன் கோலாலம்பூரிலிருந்து பீஜிங் நோக்கி புறப்பட்ட ஆர்-17 விமானம் நடுவானில் மாயமாகி போனது. விமானம் கடத்தப்பட்டு இருக்கலாம், நடுக்கடலில் விழுந்திருக்கலாம் என்ற யூகங்கள் எழுந்தாலும் இதுநாள் வரையிலும் விடை கிடைக்கப் பெறாத மர்மமாகவே இருந்து வருகிறது.

தொடர்ந்து ஜீலை 17ம் திகதி நெதர்லாந்து நாட்டிலிருந்து 295 பேருடன் மலேசியா நோக்கிச் சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம், கிழக்கு உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்டது, அந்த விமானத்தில் பயணம் செய்த 295 பேரும் பரிதாபமாக பலியாகினர்.

இந்தோனேசியாவின் சுரபயா விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூருக்கு டிசம்பர் மாதம் 27ம் திகதி புறப்பட்ட ஏர் ஏசியா “A320-200” என்ற விமானம், தனது பயணத்தை தொடங்கிய 42 நிமிடங்களில் மாயமாகி கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது, இந்த விபத்தில் 162 பேர் பலியாகினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு முக்கியமான பரிசோதனைகள்



இன்றைய காலகட்டத்தில் நோய்கள் வருவது தவிர்க்க முடியாத நிலையாகிவிட்டது. முன்பெல்லாம் குறிப்பிட்ட வயதிற்குப்பிறகு என்றிருந்த நோய்கள் தற்போது இளம் வயதினரையும் தாக்கத் தொடங்கியுள்ளது. *ஆரம்பத்திலேயே கண்டறிவதும், பரிசோதனைசெய்து, சிகிச்சை எடுத்துக்கொள்வதும் தான் இந்த* பிரச்சனைகளை எதிர் கொள்ளச் செய்ய வேண்டிய முதன்மையான விடயங்களாக உள்ளன.

18 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதைச் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும் செய்து கொள்ள வேண்டிய முக்கியமான பரிசோதனைகள்.

## வருமுன் காப்போம்...... சுகமாக வாழ்வோம்.......

### சர்க்கரை


தொடர்ந்து தாகமாக இருத்தல், அடிக்கடி சிறுநீர் கழிக்கத் தூண்டுதல், திடீரென்று அதிகமாக பசி எடுத்தல், தாங்க முடியாத களைப்பு, மயக்க உணர்வு, பார்வை மங்குதல் மற்றும் குமட்டல் போன்றவை சர்க்கரை பரிசோதனையை செய்ய வேண்டும் என்று சொல்லும் அறிகுறிகளாகும். இளம் பெண்கள் தங்களுடைய எடையைக் குறைக்கவும் மற்றும் வயிற்றின் தொப்பையைக் குறைக்கவும் போராடிவரும் தருணம் இது. இந்த இரண்டு காரணங்களுக்காகவே, 20வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் அதைவிட வயதுகுறைந்த பெண்கள் என அனைவரும் சர்க்கரை பரிசோதனையை செய்துகொள்ளவேண்டும்.

### வைட்டமின் டி

எலும்புவலி, முதுகுவலி மற்றும் கால்வலி ஆகிய அறிகுறிகள் இருக்கும்போது, வைட்டமின் டி பரிசோதனை செய்துகொள்வது நல்லது. 80 முதல் 90% இளம் பெண்களின் உடலில் வைட்டமின் டி பற்றாக் குறை உள்ளது. எனவே, இரத்தப் பரிசோதனை மூலமாக வைட்டமின் டி பரிசோதனையை செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

### வைட்டமின் பி12

புஜங்கள் மற்றும் கால்களில் உணர்வற்ற நிலையையோ அல்லது குறுகுறுப்பாகவோ இருக்கும் போதும், பலவீனமாக இருப்பதை உணரும்போதும் மற்றும் அனீமியாவினால் சமநிலையை இழந்திருக்கும் நேரங்களிலும் வைட்டமின் பி12 பரிசோதனையை செய்வது நலம். இந்த குறைபாடு சைவ உணவு சாப்பிடுபவர்களிடம் காணப்படுகிறது. இந்த பரிசோதனையை செய்வதன் மூலம் உங்கள் உடலில் வைட்டமின் பி12 எவ்வளவு உள்ளது என்பதை கண்டறிய முடியும்.



### தைராய்டு

எடை அதிகரித்தல், சோம்பல், மாதவிடாய் தவறி வருதல் மற்றும் கழுத்துப் பகுதியில் வீக்கம் ஏற்படுதல் போன்றவை தைராய்டு பரிசோதனையை செய்ய வேண்டும் என்று காட்டும் அறிகுறிகளாகும். தைராய்டின் அளவு அதிகமாக இருப்பதையோ (Hyper- thyroidism) அல்லது குறைவாக இருப்பதையோ (Hypothyroidism) பரிசோதிக்கவே இந்த பரிசோதனை செய்யப்படுகிறது.

### மார்பக பரிசோதனை

மார்பகங்களில் கட்டிகள் வருவதும் மற்றும் ஒழுங்கற்ற தன்மை இருப்பதும்தான் பிரச்சனைக்கான முதல் அறிகுறி. சுயமாக பரிசோதனை செய்யும்போது கட்டிகள் இருப்பது தெரியவந்தால், மார்பகங்களை மாம்மோகிராம்ஸ் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இளம்பெண்களால், பெரும்பாலும் தவிர்க்கப்படும் முக்கியமான பரிசோதனைகளில் ஒன்றாக இது உள்ளது. ஒரு பெண் 25வயதை அடைந்துவிட்டாலேயே இப்பரிசோதனைகளை செய்துகொள்ள வேண்டும். சுயமாக பரிசோதனை செய்து கொள்ளுதல். கட்டிகள், வீக்கங்கள் அல்லது மார்பகங்களில் அசாதாரண வளர்ச்சி ஆகியவை உள்ளதா என பரிசோதித்து பார்த்தல்.


### பாப் பரிசோதனை (Pap test)

பெண்களின் இனப்பெருக்க உறுப்புகளில் புற்றுநோய் வருவதை தடுக்க இந்த பரிசோதனை செய்யப்படுகிறது. அறிகுறிகளுக்காக காத்திருக்கவேண்டாம். 25 வயதை அடைந்த அனைத்து பெண்களும் செய்துகொள்ள வேண்டிய பரிசோதனை இது. 65 வயதுக்கும் மேற்பட்ட பெண்கள், கடந்த 10 வருடங்களாக சாதாரண பரிசோதனைகள் செய்துகொள்ளும் பெண்கள் மற்றும் கருப்பை இல்லாத பெண்கள் (அறுவை சிகிச்சையின் மூலம் கருப்பையை அகற்றிக் கொண்ட பெண்கள்), ஆகியோர் இந்த பரிசோதனையை செய்து கொள்ள வேண்டும்.

**-டாக்டர் லதா மோகன்ராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிச்சன் Corner



ஷெரின்



## கார்லிக் சிக்கன்

**தேவையான பொருட்கள்:**

- சிக்கன் லெக்ஸ் - பத்து
- வெங்காயம் - இரண்டு
- பூண்டு - ஆறு பற்கள்
- காய்ந்தமிளகாய் - நான்கு
- லெமன் கிராஸ் - ஒன்று
- எண்ணெய் - கால்கோப்பை
- கொத்தமல்லி - ஒரு பிடி
- சின்னமன் பவுடர் - கால் தேக்கரண்டி
- சிக்கன் ஸ்டாக் - ஒன்றரை கோப்பை
- உப்புத்தூள் - இரண்டு தேக்கரண்டி
- மிளகுத்தூள் - ஒரு தேக்கரண்டி
- புளி பேஸ்ட் - இரண்டு தேக்கரண்டி
- மீன் சாஸ் - இரண்டு மேசைக்கரண்டி
- வறுத்த வேர்க்கடலை - கால் கோப்பை
- பீனட் பட்டர் - ஒரு மேசைக்கரண்டி

**செய்முறை:**

சிக்கனை சுத்தம் செய்து வைக்கவும். காய்ந்தமிளகாயை சுடுதண்ணீரில் போட்டு பத்து நிமிடம் ஊறவைத்துக் கொள்ளவும். லெமன் கிராஸ்ஸை சிறிய துண்டுகளாக நறுக்கி வைக்கவும். கொத்தமல்லியை நொறுங்க நறுக்கி வைக்கவும். வறுத்த வேர்க்கடலையை பொடியாக நறுக்கி அல்லது நசுக்கி வைக்கவும். பூண்டு, வெங்காயம், லெமன்கிராஸ், கொத்தமல்லி ஆகியவற்றைப் போட்டு மையாக அரைத்துக் கொள்ளவும். அதில் புளி பேஸ்ட்டையும், சின்னமன் தூளையும் போட்டு கலக்கி வைக்கவும். அடிகனமான சட்டியில் எண்ணெயை ஊற்றி காயவைத்து சிக்கன் லெக்ஸ்ஸை போட்டு வதக்கவும். அடிப்பிடிக்காமல் சிவக்க வதக்கி ஒரு தட்டில் தனியாக எடுத்து வைக்கவும். பிறகு அதே எண்ணெயில் தயாரித்துள்ள பூண்டு பேஸ்ட்டை போட்டு வதக்கவும். நன்கு பச்சை வாசனை நீங்கும் வரை வதக்கி விட்டு சிக்கன் ஸ்டாக்கை ஊற்றி கலக்கி விடவும்.பிறகு அதில் வதக்கி வைத்துள்ள சிக்கனை சேர்த்து நன்கு கலக்கி விட்டு கொதிக்க விடவும். அடுப்பின் அனலை குறைத்து வைத்து அரைமணி நேரம் வேக வைக்கவும். பிறகு மீன் சாஸ் மற்றும் பீனட் பட்டைரை போட்டு நன்கு கலக்கி விட்டு மேலும் பத்து நிமிடம் அடுப்பில் வைத்திருக்கவும். கோழி நன்கு வெந்தவுடன் உப்பையும், மிளகுத்தூளையும் சேர்த்து கலக்கி இறக்கி விடவும். இந்த சுவையான தாய்லன்ட் கார்லிக் சிக்கனை வெள்ளை சோற்றுடனோ அல்லது வேகவைத்த நூடுல்ஸ்ஸுடனோ மேலாக ஊற்றி அதன் மீது நசுக்கி வைத்துள்ள வேர்க்கடலையை தூவி விட்டு சூடாக பரிமாறவும்.

## ப்ரைட் இட்லி



**தேவையான பொருட்கள்:**

- இட்லி - 5
- இட்லி பொடி - 1 - 1 1/2 மேசைக்கரண்டி
- உப்பு - தேவையான அளவு
- எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**

மேலே கூறியுள்ள பொருட்கள் அனைத்தையும் எடுத்து வைத்துக் கொள்ளவும். இட்லியை நீளமான மெல்லிய துண்டுகளாக நறுக்கவும் (4 அல்லது 5 துண்டிகள் வெட்டலாம்) வாணலியில் எண்ணெய் ஊற்றி அதில் இட்லி துண்டுகளை போட்டு சிவக்க பொரிக்கவும். பொரிந்ததும் எடுத்து எண்ணெயை வடிய விடவும். பின்னர் ஒரு கிண்ணத்தில் போட்டு சூடாக இருக்கும் போதே பொடி மற்றும் உப்பை போட்டு பிரட்டி விடவும். சுவையான ்ப்ரைட் இட்லி தயார். அப்படியே சாப்பிடலாம். சாம்பார், தேங்காய் சட்னியுடன் சாப்பிடவும் சுவையாக இருக்கும்.

## செட்டிநாடு கோழி வறுவல்

**தேவையான பொருட்கள்:**


- கோழி - ஒன்று
- பெரிய வெங்காயம் - 2 (நடுத்தரமானது)
- இஞ்சி - ஒரு அங்குலத் துண்டு
- பூண்டு - 5 பல்
- பச்சை மிளகாய் - 4
- உலர்ந்த மிளகாய் - 5
- கறிவேப்பிலை - 12 இலைகள்
- மஞ்சள்தூள் - அரைத் தேக்கரண்டி
- எலுமிச்சை சாறு - ஒரு மேசைக்கரண்டி
- அரிசி மாவு - 2 மேசைக்கரண்டி
- உப்பு - தேவையான அளவு
- எண்ணெய் - பொரிப்பதற்கு



**செய்முறை:**

முழுக்கோழியை நன்கு சுத்தம் செய்து, இரண்டு சரி பாதியாக வெட்டிக் கொள்ளவும். மார்பு, தொடைப் பகுதி சதைகளில் இரண்டு மூன்று ஆழமான வெட்டுக்கள் உண்டாக்கவும். வெங்காயம், பூண்டு, இஞ்சி ஆகியவற்றைத் தோலுரித்து நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாய், உலர்ந்த மிளகாய் ஆகியவற்றின் காம்புகளை நீக்கி நறுக்கின வெங்காயம், இஞ்சி, பூண்டுடன் சேர்த்து, சிறிது நீர் சேர்த்துக் கொண்டு, விழுதாக அரைத்துக் கொள்ளவும். கறிவேப்பிலையை கழுவி சுத்தம் செய்து, பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அரைத்து வைத்துள்ள விழுதுடன் மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, அரிசி மாவு, தேவையான உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். இந்த கலவையினை இறைச்சியின் மீது நன்கு பூசி, பிறகு நறுக்கின கறிவேப்பிலையில் பிரட்டி சுமார் இரண்டு மணி நேரங்கள் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து ஊறவிடவும். ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி, சூடேறியதும் அதில் மசாலாத் தடவிய கோழி இறைச்சியை போட்டு எல்லா பக்கமும் வேகுமாறு இரண்டு நிமிடங்கள் பிரட்டி வேகவிடவும். பிறகு தீயைச் சற்று குறைத்து, வாணலியை மூடி வைத்து சுமார் பதினைந்தில் இருந்து இருபது நிமிடங்கள் வேகவிடவும். அவ்வபோது திறந்து இறைச்சியைத் திருப்பிப் போட்டு, மிதமுள்ள மசாலாவினையும் தடவி, தேவையெனில் சிறிது நீரினையும் தெளித்து, வேகவிடவும். இறக்குவதற்கு முன்பு இரண்டு நிமிடங்கள் தீயைச் சற்று அதிகமாக்கி, மேல்புறம் சற்று மொறுமொறுப்பாக வேகுமாறு செய்யவும். கருகிவிடக் கூடாது. கறி பொன்னிறமானதும் எடுத்து, துண்டுகள் போட்டுப் பரிமாறவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# EMPLOYMENT EQUALITY in CANADIAN HISTORY

By:Keshini Kumarakesary

Employment equality encourages better working conditions, it sets standards, breaks down barriers and corrects the wrong that happens in the work place. It requires special changes and accommodations. Making positive changes to things that could be a possible disadvantage to a certain group of people or even just and individual. There are four main groups that Canadian government focus its policies on employment equity these are; women, aboriginal people, persons with disabilities and visible minorities.

There has been a great notable presences of employment equality in Canadian history. The changes that have been made since the early 1970 have a great deal of importance to where employment rights stand now. In the early 1970s employment rights were looked after by major union it wasn't until the late 70s did Canada adapt the Ontario Human Rights Act. In 1983 the federal government put the Federal Affirmative Action Program in action its main focus was aimed at women and increasing the representation of aboriginal and also persons with disabilities.The Royal Commission of Equality in Employment was also established at this time.

The commission looked to find ways to get the word out about rights in the work place for under-represented people. In 1985 the Charter of Rights and Freedom took in to consideration of protecting employment rights, the Equality Rights section protects against discrimination for disadvantaged groups. The National Equality Network was created by equality seeking advocacy groups in 1988. The groups put pressure on the federal government to make the employment programs more effective.

After the 80s the fight for employment equality did not come to a standstill, in 1993 the Ontario Employment Equality Act is passed and cover some major areas of concern such as private sector, in 1995 the act is repealed by the Conservative party, the conservatives than revise the Federal Employment Equality Act. Some settlement were reached in 1996 and signed, the settlements included the representation of Aboriginals in the federal public service.

In the new millennium the Embracing Change Initiative was launched, which included the hiring goal set for racialized people and minorities, become the first step taken on by the employer to make the workplace more equal. Unfortunately the goals were not met and the program was not renewed. 2004 brought the senate to research the "issues of alleged discrimination in the hiring and promotional practises in the federal public sector and the extent to which targets to achieve employment equality for minorities groups were beingmet" This process, made possible the Public Service Employment Act, which contained polices regarding the staffing issues in the federal service. In 2007 the senate made public a report that stated that employment equality has not reached to satisfactory levels yet. The report was also conducted and released in 2010 outlined that there were still may areas that needed improvement.

There has been obvious consideration into improving the working situations of employees. But does the reality of this minority groups match truly much the promises of reform in the work place? The next article will outline personal stories of racialized people in the work place and whether or not employment equality is a thing of the past. Stay tuned.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹாலிவுட் படத்தில் விஜய், அஜித்



விஜய், அஜித் ஹாலிவுட் படத்தில் நடிக்கப் போவதாக தகவல் வெளியாகியுள்ளது. விஜய்க்கு ஹாலிவுட் படத்தில் நடிக்க ஏற்கனவே வாய்ப்பு வந்துள்ளது. அவர் நடிப்பது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

விஜய் தற்போது சிம்பு தேவன் இயக்கும் புலி படத்தில் பிசியாக நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. அஜித்துக்கும் ஹாலிவுட் படத்தில் நடிக்க வாய்ப்பு வந்துள்ளது. இந்த படத்தை கவுதம்மேனனே இயக்க உள்ளார்.

இதுகுறித்து கவுதம்மேனன் கூறும் போது, விரைவில் ஹாலிவுட் படம் ஒன்றை இயக்க திட்டமிட்டு உள்ளேன். தமிழ் கதாநாயகனை வைத்தே ஹாலிவுட் படத்தை எடுப்பேன்.அந்த படத்தில் நடிப்பதற்கு எனது முதல் தேர்வு அஜித்தாகவே இருக்கும். அஜித் சம்மதித்தால் அவரை வைத்து ஹாலிவுட் படத்தை எடுப்பேன் என்றார். அஜித் கவுதம்மேனன் கூட்டணியில் வந்த என்னை அறிந்தால் படம் தற்போது ரிலீசாகி ஓடிக்கொண்டிருக்கிறது.



# சினிமாவை விட்டு விரைவில் விலகுவேன்: லட்சுமிமேனன் பேட்டி

"கும்கி" படம் மூலம் லட்சுமிமேனன் கதாநாயகியாக அறிமுகமானார். 2012-ல் இப்படம் வந்தது. 'சுந்தரபாண்டியன்' படம் இவரை மேலும் பிரபலபடுத்தியது.

தொடர்ந்து சசிகுமாருடன் 'குட்டி புலி', விஷாலுடன் 'பாண்டியநாடு', 'நான் சிகப்பு மனிதன்' விமலுடன் 'மஞ்சப்பை', சித்தார்த்துடன் 'ஜிகர்தண்டா', படங்களில் நடித்தார். தற்போது கார்த்தியுடன் 'கொம்பன்', கவுதம் கார்த்திக்குடன் 'சிப்பாய்' படங்களில் நடித்து வருகிறார்.

● லட்சுமிமேனன் அளித்த பேட்டி வருமாறு:-

நான் சினிமாவை விட்டு விரைவில் விலக இருக்கிறேன். நிறைய படங்களில் கிராமத்து பெண் போன்றும் பக்கத்து வீட்டில் வசிக்கும் பெண் மாதிரியுமான கேரக்டர்களிலேயே நடித்து இருக்கிறேன். அதேபோன்ற வேடங்களில் நடிக்கவே எனக்கு வாய்ப்புகளும் வருகின்றன. இது எனக்கு பிடிக்கவில்லை. ஒரே மாதிரி வேடங்களில் நடித்து போரடித்து விட்டது. எனவே தான் சினிமாவுக்கு முழுக்கு போடுகிறேன். இனி மேல் படிப்பில் கவனம் செலுத்தப் போகிறேன். தற்போது பிளஸ்-2 படிக்கிறேன்.தேர்வில் நிறைய மதிப்பெண்கள் வாங்க வேண்டும் என்பதே இப்போதைய நோக்கம். கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படிக்க முடிவு செய்துள்ளேன். அதன்பிறகு பேஷன் டிசைனர் ஆவேன்.

இவ்வாறு லட்சுமிமேனன் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்னச் சின்ன சுட்டிகளே!

## இது உங்கள் உலகம்...

## வணக்கம். சின்னச் சின்ன சுட்டிகளே, நலமா?

சுட்டிகளே, விடுமுறையை நன்றாகப் பயனுள்ளதாகப் பயன் படுத்தியிருப்பீர்கள் என்று நம்புகின்றேன். மீண்டும் பாடசாலை படிப்பு என்று உங்கள் நேரம் இப்படியே போய்விடும். உங்கள் எதிர்காலம் இந்தப் படிப்பில்தான் தங்கியிருக்கின்றது. கல்விச் செல்வம் அழியாத செல்வம் என்பதால், புலம் பெயர்ந்த மண்ணில் எங்கள் தலைமுறை நன்றாக வாழவேண்டும் என்பதற்காக உங்கள் பெற்றோர்கள் தங்களை வருத்திப் பல தியாகங்களைச் செய்கிறார்கள் என்பதை நன்றி உணர்வோடு நினைவில் வைத்திருங்கள். நேரம் இல்லையே என்று எதையும் தள்ளிப் போடாதீர்கள். விருந்தினரை உபசரிக்கும் நல்ல பண்பு தமிழர்களிடம் நிறையவே இருக்கின்றது. சின்ன வயதிலேயே நல்ல பண்புகளைப் பழகிக் கொள்ளுங்கள். அது மட்டுமல்ல பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் கொண்டிருங்கள். தேவைக்கு அதிகமாக இருந்தால் அதை மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள். முடிந்தால் தாயகத்தில் உள்ள வசதியற்ற குடும்பங்களுக்கு உதவி செய்யுங்கள். சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். எனவே நீங்கள் செய்யும் சிறிய உதவிகூட தாயகத்தில் பலரை வாழவைக்கும். முடிந்தால் அடுத்த விடுமுறையின் போது உங்கள் பெற்றோர் பிறந்து வளர்ந்த இடங்களுக்குச் சென்று தரிசித்து வாருங்கள்.

உங்களை நேசிக்கும் அக்கா,
மாலினி அரவிந்தன்.

# மர்மம (ர)லை

(சென்ற தொடரை எழுதியவர் செல்வி தனுஷிகா.
இம்முறை தொடர்பவர் செல்வன் அபிஷேக்)

விமானத்திற்கு அருகே சென்ற போது, பஞ்சு மெத்தை போன்ற சிறிய புதர்களின் மேலே விமானம் தூங்கிக் கொண்டிருப்பது போலத் தெரிந்தது. மரங்களுக்கு இடையே நுழைந்த பொட்டுப் பொட்டான சூரிய வெளிச்சம் விமானத்தில் பட்டு வெள்ளியாய் மின்னியது. அடர்ந்த அமேசன் காட்டிலே தனியாக அனாதைபோல அந்த விமானம் இருந்ததைப் பார்த்த போது காட்சியகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்ட விமானம் போலத் தெரிந்தது.. நல்ல காலமாக இந்த விமான விபத்தின் போது விமான ஓட்டிக்கு எந்த உயிர் ஆபத்தும் ஏற்படவில்லை. அவர் உயிர் தப்பியதால்தான் இன்று எங்களுக்கு அவரால் உதவ முடிந்தது.

அருவி ஓசை இரைச்சலோடு கேட்டுக் கொண்டே இருந்தது. அவசரமாக சாப்பிட்டு விட்டு ஆவல் மிகுதியால், அந்தத் திசை நோக்கி செல்ல நினைத்தோம். ஆசிரியரிடம் அதற்காக அனுமதி கேட்டோம். அவர் தயங்கிவிட்டு விமான ஓட்டியிடம் அங்கு பாதுகாப்பாக நாங்கள் செல்லலாமா என்று வினாவினார். விமான ஓட்டியோ அதற்குப் பதில் சொல்லாமல் முதலில் சாப்பிடுவோம் என்று சொல்லி, விமானத்தில் இருந்த தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளை எடுத்துக் கொடுத்தார். எல்லோருக்கும் நல்ல பசி என்பதால் இருந்ததைப் பங்கிட்டு சாப்பிட்டோம். 'இன்னும் தகரத்தில் அடைத்த சாப்பாடு இருக்கிறது ஆனாலும் இனிமேல் தேவைப்படலாம் என்பதால் தேவையான அளவோடு நிறுத்திக் கொள்வது நல்லதல்லவா?' என்றார். நாங்களும் அதை ஏற்றுக் கொண்டு அளவோடு சாப்பிட்டோம்.

நீர் வீழ்ச்சிக் கரைக்குச் செல்ல விரும்பினோம். அதற்கான அனுமதியைக் கேட்ட போதுதான் விமான ஓட்டி தயங்கினார். அவர் தயக்கத்திற்குக் காரணம் தெரியாமல் ஆசிரியரிடம் மீண்டும் கேட்டோம். ஆசிரியர் விமான ஓட்டியிடம் ஏன் தயங்குகிறார்? என்று வினாவினார். தயங்குவதற்குக் காரணம் இருக்கிறது என்றார். என்ன காரணம்? என்று எல்லோரும் ஒரே குரலில் கேட்டோம். இந்த நீர்வீழ்ச்சியின் மறுகரையில் பூர்வீக குடிகள் வாழ்கின்றார்கள். அவர்கள் நாகரிகம் அடையாதவர்கள், அதனால்தான் தயக்கமாக இருக்கிறது என்றார். அப்படி என்றால் என்ன? என்று கேட்டோம். 'அவர்களிடம் விஷம் பூசிய வில்லும் அம்பும் இருக்கின்றது, பரவாயில்லையா?' என்றார். விஷம் பூசிய வில்லும் அம்புமா? எல்லோரும் அப்படியே வார்த்தை வராமல் உறைந்து போனோம்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொன்றியல்



மொன்றியல் பயணம் நாங்கள் போனோம். அங்கு நிறைய இடங்கள் பார்த்தோம். கோயிலுக்கு போனோம். அந்தக் கோவில் மலையில் உள்ளது. நாங்கள் மலைமேல் ஏறிப்போனோம். நாங்கள் அப்பாவின் சினேகிதனின் வீட்டில் தங்கி இருந்து வந்தோம்.

**கீர்த்தனா கிருஷ்ணானந்தன்**

## நான்



எனது பெயர் சஹானா. எனக்கு விருப்பமான பாடம் கணிதம். எனக்கு விருப்பமான கலர் மஞ்சள். நீந்துதல் எனக்கு மிகவும் விருப்பம். எனக்கு விருப்பமான செல்லப்பிராணி பறவை. தமிழ் கற்பதில் எனக்கு ஆர்வம் உண்டு. நான் சனிக்கிழமைகளில் தமிழ் கற்க வகுப்பிற்கு செல்வேன். எனது தாய்மொழி தமிழாகும்.

**ருஜீவன் சஹானா**

## கிளி

கிளி பச்சை நிறம் உடையது. கிளியின் கழுத்தில் அழகிய சிவப்பு நிறம் உள்ளது. கிளி பழங்கள் சாப்பிடும். கிளிக்கு இரண்டு இறக்கைகள் உண்டு. கிளி கீகீ.. என்று கத்தும். கிளி மரத்தில் வாழும். சிலர் கிளியை வீட்டிலும் வளர்க்கின்றனர்.

**கேசிகா கேதீஸ்வரன்**

## குடும்பம்



குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பதற்கேற்ப, நான், எனது அப்பா, அம்மா, அண்ணா, இரண்டு தம்பிகளுமாக ஆறுபேர் ஒரு கோவிலாக வாழ்ந்து வருகிறோம். எனது குடும்பத்தில் நான் இரண்டாவது பிள்ளை. எனது அம்மாவின் பெயர் கிரிஜா. அப்பாவின் பெயர் கண்ணன். அண்ணாவின் பெயர் முகிலன். தம்பிகளின் பெயர் மாயன், அகரன். நாங்கள் மட்டுமன்றி எமது வழிகாட்டியாக எமது அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா எல்லோரும் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறோம்.

**குறிஞ்சி**

## யானை



நிலத்தில் வாழும் மிகப்பெரிய மிருகம் யானை. யானை காட்டில் வசிக்கும். இவைகளில் சில தந்தங்கள் உடையனவாகும். யானைகள், ஆபிரிக்காவையும், ஆசியாவையும் தாயகமாகக் கொண்டவை. ஆபிரிக்க யானைகள் ஆசிய யானைகளைவிடப் பெரியனவாகும். யானை ஒரு தாவர உண்ணியாகும். யானைகள் சிறு கூட்டமாக வசிக்கும். கூட்டத்தில் பெண் யானைகளே அதிகமாகச் சேர்ந்திருக்கும். அவைகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தனவாக இருக்கும். ஆண் யானைகள் அடிக்கடி கூட்டத்தை மாற்றிக்கொள்ளும். முதிர்ந்த பெண் யானையே கூட்டத்தின் தலைவியாகும்.

**குணாளன் விக்னேஸ்வரன்**

## கனடா



கனடா அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள ஒரு நாடு. கனடாவின் தலைநகரம் ஒட்டாவா. கனடாவில் 10 மாகாணங்களும் 3 பிரதேசங்களும் உண்டு. கனடாவின் மிகப்பெரிய மாகாணம் கியூபெக் ஆகும். கனடாவின் மிகச் சிறிய மாகாணம் பிரின்ஸ் எட்வேர்ட் ஐலண்ட். கனடாவின் மிக உயரமான கோபுரம் சிஎன் கோபுரம். கனடாவின் முதல் பிரதமர் சேர், ஜான் மக்டோனால்ட். ஆடி மாதம் 1ம் திகதி கனடாவின் பிறந்த நாள் அல்லது கனடா தினம் என்று சொல்வார்கள். கனடாவின் தற்போதைய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர். கனடாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி தேசிய விலங்கு பீவர், தேசிய சின்னம் மேப்பிள் இலை. இங்கே கல்வி வாய்ப்புகள், மற்றும் உடல் நலத்தை கவனிக்க மருத்துவ சேவைகள் உண்டு. கனடாவில் எல்லா இனத்தை சேர்ந்தவர்களும் வாழ்கிறார்கள். நான் ஒரு பெருமையான கனடியன்.

**ஆருணி ரவீந்திரன்**

## மயில்



மயில் ஒரு அழகான பெரிய பறவை. அது அழகாக தோகை விரித்து ஆடும். இது 15-20 வருடம் வாழும். இதன் இறக்கை பல தேவைக்கு பயன்படுத்துவார்கள். இதில் ஆண்மயில் பெண்மயில் என இரண்டுள்ளது. இது தானியங்கள் பூச்சி புழுக்களை விரும்பி உண்ணும். இது 3-5 முட்டைகள் இடும். முட்டைகள் குஞ்சுகளாக மாற 28 நாட்கள் எடுக்கும். இதன் பிறப்பிடம் இலங்கை, இந்தியாவாகும். இந்தியாவின் தேசிய பறவை மயிலாகும்.


**சுவாதி ஐங்கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னால் முடியும்

Inforce Financial Life – அழகிய அலுவலகம். சில வினாடிகள் காத்திருப்பின் பின் வசீகர தோற்றம், கம்பீரமான நடையில் புன்னகை மாறாத முகத்துடன் வந்து தனது அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார், பார்த்ததுமே 'அட நம்ம வீட்டுப் பிள்ளை' என்ற உணர்வைத் தரக்கூடிய சந்திரன் ராசலிங்கம்.



காப்புறுதி என்றாலே ஓட்டம் எடுக்கும் எமது சமூகத்தில் காப்புறுதியின் அவசியத்தை வலுயுறுத்தி மற்றவர்களுக்கு உதவும் நோக்கோடு ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து பலமுகவர்களை வழிநடத்தி வெற்றிநடைபோடும் இளம் தொழிலதிபர்.

**• கனடாவில் உங்கள் ஆரம்பகால வாழ்க்கை?**

1992 ஏப்ரலில் 15 வயதில் தனியாக கனடா வந்து உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தேன். பாடசாலைக் கல்வியை முடித்தபின்பு விமான பொறியியலாளர் பயிற்சிக்கான புலமைப்பரிசில் கிடைத்தது. இந்த மகிழ்ச்சியும் கனவும் நீண்ட காலம் நிலைக்கவில்லை. தாய்நாட்டில் எனது தந்தையின் வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டமும் அதனைத் தொடர்ந்து அவர் நோய்வாய்ப்படவும் குடும்பத்தில் ஒரே ஆண்பிள்ளையாக குடும்பத்தின் பொறுப்பை ஏற்று எனது கனவைத் தூக்கிப்போட்டுவிட்டு Dish Washing வேலையை ஆரம்பித்தேன்.

(அவருடைய வாய் மட்டும் எம்மோடு பேசிக்கொண்டிருக்க கண்கள் பழையவற்றை அசைபோட்டுக்கொண்டிருந்தது)

**• சந்திரன் நன்றாக சமைப்பார் என்று கேள்விப்பட்டோமே உண்மையா?**




"வாங்களேன் ஒரு நாள் சாப்பிடலாம்" என்ற விருந்தோம்பலுடன் எமது கேள்விக்கான பதிலைத் தொடர்ந்தார். நான் செய்துகொண்டிருந்த வேலையில் போதுமான வருமானம் இல்லாததால் பகல் இரண்டாவது வேலையாக சமையல் வேலையொன்றை ஆரம்பித்தேன். அந்த வருமானமும் போதாததால் மூன்றாவதாக Cleaning வேலையையும் பார்க்க ஆரம்பித்தேன். இரண்டாவது வேலையில் படிப்படியாக முன்னேறி Chef ஆக முன்னேற்றம். இடையில் குறுக்கிட்டு எந்தவகையான சாப்பாடு உங்கள் ஸ்பெசல் என்றோம்...



Canadian, Italian, Greek உணவுகள் இன்றைக்கும் எனது ஸ்பெசல்... நம்புங்க பாஸ்... என்றார் அதே புன்னகையுடன்.

**• இப்படி சமையல் செய்துகொண்டிருக்கும் போது இந்த நிலைமைக்கு வருவீர்கள் என்று நினைத்தீர்களா?**



கனவில கூட நினைக்கவில்லை என்றார் ஒரே வார்த்தையில்....

"என்ன பாஸ் இப்பிடி சட்டுனு சொல்லிட்டிங்க என்று எமது ஆதங்கத்தை வெளிப்படுத்த...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செய்துகொண்டிருந்த வேலையில் முன்னுக்கு வருவேனா என்று எதிர்பார்த்தேன்,ஆனால் வாழ்க்கை வேறு பாதையில் கொண்டுபோகும் என்று நினைக்கவில்லை என்ற போதே நம்முடைய கேள்விக்கு நெருங்கிவந்திருக்கிறார் என்ற நிம்மதிப் பெருமூச்சு எனக்குள் வந்தது.






30 டொலர் காப்புறுத்தி தொகை கட்டமுடியாமல் தடுமாறினேன் என்று சொன்னால் நம்புவீர்களா? திருமணமாகி, நானும் எனது மனைவியும் Condo ஒன்றை வாங்கியிருந்தோம். அந்த நேரத்தில் நான் வேலை செய்த உணவகத்தில் குளிர் காலங்களில் வேலை மிகக் குறைவாக இருக்கும். எனவே வருமானமும் குறைவு. இப்படி இருக்கையில் எனக்கு காப்புறுதி செய்திருந்த முகவர், எனது வங்கிக் கணக்கில் பணம் இல்லாததால் எனது காப்புறுதி ரத்தாகப்போவதாக கூறினார்... அடுத்த கிழமை தான் சம்பளம் வரும், அப்போது எடுங்கள் என்று சொல்லவும், "ஏற்கனவே நான் உன்னைப் பார்த்திருக்கிறேன். You can do what I do, why don't you do I do" என்று கேட்டார். 2003 Sun life நிறுவனத்தில் எனது காப்புறுதி முகவரின் மனேஜர், அவர் ஒரு சைனீஸ் மனேஜர். அவரைப் போய் சந்தித்தேன். காப்பறுதித்துறையில் உள்ள நன்மைகளைக் கூறி, பணத்திற்காக வேலை செய்யாமல் மற்றவர்களுக்கு உதவும் நோக்குடன் வேலை செய்தால் உன் வாழ்க்கை மாறும் என்று எனக்கு பல ஆலோசனைகள் வழங்கினார். கஷ்டப்பட்டு படித்து ஆறு வாரங்களில் பரீட்சை எழுதி, 5 பேருக்கு காப்பறுதி செய்து அதற்கான பணம் எனது வங்கிக் கணக்கில் வந்தபின்பே காப்றுதித்துறையில் உள்ள நன்மைபற்றி அந்த மனேஜர் சொன்னதை உணர்ந்தேன்.



அதன் பின்பு நான் வேறேதையும் திரும்பிப் பார்க்கவில்லை. அதன் பின்பு எனது இலக்குகளை தீர்மானித்துக்கொண்டேன். ஒரு மாதத்தில் எத்தனை பேரைச் சந்திக்கவேண்டும்? குழந்தைகளுக்கு கல்விக்கான சேமிப்பு, பெரியவர்களுக்கு ஆயுட் காப்புறுதி என ஒவ்வொருவராகச் சந்தித்து இவற்றின் நன்மைகளை எடுத்துக்கூறி அவர்களுக்கான ஒப்பந்தங்களை எழுத ஆரம்பித்தேன். அந்த வருடத்தில் சிறந்த முகவராக சாதனை படைத்தேன். மூன்று வருடங்கள் தொடர்ச்சியக சிறந்த முகவராக தெரிவான பின் Sunlife இல் மனேஜராக உயர்வு கிடைத்தது. இப்போது நான் என்னைப்போல இரண்டு வேலை மூன்று வேலை செய்தவர்களை காப்புறுதித் துறையை பற்றி எடுத்துக் கூறி அவர்களை முகவர்களாக இணையச் செய்தேன்.

**• நீங்கள் இந்தத் துறையை தெரிவு செய்தபோது நிச்சயம் மற்றவர்களிடம் இருந்து எதிர்மறையான கருத்துகள் உங்களுக்கு வந்திருக்கும். அவ்வாறு நீங்கள் சந்தித்த பிரச்சனைகள் என்ன?**

நிச்சயமாக... முதல் முதலில் ஒருவர் சொன்ன கருத்து... 'இதெல்லாம் யார் வாங்கப்போகிறார்கள்... இது தேவையில்லாத வேலை. ஒழுங்கா செய்யிற வேலையை செய்தாலே போதும்'. இந்த மாதிரியான பல கருத்துகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மற்றவர்களால் செய்ய முடியாவிட்டால் என்னால் செய்ய முடியாதா? என்று எனக்குள்ளே ஒரு உறுதி எடுத்துக்கொண்டு இன்னும் உற்சாகத்துடன் செய்ய ஆரம்பித்தேன். இதற்கு தேவை காப்புறுதி பற்றிய போதிய அறிவு மாத்திரமே. எனவே அதைப்பற்றிய போதிய அறிவைத் தேடித் தேடி வளர்த்துக்கொண்டேன்.

**• எப்போது சொந்தமாக தொழில் தொடங்கும் எண்ணம் தோன்றியது?**

எட்டு வருடங்கள் Sunlife இல் வேலை செய்தேன். மனேஜராகப் பதவி உயர்வு கிடைத்த பின்பு என்னால் இந்தத் துறைக்குள் கொண்டுவரப்பட்டவர்கள் இப்போது நல்ல நிலைமையில்... அவர்களும் இப்போது மனேஜர்களாக இருக்கிறார்கள். அப்போது தான் நாம் ஏன் Sunlife போன்று எமது சமுதாயத்தில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது.

**• உங்கள் இந்த முடிவு ஆரம்பத்தில் மற்றவர்களுக்கு 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாகப்போகிறது என்பது போல இருந்திருக்கும். அப்படி இருந்தும் தைரியமாக எப்படி இப்படி ஒரு முடிவு எடுத்தீர்கள்?**

நாம் ஒரு விஷயத்தைத் தொடங்கும் போது அதை ஆதரிப்பவர்களை விட எதிர்ப்பவர்கள் தானே அதிகம். அதேபோல "தவறான முடிவு... இப்ப மார்க்கட் நிலவரம் சரியில்ல... அவசரப்பட்டு முடிவெடுத்திட்டாய்... இந்த முடிவுக்காக நீ வருத்தப்படப்போறாய்... "ஏதோ முயற்சி செய்து பார்" என்ற கருத்தே நான் அதிகம் கேட்டது. அவர்கள் இப்படிச் சொல்லும்போது நான் எனக்குள்ளே சிரித்துக்கொள்வேன். I already know where I want to be in 5 years, 10 years and 20 years. என்னுடைய கனவையும் பாதையையும் மற்றவர்கள் தீர்மானிக்க முடியாது. இரண்டு அல்லது மூன்று முகவர்களோடு நான் எனக்கான ஒரு குழுவைத் தெரிவுசெய்து சில நாட்களில் நிறுவனத்திற்கான பெயரைத் தெரிவு செய்தோம்.

Inforce - என்ற பெயரைத் தெரிவு செய்தோம். Force என்றால் உறுதி, வேகம், Inforce எனும் போது பலம்வாய்ந்த. உறுதியான என்று பொருள் படும். எமது சமூகத்தில் உள்ள இளைஞர்களை ஒன்றுதிரட்டி உறுதியான பலம்வாய்ந்த சமூகமாக வளர்க்க வேண்டும் என்பது எனது ஆசை. எனவே அவர்களது திறமைகளை வளர்த்து கனவுகளை அடைந்து அவர்களை நல்ல தலைவர்களாக உருவாக்க வேண்டும் என்ற கொள்ளையுடன் ஆரம்பமானதே Inforce.

**• ஆரம்பம் எப்படி இருந்தது? உங்களுக்கு பக்க பலமாய் இருந்தவர்கள் யார்?**

ஆரம்பம் என்பது எப்போது கடினமாகத் தான் இருக்கும். அந்தவகையின் எனக்கு பக்கபலமாய் இருந்தவர்கள் எனது மனைவியும் பிள்ளைகளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வருடங்களுக்கு முன் எனது வீட்டைக் கூட இழக்கும் நிலைக்குப்போய் மீண்டு வந்திருக்கிறேன். இந்தத் தருணத்தில் என்னோடு கூட இருந்தது என்னுடைய குடும்பம். அத்தோடு என்னுடைய நண்பர்கள் மற்றும் என்மேல் நம்பிக்கை வைத்த என்னுடைய வாடிக்கையாளர்கள். இவர்களின் உதவியுடனே நான் மீண்டு வர முடிந்தது. இதன்பின்னே நிறைய இளைஞர்கள் எமது நிறுவனத்தில் வந்துசேர ஆரம்பித்தார்கள்.



**• சரி.... மற்ற இளைஞர்களைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம்... சந்திரன் ராசலிங்கம் என்ற அழகான இளைஞன் எதிர்கொண்ட பிரச்சனைகளைப் பற்றி பேசலாமே? சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது போன்ற பிரச்சனை ஏதுவும் உங்களுக்கு இருந்ததா?**

'ஏற்கனவே வெளியில் குளிர் தாங்கமுடியவில்ல... இதில நீங்க வேறயா... என்று சிரித்துக்கொண்டே மீண்டும் பேச ஆரம்பித்தார். பொதுவாகவே ஒருவருக்கு உண்மையும் நேர்மையும் முக்கியம். எப்போதுமே நாம் உண்மைபேசும் போது ஞாபகத்தில் வைத்திருக்க தேவையில்லை. இதில் நான் எப்போதும் கவனமாக இருப்பேன். அடுத்தது நான் ஏற்கனவே Sunlife இல் வேலை செய்யும் போது மற்றவர்களுக்கு என்மேல் நல்ல அபிப்பிராயம் ஒன்று இருந்தது. அத்தோடு என்னுடன் வந்து இணைந்துகொண்ட இளைஞர்களையும் நான் வெற்றியின் பாதையில் வழிநடத்த அவர்கள் மற்றவர்களிடம் என்னைப் பற்றி சொல்லும் போது நான்கு அல்லது ஐந்து பேருடன் இருந்த என்னுடைய குழு இப்போது இந்த இரண்டரை வருடங்களில் நாற்பதாக அதிகரித்திருக்கிறது.



**• புதிதாக இணையும் காப்புறுதி முகவர்களுக்கு நீங்கள் சொல்லும் ஆலோசனை?**

பணம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு இந்தத் துறைக்குள் வந்தால் அவர்களால் வெற்றிபெற முடியாது. மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு அதிகமாக இருக்கவேண்டும். ஒருவரின் வீட்டுக்கு சென்று அவரின் கதவைத்தட்டி உள்ளே செல்லும் போது அந்தக் குடும்பத்தைப் பற்றிய அக்கறை இருக்கவேண்டும்.

**• இன்று காப்புறுதி என்றாலே எமது மக்கள் ஓட்டம் பிடிக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?**

இதற்குக் காரணம் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் காப்புறுதி பற்றிய போதிய அறிவில்லாமல் இந்தத் துறைக்குள் நுழைந்தவர்கள். இவர்களுக்கு குடும்பத்தின் மீதோ... அல்லது ஒரு குடும்பத்தை தாங்கி நடத்துபவர் பற்றிய அக்கறையின்மையே. இவர்கள் தங்களுக்கு பணம் வந்தால் போதும் என்ற அடிப்படையில் செய்த நடவடிக்கைகளே மக்களை அதிகம் பாதித்துள்ளது.

**• கனடாவிற்கு புதிதாக வரும் ஒரு இளைஞனுக்கு நீங்கள் சொல்லவிரும்புவது?**

இப்போது கனடாவில் இருப்பது வளர்ச்சியடைந்த, உறுதியான, கல்வியறிவுள்ள சமூகம். நான் கனடாவிற்கு வந்தபோது இவ்வாறு உறுதியான சமூகம் இருக்கவில்லை. படித்தவர்கள் மட்டுமே இருந்தார்கள். அவர்களுக்கு தேவைப்பட்டது ஒரு வேலை மாத்திரமே. கனவு இருக்கவில்லை. அவர்களது தேவை பணமாக மட்டுமே இருந்தது. ஆனால் தற்போது பல்வேறு சந்தர்ப்பங்கள் இளைஞர்களுக்கு கிடைக்கிறது. எனவே எனக்கு ஏதோ ஒரு வேலை கிடைத்தால் போதும் என்று இருக்காமல், விஷயம் தெரிந்த ஒருவரை அணுகி, என்னுடைய எதிர்கால கனவு இது. இந்த நாட்டில் நான் இவ்வாறு வர விரும்புகிறேன். இதற்கு என்ன செய்யலாம்? எந்தத் துறையை தெரிவு செய்யலாம் எனக்கேட்டு அந்தப் பாதையில் போவதே மேல்.

## ஒரே கேள்வி.. ஒரே பதில்..

**• அரசியல்?**

சாக்கடை

**• கடவுள்?**

கடவுள் இல்லையேல் எதுவும் இல்லை.
I Believe in God

**• பிடித்த உணவு?**

Vegetarian

**• பிடித்த நாடு?**

எப்போதுமே போக ஆசைப்படுவது தமிழீழம்.. ஆனாலும்... இந்தியா பிடித்த நாடு

**• படித்த பாடசாலை?**

யாழ். இந்துக்கல்லூரி

**• நீங்கள் துவண்டுபோகும்போது உங்களை ஊக்குவிக்கும் ஒரு வசனம்...?**

If you're absent during my struggle, don't expect to be present during my success.




**• உங்களுக்கு பிடித்த தலைவர்?**

Walt Disney

**• ரோல் மாடல்?**

என்னை காப்புறுதித் துறைக்குள் கொண்டுவந்த அந்த சைனீஸ் மனேஜர் Joseph Chu

**• Gossip என்றால்?**

ஒருவரின் இயலாமையின் வெளிப்பாடு

**• பிடித்த நிறம்...?**

நீலம் (Sky Blue)





**• உங்கள் பணி ஓய்வு (Retirement) காலத்தில் நீங்கள் செய்ய விரும்புவது?**

என்னை வாழவைத்த எனது சமூகத்திற்கு திருப்பிக்கொடுக்கும் காலம்...

**இதை வாசித்துக்கொண்டிருப்பவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?**

If you want something... Go get it.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. REFINANCE

## Dr. ரீபைனான்ஸ்



புற்றுநோயாக புரையோடிக்கிடக்கும்
உங்களின் பண நெருக்கடியை விசேட
**அறுவைச்சிகிச்சை**
மூலம் அறவே ஒழித்து ஆரோக்கியமான
வாழ்வைப்பெற அழையுங்கள்

**MORTGAGE:** Home equity Loan, 2nd Mortgage and other financial needs.

**$ 1000.00** முதல் ஒரு லட்சம் வரை மோட்கேஜ் பிரேக் ஆகாமல் கடனாக பெறவும் 68 பேமன்ற்ஸ்களையும் ஒரே பேமன்றாக செய்யவும்

**சிவா** இரத்தினசிங்கம்

Brokerge # 1156, Licence M08882133

**416.520.1214 | 416.430.0111**




2857, Lawrence Ave. Unit - 6. Scarborough.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளில்

## அதிக வசூல் செய்த படங்கள்!

முன்பெல்லாம் ஒரு படம் 100 நாட்கள் ஓடினால் தான் மிகப்பெரிய லாபத்தை கொடுக்கும். ஆனால், இன்று 3 நாட்கள் நன்றாக ஓடினாலே போதும், போட்ட பணத்தை எடுத்து விடலாம். அந்த வகையில் தற்போது உள்ள சூழ்நிலையில் முதல் நாள் வசூல் என்பது மிகவும் முக்கியம்.




### லிங்கா

எப்போதும் எதிலும் சூப்பர் ஸ்டார் தான் முதலிடம், அவர் சாதனையை முறியடிக்க மீண்டும் அவரே, ஒரு படம் நடித்தால் தான் முடியும் போல. அந்த வகையில் சமீபத்தில் வந்த லிங்கா படத்தின் முதல் நாள் வசூல் ரூ37கோடி.




### கத்தி

சூப்பர் ஸ்டாருக்கு அடுத்த நிலையில் தமிழ் சினிமாவின் பாக்ஸ் ஆபிஸை கொள்ளையடிப்பவர் இளையதளபதி விஜய் தான் இவரது நடிப்பில் கடந்த தீபாவளிக்கு வெளிவந்த கத்தி முதல் நாள் மட்டும் ரூ 23.80 கோடி வசூல் செய்ததாக கூறப்பட்டது.




### அஞ்சான்

இந்த வருடம் மாபெரும் எதிர்ப்பார்ப்புடன் வெளிவந்த படம் அஞ்சான். அந்த எதிர்ப்பார்ப்பின் காரணமாகவே இப்படத்தின் வசூல் முதல் ரூ15.1கோடி வரை வந்தது. ஆனால், பிறகு ஏற்பட்ட மோசமான விமர்சனங்களால் வசூல் குறைய ஆரம்பித்து விட்டது.




### சிங்கம்2

சூர்யா பல்லைக் கடித்துக்கொண்டு 10 நிமிடம் மூச்சுவிடாமல் பேசினால் அது கண்டிப்பாக ஹரி படமாகத்தான் இருக்கும். சிங்கம் வெற்றியை தொடர்ந்து அதன் அடுத்த பாகமாக வெளிவந்த சிங்கம்-2வின் முதன் நாள் வசூல் ரூ13கோடி. இப்படம் மலேசியாவின் பாக்ஸ் ஆபிஸில் ருத்ர தாண்டவம் ஆடியது குறிப்பிடத்தக்கது.




### எந்திரன்

ஷங்கரின் இயக்கத்தில் உலகத்தர விஷ்வல், அனிமேஷன் என சூப்பர் ஸ்டார் நடிப்பில், ஷங்கர் இயக்கத்தில் வெளிவந்த படம் எந்திரன் இப்படத்தின் முதல் நாள் வசூல் ரூ 11.25 கோடி. தற்போது வரை இப்படத்தின் முழு வசூலை எந்த படமும் நெருங்க கூட முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஆரம்பம்

தல என்றாலே கிங் ஆப் ஓப்பனிங் தான். அந்த வகையில் ஆரம்பம் திரைப்படம் முதல் நாள் வசூல் ரூ10 கோடி. இப்படத்துடன் இன்னும் 2 பெரிய படங்கள் வந்தது குறிப்பிடத்தக்கது.



## ஜில்லா

விஜய் கேரளா மார்க்கெட்டை குறிவைத்து எடுத்த படம் ஜில்லா. இப்படத்தில் மோகன் லால் நடித்தது பெரிதும் வரவேற்பை பெற்றது. இப்படத்தின் முதல் நாள் வசூல் ரூ10 கோடி என கூறப்படுகிறது.



## வீரம்

ஜில்லாவிற்கு போட்டியாக அஜித் நடிப்பில் வெளிவந்த படம் வீரம். இப்படம் பி, சி செண்டர்களில் வசூலை வாரி குவித்தது. இப்படத்தின் முதல் நாள் வசூல் ரூ 9.3 கோடி.



## துப்பாக்கி

விஜய்யின் கேரியரிலேயே மிகவும் முக்கியமான படம் துப்பாக்கி. இப்படம் 180 கோடி ரூபாய் வரை வசூல் செய்தது. இப்படத்தின் முதல் நாள் வசூல் ரூ 9.25 கோடி.




## கோச்சடையான்

ஒரு அனிமேஷன் படத்திற்கு இத்தனை எதிர்ப்பார்ப்பா? என்றால் அதற்கு காரணம் சூப்பர் ஸ்டார் தான். அவரின் குரலுக்காகவே இப்படத்தின் முதல் நாள் வசூல் ரூ 9 கோடி. ஆனாலும் போக போக படத்தின் வசூல் டல் அடிக்க, படம் தோல்விப்படமானது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி

இந்தப் பெட்டிகளில் உள்ள இலக்கங்களில் ஒன்று வித்தியாசமானது. அதனைக் கண்டுபிடியுங்கள்.

## கேள்வி - 01

2, 12, 17, 8, 10, 6


50, 20, 22, 40, 25


16, 20, 12, 22, 32

11, 16, 15, 9, 13, 17, 19

மூன்றாவது முக்கோணத்திலுள்ள இலக்கத்தை கண்டுபிடியுங்கள்.

## கேள்வி - 02




சரியான விடைகளை அனுப்பும் 4 அதிஷ்டசாலி வாசகர்களுக்கு பூரணி விலாஸ் வழங்கும் **$ 25** பரிசுக்கூப்பன் காத்திருக்கிறது.

சரியான விடைகளை மார்ச் 30ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**THOORAL**
**P.O. Box 4040**
**McCowan Square PO,**
**Scarborough, ON, M1H 0A4**
**Fax : 416 273 7606 E-mail : editorial@thooraloline.com**

பெயர்..............................

முகவரி..............................

..............................

தொலைபேசி..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பிலே... என்பதைப் போன்று பெற்றோரின் வளர்ப்பை குழந்தைகளின் நடவடிக்கைகள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

குழந்தைகளை வளர்ப்பது அம்மாக்கள் என்றிருந்த காலம் மாறி தற்போது பெற்றோர் இருவரும் குழந்தை வளர்ப்பில் ஈடுபடுவதும், குழந்தை வளர்ப்பில் இருவரது பங்கும் முக்கிய அம்சமாகவும் மாறியுள்ளது.

குழந்தைகளுக்கு சிறு வயதில் இருந்தே சில நல்ல பழக்கங்களை பின்பற்ற வைக்க வேண்டும். ஆனாலும் அவற்றை வற்புறுத்தி செய்ய வைக்கக்கூடாது. அதை மகிழ்ச்சிகரமான ஒரு விளையாட்டாக, அல்லது அவர்களும் அவற்றை ஆர்வத்துடன் பின்பற்றக்கூடிய வகையில் சொல்லிக்கொடுக்க வேண்டும். அவற்றின் நன்மைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.



# குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய நல்ல பழக்கங்கள்

## இருமுறை பல் துலக்குதல்

நிறைய குழந்தைகள் பல் துலக்கவே சோம்பேறித்தனப்படுவார்கள். எனவே புரியாத வயதுள்ள குழந்தைகளாக இருந்தால், அவர்களை அழைத்து பற்களை தேய்த்துவிடுங்கள். அதுவே புரிந்து கொள்ளும் வயதுள்ளவர்களாக இருந்தால், அவர்களுக்கு பற்களை தினமும் இரண்டு முறை தேய்ப்பதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் தீமைகளைச் சொன்னால், அவர்களே தினமும் பற்களை தேய்க்க வேண்டுமென்று உங்களை தேடி வருவார்கள்.

## ஆரோக்கியமான உணவுப்பழக்கம்

தற்போதுள்ள குழந்தைகளுக்கு Pizza, McDonalds, KFC போன்றவை தான் பிடிக்கிறது. ஆனால் அதனை சிறுவயதிலேயே வாங்கிக் கொடுத்து பழக்கிவிட்டால், பின் அவர்கள் அதற்கு அடிமையாகி, பிற்காலத்தில் ஆரோக்கியமற்ற உடலைப் பெற்றிருப்பார்கள். அத்துடன் சிறுவயதிலேயே வயதிற்கு மீறிய வளர்ச்சியும், உடற் பருமனும் ஏற்படும். ஆகவே அவர்களுக்கு ஆரோக்கிய உணவுகளை வீட்டிலேயே சமைத்துக் கொடுத்து, வீட்டு உணவின் சுவைக்கு பழக்கப்படுத்த வேண்டும்.

அத்துடன் சாப்பிடும் போது எப்படி உட்கார்ந்து, நிதானமாக மென்று சாப்பிட வேண்டும் என்ற பழக்கத்தையும், சாப்பிடும் போது ரிவி பார்த்தல், புத்தகங்கள் வாசித்தல் போன்ற வேறு விடயங்களையும் சேர்த்து செய்தல் கூடாது என்பதையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

## சரியான படுக்கை நேரம்

குழந்தைகளுக்கு தினமும் இரவில் ஒரே நேரத்தில் படுக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதனால் ஒழுங்கான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ்வார்கள். குழந்தைகளுக்கு 8-9 மணிநேரத் தூக்கம் மிகவும் இன்றியமையாதது. நிறைய பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நல்ல பழக்கம் சொல்லி தருகிறேன் என்று அதிகாலையிலேயே குழந்தையின் தூக்கம் கலைவதற்குள்ளேயே எழுப்பி விடுவார்கள். உண்மையில் அவ்வாறு எழுப்புவது நல்ல பழக்கமல்ல. சொல்லப்போனால் அது அவர்களது உடலுக்கு கெட்டதைத் தான் விளைவிக்கும். ஆகவே அவர்களது தூக்கம் கலைவதற்கு முன்பே, அடித்து எழுப்ப வேண்டாம். அதற்காக அளவுக்கு அதிகமாகவும் தூங்க விடக் கூடாது. இல்லாவிட்டால், நாளடைவில் அதுவே கெட்ட பழக்கமாகிவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவான தொழிநுட்ப சாதனங்கள்

குழந்தைகளை ஒரேயடியாக டிவி பார்க்கவோ அல்லது கணனியில் நேரம் செலவிடவோ கூடாது என்று சொல்லக்கூடாது. அதேசமயம் அளவுக்கு அதிகமாக இவற்றை செய்யவும் விடக்கூடாது. வேண்டுமெனில் அதற்கு பதிலாக விளையாட்டில் ஈடுபட வைக்கலாம். இதனால் உடல் நலம் ஆரோக்கியமாக இருப்பதோடு, கண்ணிற்கு எந்த பாதிப்பும் ஏற்படாமலும் இருக்கும்.

## சுத்தம்

குழந்தைகளை சிறு வயதிலேயே சுத்தம் செய்யும் பழக்கத்தை சொல்லிக் கொடுக்க வேண்டும். உதாரணமாக, சாப்பிடும் போது சாப்பாடு கீழே கொட்டிவிட்டால், அதனை அவர்களையே சுத்தம் செய்ய சொல்ல வேண்டும். மேலும் படிக்கும் அறையை வாரந்தோறும் சுத்தம் செய்யுமாறு பழக்கப்படுத்த வேண்டும். தங்களைச் சுற்றி உள்ளவற்றை தாங்களே சுத்தம் செய்ய பழக்கவேண்டும்.

## பெரியவர்களுக்கு மரியாதை

குழந்தைகளுக்கு தவறாமல் கற்றுக் கொடுக்க வேண்டியவைகளில் முக்கியமானது 'நன்றி' மற்றும் 'தயவு செய்து' போன்ற மரியாதையான வார்த்தைகள் தான். எனவே இதனை மறக்காமல் சொல்லிக் கொடுக்க வேண்டும். அத்துடன் வயதில் மூத்தவர்களுக்கு உரிய மரியாதை கொடுத்து அவர்களை மதித்து நடக்க பழக்கவேண்டும்.

## பகிர்ந்து கொள்ளுதல்

பகிர்ந்து கொள்வது என்பது ஒருவிதமான சந்தோஷம். ஆனால் தற்போதுள்ள குழந்தைகள் இதனை செய்வதில்லை. மேலும் தற்போதைய பெற்றோர்கள் ஒரு குழந்தையோடு நிறுத்திக் கொள்வதால், குழந்தைகளால் அவர்களுக்குரிய பொருளை வீட்டிற்கு யாரேனும் வந்தால், அவர்களை தொடக்கூட அனுமதிப்பதில்லை. எனவே இந்த பகிர்தல் பழக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

## உதவி செய்தல்

மற்றவர்களுக்கு உதவுவது மிகவும் முக்கியமான ஒன்று. இன்றைய உலகில் மனித நேயம் செத்துக் கொண்டிருக்கிறது. பக்கத்தில் இருப்பவருக்கு ஏதேனும் நடந்தால் கூட திருப்பிப் பார்க்க நேரமில்லால் செல்கின்றனர். அவ்வாறில்லாம் மற்றவர்கள்மேல் அக்கறை காட்டுதல், அவர்களுக்கு உதவுதல், மற்றவர்களின் கஷ்டத்தைப் புரிந்து கொள்ளுதல் போன்றவற்றை சொல்லிக்கொடுங்கள். சற்று பெரிய குழந்தைகளாக இருந்தால், நீங்கள் வீட்டு வேலை செய்யும் போது, அவர்களை உடன் அழைத்து சிறு சிறு வேலைகளை செய்யுமாறு சொல்லுங்கள். அவர்களை சிறுவயது முதலே பழக்கப்படுத்துங்கள்.


## பொறுப்பு

சிறுவயதில் இருந்தே அவர்களுக்கு பொறுப்புக்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும். அதிலும் அவர்களுக்கு செலவிற்கு பணம் கொடுத்தால், அதை சேமித்து வைத்து, தேவையான பொருட்களை வாங்க வேண்டும் என்று சொல்லி பழக்க வேண்டும். இதனால் பிற்காலத்தில் அவர்களுக்கு சேமிக்கும் பழக்கம் அதிகரித்து, நல்ல பொறுப்புள்ள மனிதனாக இருப்பார்கள். பொது இடங்களில் அதுவும் நடக்கும் பாதைகளில் குப்பையைப் போடும் பொழுது கண்டித்து, அதனை குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்று அறிவுறுத்த வேண்டும். இதனால் சிறு வயதிலேயே சமூகத்தின் மீது அக்கறை கொண்டவராக மாற்றலாம்.

இவ்வாறான செயல்களை மற்றவர்கள் பார்க்கும் பொழுது, பெற்றோரின் வளர்ப்பை அனைவரும் பாராட்டுவார்கள். தன் மகனை சான்றோன் எனக் கேட்ட பெருமை உங்களையே சாரும்...

– தனஞ்சயன்

பக்கம் 09 "In சுவை" பகுதியில் உள்ளவர் நடிகர் "ஜீவா"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Computek College

Est. 1991

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

## சில மாதங்களிலே வேலை வாய்ப்பு!



## DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

## CERTIFICATE COURSES

**Bank Teller, Tax preb Food Service Worker, Food Handler AccPac, Quick books, Simply Accounting, MS Office C/C++, C#,Java/J2EE, VB.net, SQL Exam Prep: A+, Network+, MCSE, CCNA**

**NOW ACCEPTING INTERNATIONAL STUDENTS!**

Computek College is approved as a Designated Learning institution (DLI) by Citizensship and Immigration Canada(CIC)

For Student Visa Details

416.321.9911 | 905.471.3344

416.285.9941

**www.computek.edu - info@computek.edu**

| Markham Campus | Toronto Campus | Scarborough Campus |
|---|---|---|
| Markham/Steeles | Kennedy/Sheppard | Kennedy/Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்க டென்ஷன் பார்ட்டியா!

உடல் நலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமெனில், அதற்கு நிறைய செயல்களை கடைபிடிப்பதோடு, ஒரு சிலவற்றையும் அடக்கி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருவர் எதை அடக்க தெரிகிறாரோ, இல்லையோ, கோபத்தை அடக்க தெரிந்திருக்க வேண்டும்.

ஏனெனில் கோபத்தால், ஒருவரது நட்பு எப்படி முறிய வாய்ப்புள்ளதோ, அதேப்போல் உடலில் உள்ள உயிரும் சில சமயங்களில் முறிய வாய்ப்புள்ளது.


கோபம் என்பது எந்த நேரத்திலும் வரும். ஆனால் அந்த கோபம் அளவுக்கு அதிகமானால், அவை உடலில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தும். உதாரணமாக, மன அழுத்தம், இதய நோய், இரத்த அழுத்தம், தலைவலி, போதிய தூக்கம் இல்லாமை போன்றவை. இத்தகைய பிரச்சனைகள் உடலில் வந்தால், பின் உடல் நிலையானது மிகவும் மோசமாகி, பின் இறப்பை சந்திக்க நேரிடும்.

ஆகவே கோபம் கொள்வதால், உடலில் எந்த மாதிரியான பிரச்சனைகள் வரக்கூடும் என்பது குறித்து கீழே விளக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து தெரிந்து கொண்டு, இனி கோபம் கொள்ளலாமா, வேண்டாமா என்பதை முடிவெடுங்கள்.

## மன அழுத்தம்:

கோபம் அதிகம் வந்தால், மன அழுத்தம் அதிகமாகும். மன அழுத்தம் அதிகமானால், நீரிழிவு, மன இறுக்கம், இரத்த அழுத்தம் போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதய நோய்:

கோபத்தின் காரணமாக ஏற்படும் படபடப்பு மற்றும் அதிகப்படியான இதய துடிப்பு போன்றவை இதயத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். சில சமயங்களில் அவை இதயத்திற்கு மிகவும் ஆபத்தான விளைவைக் கூட ஏற்படுத்தும்.

## தூக்கமின்மை:

எப்போது கோபப்படுகிறோமோ, அப்போது உடலில் உள்ள ஹார்மோன்களானது சுறுசுறுப்புடன் இருக்கும் இதனால் சரியான தூக்கம் கூட வராது.

மேலும் உடலுக்கு வேண்டிய ஓய்வானது கிடைக்காமல், எளிதில் நோய்களானது உடலைத் தாக்கும். சில சமயங்களில் தூக்கமின்மை ஒருவரை பைத்தியமாக கூட மாற்றிவிடும்.

## உயர் ரத்த அழுத்தம்:

உயர் ரத்த அழுத்தமானது பல காரணங்களால் நிகழ்ந்தாலும், அதில் கோபமும் ஒன்று. அதிலும் எப்போது கோபம் வருகிறதோ, அந்த நேரமே உடலில் ரத்த அழுத்தமானது உடனடியாக அதிகப்படியான அளவில் அதிகரிக்கும்.

அவ்வாறு உடனே அதிகரிக்கும் போது, இதயமானது பெரும் அளவில் பாதிக்கப்படும்.

## சுவாசக்கோளாறு:

சுவாசக் கோளாறான ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்கள், கோபப்படும் போது சரியாக சுவாசிக்க முடியாது. ஆகவே ஆஸ்துமா உள்ளவர்கள், அதிகம் கோபப்பட வேண்டாம்.

இல்லையெனில் அது மூச்சடைப்பை ஏற்படுத்தி, உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தும்.

## தலைவலி:

எப்போது கோபம் வருகிறதோ, அப்போது இரத்த அழுத்தம் அதிகமாவதால், மூளைக்கும் செல்லும் இரத்த குழாயானது அதிக அளவில் மூளைக்கு வேகமாக இரத்தத்தை செலுத்தும் போது, மூளையில் ஒரு வித அழுத்தம் ஏற்பட்டு, தலை வலியை உண்டாக்கும். எனவே கோபத்தின் போது வரும் தலைவலியை குறைப்பதற்கு, உடனே அமைதியாகிவிடுவது நல்லது.

## மாரடைப்பு:

பொதுவாக ஒருவருக்கு மாரடைப்பானது அதிகப்படியாக உணர்ச்சிவசப்படுதல், ஆச்சரியப்படுதல் அல்லது கோபத்தின் காரணமாக ஏற்படும். இவற்றில் பெரும்பாலானோர் கோபத்தின் காரணமாகத் தான் மாரடைப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே தான், இதய நோயாளிகளிடம் எந்த ஒரு அதிகப்படியான மகிழ்ச்சியான விஷயத்தையும் அல்லது அவர்களை கோபமூட்டும் விஷயத்தையும் சொல்ல வேண்டாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## மூளை வாதம்:

மூளை வாத நோய் ஏற்படுவதற்கு மூளையில் உள்ள இரத்த குழாய்கள் வெடிப்பது தான் காரணம். இந்த மாதிரியான இரத்த குழாய்கள் வெடிப்பதற்கு முக்கிய காரணம் கோபம்.

ஏனெனில் கோபத்தினால், இரத்த அழுத்தமானது அதிகப்படியாக இருப்பதால், அவை இரத்த குழாய்களை சில சமயங்களில் வெடிக்கச் செய்து, உயிரைப் பறித்துவிடும்.

எனவே எப்போதும் அதிகப்படியான கோபம் கொள்ளக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : உங்க பையன் ஆங்கிலத்தில படு வீக்கா இருக்கான் சார்.
பையனின் தந்தை : தமிழிலே எப்படி இருக்கான்னு சொல்லுங்க, சார்.
ஆசிரியர் : தங்கள் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்து இருக்கின்றான், ஐயா.

(முதலிரவு அறையில்...பெண்ணிடம் )
"என்னது? அங்கேயே வெட்கப்பட்டுகிட்டு நிக்கிறே? உனக்கு யாரும் எதுவும் சொல்லித் தரலையா?"

"சொல்லித் தந்தாங்க. மொதல்ல ஐஞ்சு நிமிடம் வெட்கப்படணும்னு சொன்னாங்க. அதான் பட்டுகிட்டு இருக்கேன்...!"

டாக்டர்: ஒரு சின்ன சந்தேகம் கேட்டா தப்பா நினைக்கக் கூடாது..
நோயாளி: இல்ல பரவால்ல.. கேளுங்க டாக்டர் ஐயா..
டாக்டர்: ஆப்பரேசனுக்கு அப்பறம் நான் Fees'ஐ யார்கிட்ட போய் வாங்கறது???

அப்பா: நேத்து ராத்திரி பரிச்சைக்கு படித்தேன்னு சொன்ன, ஆனா உன் ரூம்ல லைட்டே எரியல?
மகன்: படிக்குற இன்ட்ரெஸ்ட்ல அதை எல்லாம் நான் கவனிக்கலப்பா!!

அம்மா வெச்சிருந்த பணத்துல நூறு ருபாய் நான் எடுத்ததை எங்கப்பா பார்த்துட்டார்..!
அய்யய்யோ...உங்கப்பா போலீஸ்காரராச்சே... எப்படி சமாளிச்சே..?
நைசா அவர் கையிலே ஐம்பது ருபாயை திணிச்சதும் கண்டுக்காம விட்டுட்டார்...!

# Ha.. Ha.. Ha.. Ha.. Ha.. Ha..
# சிரிப்போ சிரிப்பு...

- ராகவன்

நபர் – 1: "இப்ப இருக்கற பொருளாதார சூழ்நிலையில கம்பெனி தடுமாறுது. அதனால உங்களை வேலையை விட்டு அனுப்பறோம்"னு சொன்னாங்களா???.. நீங்க அதுக்கு என்ன சொன்னீங்க????

நபர் – 2: இப்ப இருக்கற பொருளாதார சூழ்நிலையில வேலைக்கு வர்றதும் கூட எனக்கு கஷ்டமாத்தான் இருக்குன்னு சொல்லிட்டேன்!

நோயாளியின் உறவினர் : டாக்டர் எனக்காக நீங்க ஒரு காரியம் பண்ணனும்...!
டாக்டர்: Sorry... நான் operation மட்டும்தான் பண்ணுவேன்.... காரியம் நீங்கதான் செய்யணும்!


காலை 11 மணி அளவில் ஒரு ரெகுலர் கஸ்டமர் அந்த பாருக்கு வந்தார்.
"நேத்திக்கு நைட் நான் இங்கே வந்தேனா"
"ஆமாம் "
"குடிச்சேனா"
"ஆமாம் "
"எவ்வளவு பில் ஆச்சு ?"
"1500 ருபாய் "
"அப்பாடா நல்ல வேளை காலைல பணத்தை காணோம் - வேற எங்கேயோ போய் " வேஸ்ட் பண்ணிட்டேனோ?"ன்னு பயந்துட்டேன்

தற்கொலை, கொலை இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?....
உங்க முகத்தை நீங்க கண்ணாடியில் பார்த்தால் அது தற்கொலை..
உங்க போட்டோவை என்கிட்ட கொடுத்து பார்க்க சொல்றது கொலை....

நபர் – 1: ஏண்டா..! நாளைக்கு ஒரு நாள் லீவு இருக்கே நான் எங்க சித்தி வீட்டுக்குப் போகலாம்னு இருக்கேன்..... நீ எங்கே போகப் போறே..??
நபர் – 2: நான் 'Zoo'வுக்கு போகலாம்னு நினைக்கிறேண்டா...
நபர் – 1: அது சரி... அவங்கவுங்க சொந்தக்காரங்க இருக்கிற இடத்துக்குதானே போக முடியும்!!!..

நபர் – 1: நேத்து உன்னைத் தேடி உன் வீட்டுக்கு வந்தேன். உன்னை எங்கேன்னு உங்க அப்பாகிட்டகேட்டதுக்கு "அந்த மாடு எங்க மேயுதோ?"ன்னு சொன்னாருடா. உனக்கு உன் வீட்டில மரியாதை அவ்வளவுதானா???
நபர் – 2: ஓகோ... உன்னைத் தேடி ஒரு கழுதை வந்திச்சின்னு சொன்னாரு... அது நீ தானா???


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விளையாட்டு உலகம்

## டி20 உலகக்கிண்ணம் வென்ற இலங்கை அணி



கடந்த ஆண்டில் மார்ச் மாதம் வங்கதேசத்தில் தொடங்கிய டி20 உலககிண்ணத் தொடரில் 2 முறை இறுதி போட்டிக்கு வந்து உலகக்கிண்ணத்தை தவறவிட்ட இலங்கை, இறுதி போட்டியில் இந்திய அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

## இரட்டை சாதனை படைத்த சங்கக்கார



கடந்த டிசம்பர் மாதம் இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் 3வது போட்டியில் சச்சின் பொண்டிங் வரிசையில் 13,000 ஓட்டங்களை கடந்த சங்கக்காரா, விக்கெட் கீப்பராக 473 பேரை ஆட்டமிழக்க செய்து உலகசாதனை படைத்தார்.

## பதக்கத்தை வாங்க மறுத்த சரிதா தேவி



ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மகளிர் குத்துச்சண்டை பிரிவின் அரையிறுதியில் தென்கொரிய வீராங்கனை ஜினா பார்க்கிற்கு ஆதரவாக செயல்பட்டார் நடுவர். இதனால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக இந்திய வீராங்கனை சரிதா தேவி வெண்கல பதக்கத்தை வாங்க மறுத்தார். மேலும் அதை ஜினா பார்க்கிற்கு அணிவித்து சர்ச்சையை கிளப்பினார்.

## உலகக்கிண்ணம் வென்ற ஜேர்மனி




கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்தி வந்த ஜேர்மனி, இறுதிப் போட்டியில் அர்ஜென்டினாவை 1-0 என்ற கணக்கில் வீழ்த்தி 24 வருடங்களுக்கு பிறகு கிண்ணம் வென்றது.

## இரட்டை சாதனை படைத்த ரோஹித் சர்மா



கடந்த நவம்பர் மாதம் இலங்கைக்கு எதிரான தொடரில், கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த 4வது ஒருநாள் போட்டியில் ரோஹித் சர்மா 2வது முறையாக இரட்டை சதம் அடித்து உலகசாதனை படைத்தார். இவர் 264 ஓட்டங்கள் குவித்து உலகை பிரமிக்க வைத்தார்.

## இத்தாலி வீரரை கடித்த சுவாரஸ்



கடந்த ஆண்டு உலகக்கிண்ண தொடரின் லீக் ஆட்டத்தில் இத்தாலி வீரர் ஜியார்ஜியோ செலினியை, உருகுவே வீரர் லூயிஸ் சுவாரஸ் தோள்பட்டையில் கடித்து வைத்து பரபரப்பை ஏற்படுத்தினார். இதனால் அவருக்கு 4 மாதம் போட்டிகளில் விளையாட சர்வதேச கால்பந்து சங்கம் தடை விதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜடேஜா- ஆண்டர்சன் மோதல்




இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது இந்திய அணியின் ரவீந்தர ஜடேஜாவை, இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் ஆண்டர்சன், தள்ளியதுடன், தகாத வார்த்தைகளால் திட்டியதாக புகார் எழுந்தது. விஸ்வரூபம் எடுத்த இந்த விவகாரம் பின்னர் சுமுகமாக முடிந்தது.

## பொல்லார்ட்- ஸ்டார்ச் மோதல்



கடந்த ஆண்டு ஐ.பி.எல் தொடரில், மும்பை இந்தியன்ஸ் பெங்களூர் றொயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதிய ஒரு போட்டியில்,17வது ஓவரை பெங்களூர் வீரர் ஸ்டார்ச் வீசினார். அப்போது பந்து துடுப்பெடுத்தாடிய பொல்லார்ட் மேல் பட, கோபமடைந்த பொல்லார்ட் மட்டையை அவரின் மீது வீசினார். ஆனால் அதிர்ஷ்டவசமாக அது கைநழுவி கீழே விழுந்தது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## சர்ச்சையான சுயசரிதை




கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 6ம் திகதி இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர ஆட்டக்காரர் சச்சின் "Playing It My Way" என்ற சுயசரிதை புத்தகத்தை வெளியிட்டார். இதில் முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சேப்பல், டிராவிட்டிடம் இருந்து அணித்தலைவர் பதவி வாங்கி தருவதாகவும், நாம் இந்திய கிரிக்கெட்டை பல ஆண்டுகள் வழிநடத்தலாம் எனக் கூறியதாக பல்வேறு சர்ச்சை விடயங்களை குறிப்பிட்டிருந்தார்.

## பிலிப் ஹியூக்ஸ் மரணம்



அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் நியூ சவுத்வெல்ஸ்-தெற்கு அவுஸ்திரேலிய அணிகள் மோதிய போட்டியில், தெற்கு அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ பவுன்சர் பந்து தாக்கி உயிரிழ்ந்தார். இவரது மரணம் கிரிக்கெட் வீரர்களை மட்டுமின்றி உலக ரசிகர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது.

## குட்டிக்கரணம் போட்ட வீரர் மரணம்



மிஜோரம் பிரிமியர் லீக் போட்டியில் பெத்லஹம் வெந்த்லாங் கால்பந்து கிளப்பிற்காக ஆடிய பீட்டர் பியக்சாங்சுலா, தன் அணிக்காக முதல் கோலை அடித்து சமன் செய்தார். அப்போது தான் அடித்த கோலை தலைகீழாக குட்டிக்கரணங்கள் அடித்து கொண்டாட முயன்றதில் உயிரிழந்தார்.

## தோல்வியை தழுவிய பிரேசில்



கடந்த ஆண்டு நடந்த உலக கிண்ணத் தொடரின் அரையிறுதியில் ஜேர்மனி, பலம் பெருந்திய பிரேசில் அணியை அந்நாட்டு ரசிகர்களின் அழுகைக்கு நடுவே 7-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தொடரை விட்டு வெளியேற்றியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trust *is a wonderful thing.*



Trust is knowing someone is there to catch your fall.
It's knowing someone will be there
when you need a shoulder to cry on.
It's knowing a promise made is a promise kept.
Trust is something we earn everyday.

**OGDEN**
FUNERAL HOMES
Scarborough • 416-293-5211
4164 Sheppard Ave. E. *(East of Kennedy Rd.)*
www.ogdenfuneralhome.com

**MEGA**
Financial Group



எந்தவித மருத்துவ பரிசோதனைகளும்,
மருத்துவ கேள்விகளும் கேட்கப்படமாட்டாது...

**Thinking of Insurance! We have Solutions**

**No Medical | No Health Questions | Upto age 90**

**RAJ NADARAJAH**
President & CEO

உங்கள் காப்புறுதியை நாம் உறுதி செய்கிறோம்.. **(416) 666-1120 or any Mega Agent**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TD BANK FINANCIAL GROUP

## புதிய மாற்றம்..!





**Paul Dharshan**

Manager -Residential mortgages, GTA

**Tel: 4168975941**

nithianandan.pauldharshan@td.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org